விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (20.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

## சுதந்திரக் கட்சி - பெரமுன இடையே புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்து



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

கொழும்பில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, கோத்த ▷15

## துப்பாக்கிச் சூடு சோறு சாப்பிட வேண்டுமா?
### மக்களே தீர்மானியுங்கள் – ரணில்

(கொழும்பு)

சோற்றை சாப்பிட வேண்டுமா? அல்லது துப்பாக்கிச் சூடுகளை எதிர்கொள்ள வேண்டுமா? என நவம்பர் 16ஆம் திகதி நாட்டின் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண் டும் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை லக்கல பகுதியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

உரங்களை இலவச ▷15

## பருத்தித்துறை, மன்னாரில் 400 கிலோ கஞ்சா மீட்பு
### பொலிஸார் உட்பட 5 பேர் கைது

(யாழ்ப்பாணம்)



400 கிலோ கேரள கஞ்சாவுடன் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் 221 கிலோ கேரள கஞ் சாவுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ள

## கோரிக்கைகளுடன் வந்தால்
# தமிழ்க் கட்சிகளை சந்திக்க மாட்டேன்
### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**13 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்துடன் ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து வந்தால், அது தொடர்பாக பேசத் தயாரில்லை என பொதுஜன பெர முனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்த பாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் தயாரித்துள்ள 13 விடயங் களை அடிப்படையாகக் கொண்டு நான் அந்தக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ▷15

## யாரும் என்னிடம் கேள்வி கேட்க முடியாது
### பந்துல குணவர்த்தனவுக்கு மகிந்த தேசப்பிரிய பதிலடி

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தாம் விடுக்கும் அறி வுறுத்தல்கள் குறித்து எவரும் தன்னைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்படும் வேட்பாளர்களு க்கு எதிராகக் கடுமை யான நடவடிக்கை ▷15

## மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை – சஜித்

(கொழும்பு)

பொதுமக்களின் எதிர்பார் புக்களை நிறைவேற்றுவதற்காக தாம் பொறுப்புடன் செய லாற்றவுள்ளதாக புதிய ▷15

## சந்திக்க வருமாறு பிரதமர் ரணில் விடுத்த அழைப்பை நிராகரித்தார் விக்னேஸ்வரன்
### ஐந்து கட்சிகளும் ஒன்றாக சந்திப்பதே முறை என்றும் தெரிவித்தார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமு மான நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரனை சந்திப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். ▷15

## அரச ஊடகங்கள் சஜித்துக்கு ஆதரவு
### தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன முன் னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ▷15

## வட மாகாணத்தில் மழை பொழியலாம்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் நில வும் மழையுடனான வானிலை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. ▷15

## கறுப்புப் பட்டியலிலிருந்து புலிகளை நீக்குவதற்கு
### ஐரோப்பிய நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கு வதற்கு ஐரோப்பிய நீதிமன்றம் ▷15

## இரகசிய முகாமில் இடம்பெற்ற சித்திரவதைகள் குறித்த விசாரணைக்கு கடற்படை ஒத்துழைக்க வேண்டும்
### உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

கடற்படையினர் இரகசிய தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சித்திர வதைகள் குறித்த விசாரணை களுக்கு இலங்கை-கடற்படை யினர் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நாளை திங்கட் கிழமை கடல்சார் பாதுகாப்பு சர்வ தேச மாநாடு நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இதில் கலந்து கொள்ளும் சர்வதேச பிரதிநிதிகள் இலங்கையில் உள்ள கடற்படை யினரின் இரகசிய தடுப்பு முகாம்களில் இடம் ▷15

## யாழ்., சென்னை விமான சேவை
### பல நிறுவனங்கள் முன்வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் சென் னைக்கும் இடையில், விமான சேவைகளை நடத்துவதற்கு மேலும் பல நிறுவனங் கள் முன்வரும் என்று ▷15

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்று கூடல் 2019

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் கல்லூரி நினைவு களை நினைவுகூரும் முகமாகவும், பழைய மாணவர்களிடையே புரிந்துணர்வினை வளர்க்கும் முகமாகவும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கத்தினால் ஒன்று கூடல் நிகழ்வு டிசம்பர் 2019 இல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் நிகழ்விற்கு கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய சகல பழைய மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனை வரும் கலந்து கொள்ள முடியும்.

எனவே இவ் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புகின்ற பழைய மாணவர் கள் எதிர்வரும் 2019.11.15 ஆம் திகதிக்கு முன்னராக தங்களது பதிவுகளை பின்வருவோருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | :- | திரு.ஆ.சத்தியமூர்த்தி - | 077 169 8073 |
| செயலாளர் | :- | திரு.வி.தயாபரன் - | 077 608 0926 |
| பொருளாளர் | :- | திரு.வ.பிரபாகரன் - | 077 605 1245 |
| கல்லூரியில் | :- | பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் | |

| | | |
|---|---|---|
| முகப்புத்தக முகவரி | :- | khc-osa Jaffna |
| இணைய முகவரி | :- | www.khcosa.net |

**வி.தயாபரன் - செயலாளர்**

(C-7968)



## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (712)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**



# விற்பனைக்கு

தாய்வான், கொங்கொங், சீனா, மலேசியா ஆகிய நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு இலங் கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 3 அடி தொடக்கம் 8 அடி வரை நீளமுள்ள

**Lathe Machine** (லேத் மெசின்) கள் விற்பனைக்குண்டு. இவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு : 071 648 6814**

**நாகராஜா இலட்சுமணதாசன்** (704)


## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தின் "கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவின் நினைவேந்தலும் கௌரவிப்பும், பரிசில் வழங்கலும் - 2019" இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் தென்மராட்சி ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (ம-3)

## தங்கக் குரல் 3ஆவது சுற்று நிறைவு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் தங்கக் குரல் தேர்வுக்கான 3ஆவது சுற்று நேற்றுடன் நிறைவடைந்தது.

வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வழிகாட்டலின் கீழ் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்தும் குறித்த இசைத் தேர்வின் மூன்றாவது சுற்றில் 36 பேர் பங்குபற்றிய நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)


# 1ஆம் ஆண்டு 3ஆம் ஆண்டு



பிறப்பு - 29.06.1937
இறப்பு - 31.10.2018

அமரர் **கார்த்திகேசு ஈசுரபாதம்**



பிறப்பு - 10.12.1943
இறப்பு - 19.01.2016

அமரர் **ஈசுரபாதம் பரமேஸ்வரி**

## அன்பு அப்பாவின் நினைவில்

மறைந்தும் மறையாத எம் குலவிளக்கே
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை
மறுத்தா தோட்டத்திலே தெரியுதப்பா உன் திருமுகம்
மாக்கிளையிலே உன் அழகுத் தோற்றம்

நாவுறு பாதியிலே துலாவினால் இறைத்த
உன் திருவுருவம் நாம் பிள்ளைகள் பின்னால்
கட்டி இழுத்த அந்த நிழலுருவம்
நீத்துவான் வயலிலே உன் புன் முறுவல்
விதாலியிலே உனது தலைப்பாகை

அத்தனை தோற்றமும் அழகுத் தோற்றம்
அன்பான உன் திருமுகத்தை காணாது
தினம் தினம் அழுகின்றோம்.

தம்பான் மடத்தினிலே தாலக்கனி பொறுக்கி
வண்டியிலே ஏற்றி அம்மாவும் நீங்களும்
வரும் காட்சியை எப்படி மறப்பதப்பா
வண்டிலிலே நீங்கள் ஏறிவந்தால் சிவபெருமான்
கிழப்பிராமண வடிவம் எடுத்த தோற்றமப்பா!

ஆழியாழிக் கடலுக்குள் நீங்களும் அம்மாவும்
மாவன்னை, மாடுகளும் நீந்திவரும் காட்சியப்பா
காட்டுக்குள் போய் அலம்பல் வெட்டி வந்து
கட்டுக் கட்டாய் கட்டி விற்ற காலமப்பா!

கணபதிப்பிள்ளை அப்பாவும் நீங்களும்
புத்து வெட்டுவானில் இருந்து வந்து
திண்ணைக் குந்தில் இருந்து சாப்பிட்ட
இறால் பொரியலும் வெள்ளைப் புட்டும்
ஞாபகத்துக்கு வருகுது அப்பா

எத்தனை எத்தனை சோதனைகள் வந்தாலும்
அத்தனையையும் முறியடித்து உன் பிள்ளைகளுக்கு
அயராது உழைத்து எம்மை வளர்த்த
தந்தையே உனை மறப்போமா!

ஆண்டு ஒன்று ஆனதப்பா ஆறவில்லை எம் துயரம்
எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உனது ஒவ்வொரு பொன் மொழிகள் என்
நெஞ்சை விட்டு அகலாது தெய்வமே!

கவுந்தில்,
கரவெட்டி மத்தி.

தகவல் : மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C-7969)



# பெண் உதவியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பல் கிளினிக் குக்கு பெண் உதவியாளர் தேவை (O/L)-(A/L) சித்தி பெற்றவராகவும் யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு :**
**075 486 0503, 077 311 8354, 077 852 2401** (713)



# கண்ணீர் அஞ்சலி

அமரர் **கிருஷ்ணபிள்ளை முத்துக்குமாரு**



எமது சங்கத்தின் அங்கத்தவரும் மாவட்ட சித்த மருத்துவமனை யாழ்ப் பாணம் சித்த வைத்திய அதிகாரி ராஜினி அவர்களின் அன்புத் தந்தை **கிருஷ்ணபிள்ளை முத்துக்குமாரு** அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப் பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

(715) **அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் இலங்கை**



# கண்ணீர் அஞ்சலி

அமரர் **நாகராஜா கமலலட்சுமி**



எமது சங்கத்தின் அங்கத்தவரும் இலவச சித்த மருந்தகம் ஏழாலை சித்த மருத்துவ அதிகாரி ஜீவலதா அவர் களின் அன்புத் தாயார் அமரர்

**நாகராஜா கமலலட்சுமி**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப் பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம். (714) **அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் இலங்கை**

# அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும்

## சு.கவுடனான உடன்பாட்டின் பின் கோத்தா வலியுறுத்து



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப் பட்டது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, கோத்தபாய ராஜபக்ஷவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் உரையாற்றிய கோத்தபாய,

“இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக முதலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்காக சுதந்திரக் கட்சியினருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நம்பிக்கையை பாதுகாப்பேன் என உறுதியளிக்கின்றேன்.

நாட்டின் அபிவிருத்தி, மக்களின் பாதுகாப்பு போன்ற கொள்கைகளுக்காக நாங்கள் இணங்கியுள்ளோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதற்கு முன்னரும் இப்படியான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்னுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையால், அந்தக் கட்சியின் அடையாளம் மற்றும் கொள்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறுவது முற்றிலும் தவறானது.

நீங்கள் வேறு தீர்மானத்தை எடுக்க நினைத்திருந்தால், அதனைக் கைவிட்டு எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரிடம் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றேன்.

சுதந்திரக் கட்சி என்பது எனக்குப் புதிய இடமல்ல. எமது கொள்கைகளின் அடிப்படையிலேயே இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளோம். நாட்டின் அபிவிருத்தி, பாதுகாப்பு, மக்களின் முன்னேற்றம், இளைஞர், யுவதிகளின் கல்வி, அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லுதல் போன்ற விடயங்களில் இந்தப் புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டுக்கு கல்வி கொள்கையை உருவாக்க வேண்டும். சாதாரணதரம், உயர்தரம் என்பவற்றில் சித்தியடைந்து, அதற்கு அப்பால் செல்ல முடியாத பிள்ளைகளுக்காக உரிய வேலைத்திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் நாட்டின் தேசிய வர்த்தகர்களை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயார். மனித வளம் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்றே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போதும் விரும்பியது.

அறிவை அடிப்படையாக கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். எமக்கு தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். முதலீட்டாளர்களை நாட்டுக்கு வரவழைக்க பாதுகாப்பான நாடு அவசியம். பாதுகாப்பான நாட்டை வழங்க நாங்கள் தயார்.

தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும். தனிப்பட்ட ரீதியில் அல்ல, நாட்டுக்காக அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும். அதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)

# தேர்தல் விளம்பரத்துக்கு பொறுப்பேற்க முடியாது

## இராணுவத் தளபதி மறுப்பு

(கொழும்பு)

தான் முன்னர் கூறிய கருத்து ஒன்றை ஜனாதிபதித் தேர்தல் விளம்பரத்துக்காகப் பயன்படுத்தியமைக்கு தம்மால் பொறுப்பேற்க முடியாது என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் பரப்புரை (பத்திரிகை) விளம்பரம் ஒன்றில் இராணுவத் தளபதியின் படம் மற்றும் கருத்துக்கள் என்பன இடம்பெற்றிருந்தன.

இது குறித்து ஐ.தே.க. செய்த முறைப்பாட்டையடுத்து, இவ்வாறான விளம்பரங்களை வெளியிடுவது தேர்தல் சட்ட விதி மீறல் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அத்துடன் இது குறித்து இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து ஒரு வாரத்துக்குள் விளக்கத்தை எதிர்பார்ப்பதாக்வும் அவர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், இராணுவத் தளபதி தனது நிலைப்பாட்டை விளக்கி பாதுகாப்புச் செயலருக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.



இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா,

“கோத்தபாய ராஜபக்ஷவின் பரப்புரை விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட படமும் கருத்தும் இராணுவத் தளபதியாக இருந்த போது பெறப்பட்டவையல்ல.

கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராகவும் நான் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகவும் இருந்த போது களுத்துறையில் நடந்த நிகழ்வில் வெளியிட்ட கருத்தும் படமுமே அது. தேர்தல் விளம்பரத்துக்கு எனது படமும் கருத்தும் பயன்படுத்தப் பட்டதற்கு நான் பொறுப் பேற்க முடியாது.

அதனை வெளியிட்டவர்களுடன் தான் இந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் ஏற்கனவே அறிவித்துள்ளேன். எனது விளக்கம் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு உறுதி செய்துள்ளது” என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இதுவரை 938 முறைப்பாடுகள்!

## தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சமன் தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இதுவரையில் 938 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.


தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 900 முறைப்பாடுகளும் தேர்தல் தொடர்பான வன்முறைகள் குறித்து 38 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், மாகாண சபை நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றில் வேட்பாளர் ஒருவரை ஆதரித்து வாக்குகளைக் கோருவதற்கும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆண்ணக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளை தவிர்க்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது உரிய நிறுவன தலைவர்களின் பொறுப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பான வழிகாட்டல்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 19 ஆம் திகதி வெளியிடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-2)




# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை

கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கல்லடியார் விட்டை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை நேற்று (19.10.2019) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் அருந்தவரதியின் அன்புத் தந்தையும் சிதம்பரநாதன் (சமாதான நீதவான்) அவர்களின் அன்புமாமனாரும் கபிலனின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-7971) தகவல் :- குடும்பத்தினர்.

# தெ.ஆ. அணிக்கெதிரான டெஸ்ட் ரோகித் சர்மா அசத்தல் சதம்




இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.

மழையின் குறுக்கீடு காரணமாக நிறுத்தப்பட்ட இப்போட்டியின் முதல்நாள் ஆட்ட நேர முடிவில், இந்தியா அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 224 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்ட நேர முடிவில், ரோஹித் சர்மா 117 ஓட்டங்களுடனும், அஜிங்கியா ரஹானே 83 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

ராஞ்சி மைதானத்தில் நேற்று (சனிக்கிழமை) ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதில், மாயங் அகர்வால் 10 ஓட்டங்களுடனும், செடீஸ்வர் புஜாரா ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், விராட் கோலி 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், கார்கிஸோ ரபாடா 2 விக்கெட்டுகளையும், என்ரிச் நோர்ட்ஜே 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாவது நாளை இந்தியா அணி, இன்று தொடரவுள்ளது.

# மரண அறிவித்தல்



## மாணிக்கம் நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற தலைமைத் தபால் அதிபர், யாழ். மாவட்டம்)

கொடிகாமம் கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் நாகேந்திரம் (ஓய்வு பெற்ற தலைமைத் தபால் அதிபர், யாழ்.மாவட்டம்) அவர்கள் நேற்று (19.10.2019) சனிக்கிழமை அல்வாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் -முத்தம்மா தம்பதிகளின் தலைமகனும் ஞானகலாவதி அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நிசாளினியின் பாசமிகு தந்தையும் சின்னையா -செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது மருமகனும் சிவபாக்கியம், நவரத்தினம் (உரிமையாளர், பழமுதிர்ச்சோலை கெற்பேலி), பாலசிங்கம் (பிரதி அதிபர் ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), யோகேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமாரசாமி, விமலேஸ்வரி, பாலேஸ்வரி (ஆசிரியை), குமுதினி(சுவிஸ்), சந்திரோதயம், சகுந்தலாதேவி, ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மரத்தினம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், நேசதுரை ஆகியோரின் அன்புச் சகலனும் நவநீதன் (அமெரிக்கா), நிதர்சன் (பெல்ஜியம்), நிதர்சினி, காலஞ்சென்ற நிஷாளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் குபேந்தினி (அமெரிக்கா), சத்தியகௌரி, றஜீவன், நிவேதா +திலீபன், நிரோசன், நிதர்சனா, நிகிந்தா, ராகுலன், தனுஷன், நிதுஷன், யோசிகா(சுவிஸ்), திரிஷா (சுவிஸ்), ஆகியோரின் பெரியப்பாவும் ஸ்ரீரஞ்சினி (இத்தாலி), உதயகுமார் (சுவிஸ்), சுஜாதா (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அல்வாய் தெற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அல்வாய் தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய்தெற்கு
கொடிகாமம்.

தகவல்
குமாரசாமி குடும்பத்தினர்.
(மைத்துனர்)

(C-7981)

# வெல்கம கோத்தாவுக்கு ஆதரவு வழங்குக மூன்றாவது நாளாகவும் சத்தியாக்கிரகம்

## பிக்குகள் விடாப்பிடி



(மத்துகம)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கமவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளுமாறு வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. காத்திரமான ஒரு முடிவு கிடைக்காவிடின் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் மூன்று பிக்குகள் அறிவித்தனர்.

இந்தப் போராட்டம் மதுகமவில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது. இந்த போராட்டத்தில் மூன்று பிக்குகளுடன் பொதுஜன பெரமுன பிரதேசசபை உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர். (இ-2)

# கிணற்றில் விழுந்த ஒருவர் பலி ஒருவர் வைத்தியசாலையில்

(பதுளை)

பதுளை- கந்தகெட்டிய தடயமத்தலாவ கிராமத்திலுள்ள 45 அடி ஆழமான கிணற்றில் தவறி விழுந்து ஒருவர் பலியான மற்று மொருவர் கந்தகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில், தடய மத்தலாவ பதுளுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த டீ.எம்.பியதாஸ (வயது 50) என்பவரே உயிரிழந்தார். மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த டி.எம்.ஆரியபால (வயது 41) என்பவர், ஆபத்தான நிலையில் கந்தகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இருவரும், காலை கிணற்றை இறைக்கச் சென்ற போதே, கிணற்றில் தவறி விழுந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. பிரதேச வாசிகளின் உதவியுடன் நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் கிணற்றுநீர் வெளியேற்றப்பட் டுள்ளதுடன், பிரதேச வாசிகளில் இருவர் கிணற்றுக்குள் குதித்து அவ்விருவரையும் மீட்டனர் என்று. பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-2)

# மரண அறிவித்தல்

## அமரர். சிவசண்முகம் புவனேஸ்வரி

பிறப்பு 1948 - 05 - 13



இறப்பு 2019 - 10 - 18

திருகோணமலை திரியாயை பிறப்பிடமாகவும், 1ம் வட்டாரம் கைவேலி மு/புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட அமரர். சிவசண்முகம்புவனேஸ்வரி அவர்கள் 18.10.2019 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை செல்லம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா பாக்கியம் அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற சிவசண்முகத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற கணேசானந்தம், திரு. அருளானந்தம், பரமானந்தம், நாகேஸ்வரி, இராயேஸ்வரி ஆகியோரின் உடன் பிறப்பும், நாகேஸ்வரன், கங்காதேவி, சிவனேஸ்வரன், தங்கேஸ்வரன், கங்கேஸ்வரன் (அப்பன் உதிரிகள் வாணிபம்-கிளிநொச்சி), கங்கைவேந்தன் (அப்பன் உதிரிகள் வாணிபம்-புதுக்குடியிருப்பு), பிறேமலதா, காலஞ்சென்ற குணநாயகி (சாந்தி), சுலக்ஷனா ஆகியோரின் தாயாரும், தவராணி, மல்லிகா, பரமலிங்கம், வசந்தாதேவி, செல்லம், ரூபமாலினி, சியாமினா, தேவன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரன் (அதிபர்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.10.2019 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

1ஆம் வட்டாரம், கைவேலி,
புதுக்குடியிருப்பு.

(C-7966) தகவல்: குடும்பத்தினர்

# அந்தியேட்டி அழைப்பு



## அமரர். பரமேஸ்வரி பரராஜசிங்கம்

கடந்த 23.09.2019 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர். பரமேஸ்வரி பரராஜசிங்கம் அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை 21.10.2019 திங்கட்கிழமை காலை 5 மணியளவில் மூச்சம்பலம் சிவனாலய பொன்னையா சாமியார் மடத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 23.10.2019 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் பங்குபற்றி தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக் கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர் களுக்கும், தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாக துயரில் பங்கெடுத் தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் இவ்வேளையில் உள்ளார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-7965)

**குறிப்பு:- இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"கலைக்கோயில்" சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

070 507 1411, 077 744 8702,
021 205 6603

தகவல்: குடும்பத்தினர்.

# இராசி பலன்

**மீனம்:** பேச்சில் கனிவு பிறக்கும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வளர்ச்சிப் பாதைக்கு உதவி செய்தவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மேடம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந், ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | |
| சனி, கேது | குரு | சூரி, புத, சுக் | செவ் |

20.10.2019
ஐப்பாசி 03, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி பின்னிரவு 3.19 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.38 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

வளவன்

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனை பிரார்த்திப்பீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.

**சிம்மம்:** சிறப்பான நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், தேகநலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

# விமான நிலையத்தின் பெயரை மாற்றியதை என்னால் ஏற்க முடியாது

## டக்ளஸ் கடும் எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை யாழ்ப்பாணம் விமான நிலையமாகப் பெயர் மாற்றியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அழைப்புக் கிடைத்தும் குறித்த நிகழ்வுக்குச் செல்லவில்லை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தி என்ற போர்வையில் பண்டைய காலம் தொட்டு பலாலி விமான நிலையம் எனப் பெயர் பெற்ற நிலையத்தை அப்பகுதி மக்களின் விருப்பங்களுக்கு மாறாகப் பெயர் மாற்றியதை நான் கண்டிக்கிறேன்.

இலங்கையில் எந்தெந்தப் பகுதிகளில் நீண்ட நோக்கோடு அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றதோ அந்தந்தப் பகுதிகளுக்கு குறித்த பகுதியின் பெயரே சூட்டப்படுவது வழமை.

கட்டுநாயக்கவில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அவ்வாறே இரத்மலானையில் அமைந்துள்ள நிலையத்திற்கும் அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுகம் என்பன குறித்த பிரதேசத்தின் பெயரை முன்னிலைப்படுத்தியே பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாறான நிலையில் பலாலி மக்களின் நிலங்களை இணைத்து அமைக்கப்பட்ட விமான நிலையத்துக்கு எவ்வாறு யாழ்ப்பாணம் விமான நிலையம் எனப் பெயர் சூட்ட முடியும்.

கடந்த மாதம் குறித்த பகுதி மக்களை நான் சந்தித்த போது அந்த மக்களின் விருப்பங்களை அறியாது பெயர் மாற்றப்பட்டமை தொடர்பில் என்னிடம் கவலை வெளியிட்டனர்.

எனவே அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும் பலாலி விமான நிலையத்தை மையப்படுத்தி அழைக்கப்பட்ட பலாலி வீதியை விட்டு மாற்றி நுழைவாயில் அமைத்தமையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் குறித்த நிகழ்வுக்குச் செல்லவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# யாழில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிக்க அதிக வாய்ப்பு!

## இதுவரை 74பேர் உயிரிழப்பு!

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாக அந்த பிரிவின் பணிப்பாளர் டாக்டர் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

டெங்கு நோயினால் இந்த வருடம் இதுவரை 74 பேர் உயிரிழந்தனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.

இந்த வருடத்தில் கடந்த சில மாதங்களில் 55 ஆயிரத்து 723 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த மாதத்தில் கடந்த 17 ஆம் திகதி வரையில் 3,998 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 26 ஆயிரத்து 666 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் அந்த பிரிவு தெரிவித்தது.

இதேவேளை நவம்பர் மாதம் முதல் வாரத்தில் நாடு தழுவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-2)

# வாக்களித்ததோ தமிழ் மக்கள் விசுவாசமோ ஐ.தே.க. அரசிற்கு

## கூட்டமைப்பு மீது அங்கஜன் சாடல்

(சாவகச்சேரி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு தேர்தலின் போது வாக்களித்து பேரம் பேசும் சக்தியை உருவாக்கியது தமிழ் மக்களே. ஆனால் அவர்களின் விசுவாசமோ ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சி பகுதியில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கோத்தபாய ராஜபக்‌ஷவிற்கு ஆதரவாக வாக்குக்கோரி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்று மக்களின் பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்க எண்ணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால் இன்று அந்தப் பயணம் வீணாகிப் போய்விட்டது.

ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் அனைத்தையும் ஐ.தே.க. அரசாங்கம் தடுத்து நிறுத்தியது. எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நேர்மையான எண்ணம் ஐ.தே.கவிடம் இல்லை. அப்படிப்பட்ட ஐ.தே.க. அரசாங்கத்தை த.தே.கூட்டமைப்பு தொடர்ச்சியாக தாங்கி வைத்துள்ளது.



ஐ.தே.க. அரசாங்கத்திற்கு எதிராக பல நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. வரவு-செலவுத் திட்ட ஒத்துழைப்பிற்கான நேரம், அரசாங்கத்திற்கு பிரச்சினைகள் வந்த போது என அனைத்து சந்தர்ப்பங்களிலும் த.தே.கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது.

த.தே.கூட்டமைப்புக்கு வாக்களித்ததோ தமிழ் மக்கள். ஆனால் அவர்கள் விசுவாசமோ ஐ.தே.க. அரசாங்கத்திற்கு மாத்திரம் தான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

# சர்வதேச புத்தகக் கண்காட்சி ஆரம்பம்



'Big Bad Wolf' சர்வதேச புத்தகக் கண்காட்சி இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியில் 50 தொடக்கம் 80 சதவீத விலைக் கழிவுடன் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் 28ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியை திங்கள் முதல் வியாழன் வரை முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை பார்வையிடலாம்.

அதேநேரம் வெள்ளி தொடக்கம் ஞாயிறு வரை 24 மணிநேரமும் இப் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிடலாம். (இ-2)





**கச்சாய் மகா வித்தியாலயத்தின் மூன்றாவது மாணவர் பாராளுமன்றத்தின் சத்தியப் பிரமாணமும் பதவியேற்பும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது. செயலாளர் நாயகம் கா.குணசிங்கம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சபாநாயகர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், உறுப்பினர்களென 60 பேர் சத்தியப்பிரமாணம் செய்தனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)**

# காலாவதியான கிறீம் வைத்திருந்த வர்த்தகர்கள் பிணையில் விடுவிப்பு

(கொடிகாமம்)

சாவகச்சேரிப் பகுதியில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் காலாவதியான பொருட்கள் வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. காலாவதியான வைற்கிறீம், பியூட்டி கிறீம் வைத்திருந்த வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டனர். (இ-5-114)

# மேலதிக கள் வைத்திருந்த நால்வருக்கு அபராதம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி நீதிமன்றத்தால் மேலதிகமாக கள் வைத்திருந்த நான்கு பேருக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மதுவரித் திணைக்களத்தினால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 2 லீற்றர் கள் வைத்திருந்த இருவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதமும் 2 லீற்றர் 300 மில்லி லீற்றர் கள் மேலதிகமாக வைத்திருந்த நபருக்கு ஆயிரம் ரூபாவும் 800 மில்லி லீற்றர் கள் மேலதிகமாக வைத்திருந்த நபருக்கு 500 ரூபாய் அபராதமும் சாவகச்சேரி நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. (இ-5-14)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் வை.விஜிதரனை கௌரவிக்கும் முகமாக கைதடிப் சேர்ந்த புலம்பெயர்தேசத்து உறவுகளின் ஏற்பாட்டில் பாராட்டு விழா இன்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கைதடிச் சந்தியிலுள்ள சித்தி விநாயகர் மண்டபத்தில் மா.புலேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இதில், வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மதியமுகன், யாழ்.தேசியக் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் அ.லோகநாதன் கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள்அலுவலர்வே.தபேந்திரன், சாவகச்சேரி றிபேக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், யாழ்.மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பற்குலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# ஒட்டுமொத்த தமிழர் பிரதேசங்களும் புறக்கணிப்பு

# தமிழர்களின் பொது வேட்பாளராகவே

# நான் போட்டியிடுகின்றேன்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



**(திருகோணமலை)** இலங்கையில் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் 35 ஜனாதிபதி வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள நிலையில் நான் தமிழர்களின் பொது வேட்பாளராக போட்டியிடுகின்றேன் என ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை - கேணியடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்தமாக தமிழர் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் குறிப்பாக திருகோணமலை தமிழ் சமூகம் பல்வேறுபட்ட இன்னல்களை சந்திக்கின்றது.

குறிப்பாக இப்பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமான காணிகளுக்குரிய ஆவணங்கள் இல்லாமல் இருப்பதாகவும் பலரிடம் இதனைப் பெற்றுத்தருமாறு கூறியும் இதுவரை காலமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இம்முறைத் தேர்தலில் யாருக்கும் சார்பில்லாமல் பொது வேட்பாளராக மீன் சின்னத்தில் போட்டியிடுவதாகவும் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் சர்வதேசத்திற்கும் காண்பிக்க வேண்டும் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் திருமதி. அனந்தி சசிதரன், திருகோணமலை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)


### மணமக்கள் தேவை

வெளிநாடு, உள்நாட்டிலுள்ள மணமக்களுக்கு இலங்கையிலுள்ள மணமக்கள் தேவை. அவுஸ்திரேலியா 1993, அமெரிக்கா 1983 பிறந்த பெண்களுக்கு IT படித்த மணமகன்மார் தேவை.

Viber:- 0094 767 250 144
Call:- 075 439 2715

### Canada

பத்திரிகையில் உங்களது

மணமகன்/மணகள் திருமண
விளம்பரங்கள், தொடர்மாடி
மனை, காணிகள் மற்றும் ஏனைய
விளம்பரங்களுக்கும்....



Call: 0777-555-026

FREE FRIDAY - WEEKLY

Canada's # 1 Tamil Newspaper

No. 6A, Perakumba Place, Wellawatte. flexvj26@gmail.com
4062 Ellesmere Rd, Toronto, ON Canada. 437-488-4100

### அச்சு இயந்திரம் விற்பனைக்கு

திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் சிவன் கோவில் தேர் முட்டிக்கு முன்னால் இயங்கும் அச்சகத்தில் உள்ள சைனா கட்டர் 42', கமடா அச்சு இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு.

தொலைபேசி இல:
077 716 5589,076 384 5589 (708)

### ஓட்டுநர் தேவை

ஆட்டோ, லான் மாஸ்ரர், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுக்கு லைசன்ஸ் உள்ள ஒருவர் தேவை.

விபரங்களுக்கு:
076 714 8059 (ச-7960)

### சைன் சிற்றி ஹோட்டல்

A-9 33 ஆவது லேன்
வெள்ளவத்தை
கொழும்பு-6
பட்ஜெட் ரூம்ஸ் டபுள் ரூம்ஸ்
சிங்கிள் ரூம்ஸ் பமிலி ரூம்ஸ்

தொலைபேசி இல:
071 307 3266
011 236 4523 (888)

### சைன் சிற்றி ஹொஸ்ரல் (பெண்களுக்கு மட்டும்)

A-9 33 ஆவது லேன்
வெள்ளவத்தை
கொழும்பு-6
மாத வாடகை, ரூ.15,000/=

தொலைபேசி இல:
071 307 3266
011 236 4523 (888)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி. இமன்சன்றோஜர்ஸ் கனிஸ்தியா**



2019 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று எம் தீவக மண்ணிற்கு பெருமை தேடித் தந்த யா/ஊர் புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. இமன்சன்றோஜர்ஸ் கனிஸ்தியாவை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

மேற்குத் தெரு, ஊர்காவற்றுறை.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர். (701)

### கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம் கி.பா: 8 இல் செவ்.<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சொந்ததொழில் (விவசாயம்)<br>எதிர்பார்ப்பு: படித்தபெண் சைவபோஷணம் மட்டும் (உள்நாடுமட்டும்)<br>தொ.இ: B/10184 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3 ஆம் பாதம்<br>கி.பா: 67 செவ்.7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: M.B.B.S,MD டாக்டர்<br>எதிர்பார்ப்பு:- டாக்டர் எஞ்ஜினியர் போன்ற உயர் பதவி (உள்நாடுமட்டும்)<br>தொ.இ: G/6432 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2 ஆம் பாதம்<br>கி.பா:41 செவ்.2 இல் உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: A/L(சுவிஸ்) இந்தியதான் வருவார்<br>எதிர்பார்ப்பு:ஓரளவுபடித்தபெண்<br>தொ.இ: B/10185 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4 ஆம் பாதம்<br>கி.பா: 31.25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: கணனி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் (உள் நாடு மட்டும்)<br>தொ.இ: G/6436 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1 ஆம் பாதம்<br>உயரம்:5'6" கி.பா: 64.75 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:Soft Ware Engineer (singappur)<br>எதிர்பார்ப்பு: டாக்டர் எஞ்ஞினியர் போன்ற உயர்பதவியுள்ளோர் (தற்போதுசிங்கப்பூரில் வேலை செய்கிறார் தேவையேற்படின் இலங்கை யிலும் வேலைசெய்வார்.<br>தொ.இ: B/10187 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4 ஆம் பாதம்கி.பா: 15 செவ்.12 இல' உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: M.B.B.S வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: டாக்டர் எஞ்ஞினியர் எக்கவுண்டர் (உள்நாடுமட்டும்)<br>தொ.இ: G/6461 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4 ஆம் பாதம்<br>கி.பா:செவ்.8 இல் உயரம்:172 cm<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/10188 | பிறப்பு: 1991இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1ஆம் பாதம்<br>கி.பா:14.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bachlor of Accounting Finace(Austrlai)<br>தொ.இ: G/6474 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 150 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்



(தனுஷ்கோடி)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்படயிருந்த 10 இலட்சம் ரூபா இந்தியப் பெறுமதியிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை மண்டபம் வனத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர். தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் கடத்தப்படயிருப்பதாக மண்டபம் வனத்துறை வனசரகர் வெங்கடேஷ்க்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து சேராங்கோட்டை கடற்கரைப் பகுதியில் வனத்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது கடற்கரைக்கு அருகே புலிதேவன் நகர் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சோதனை செய்த போது மூன்று பிளாஸ்ரிக் கொள்கலன்களிலிருந்து சுமார் 150 கிலோ கிராம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மீட்கப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் சர்வதேச பெறுமதி இந்திய ரூபாய் பத்து இலட்சம் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இலங்கைக்குக் கடத்தப்படயிருந்த 4 ஆயிரத்து 500 கிலோ தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகளையும் ஐந்து கடத்தல் காரர்களையும் மண்டபம் வனத்துறையினர் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5-100)

# கூட்டமைப்பின் ஆதரவு சஜித்திற்கே கிடைக்கும்

## ஐ.தே.க. எதிர்பார்ப்பு



(புத்தளம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கடந்த நான்கரை வருடங்கள் இந்த அரசாங்கம் செயற்பட்ட விதம் எந்தத் தரப்புக்கும் தெளிவானது. நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் பாரிய பிரயத்தனத்தை எடுத்துள்ளது. ஆட்கடத்தல், காணாமல் போதல், கொலை என்பன இல்லாத, நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுத்த அரசாங்கமாக இந்த அரசாங்கம் விளங்குகின்றது.

இந்தப் பொதுக் கொள்கையை ஆதரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, பொது ஜன பெரமுனவிலுள்ளவர்களுக்கும் பொருத்தமான இடம் புதிய ஜனநாயக முன்னணி தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-2)

# வாசிப்பும் யோகாசனமும்






(யாழ்ப்பாணம்)

வாசிப்பும் யோகாசனமும் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் அரிமாக்கழகத்தின் அனுசரணையுடன் அபிவிருத்தி சபை நடத்திய இந் நிகழ்வில் ஓய்வு நிலை வைத்தியர் லயன் இ.கந்தையா, தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள், கச்சாய் நூலக பொறுப்பதிகாரி திருநாவுக்கரசு, ஆசிரியர் திருமதி தமிழ்ச்செல்வி, நூலகர் திருமதி. ராதிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் மனவளக்கலை யோகா துணைப் பேராசிரியர் திருமதி. சரோஜா வளவளாராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சியை வழங்கினார்.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் திருமதி. சரோஜாவின் அனுசரணையுடன் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்தனர். (இ-114)

# ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்பராக சஜித்

## ரஞ்சன் கூறுகிறார்



(கொழும்பு)

ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்பராக சஜித்தை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அலரிமாளிகை வளாகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'செல்வந்த சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கோத்தபாய ராஜபக்ஷவை தோற்கடித்து அடிமட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வீரனான சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 51 வீதமான வாக்குகளைப் பெற்று நாட்டின் ஏழாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்பராக சஜித்தை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் ஐ.தே.கவின் ஆதரவாளர்கள் மற்றும் அவரின் தந்தையின் நிலையான வைப்பிலுள்ள வாக்குகள் நிச்சயமாக அவருக்குக் கிடைக்கும்.

அதேபோல் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகள் அவருக்கு கிடைக்கும் என்பதோடு நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் 70 வீதமான வாக்குகளும் அவருக்கே. அவ்வாறு வாக்குகள் கிடைத்தால் சஜித் பிரேமதாஸ 51 வீதமான வாக்குகளைப் பெறுவது உறுதி.

நாட்டில் செல்வந்த வர்க்கத்தினர் 30 வீதமானோரே உள்ளனர். எனவே கோத்தாவை தோற்கடிப்பது என்பது சஜித்திற்கு கஜு சாப்பிடுவது போலாகும்.

வெள்ளை வான், திருட்டு, கொலை போன்ற சம்பவங்களுடன் சஜித்திற்கு, கோத்தாவுடன் மோத முடியாது என்பது உண்மை தான் எனவும் ரஞ்சன் தெரிவித்தார். (இ-2)

# கிழக்கிலுள்ள பத்து கட்சிகள் கோத்தபாயவுக்கு ஆதரவு

## வியாழேந்திரன் தகவல்



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பத்து கட்சிகள் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளன.

ஏறாவூரில் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் இது குறித்த அறிவித்தலை வெளியிட்டார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, மக்கள் முன்னேற்றக் கட்சி, அகில இலங்கைத் தமிழர் மகா சபை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறி ரெலோ, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, கிழக்கு மீளெழுச்சிக் கழகம், ஈழப் புரட்சி அமைப்பு, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, முற்போக்கு தமிழர் அமைப்பு ஆகிய கட்சிகளே இவ்வாறு ஆதரவு வழங்கியுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வியாழேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பன முன்னரே கோத்தபாயவுக்கு ஆதரவு வழங்குவது குறித்த அறிவிப்பை வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# சீனப் பிரஜைகள் 7 பேர் கைது!

(புத்தளம்)

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சீனப் பிரஜைகள் 7 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே புத்தளம் - வன்னாத்தவில்லு பகுதியில் வைத்து இவர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (இ-2)

# சஜித்திற்கு ஆதரவாக சந்திரிகா அரசியல் காய் நகர்த்தல்!

(கொழும்பு)

பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் காய்நகர்த்தல் மூலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல முக்கிய பிரமுகர்கள் விரைவில் ஐக்கிய தேசிய முன்னணியில் இணையவுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்ளும் மக்கள் பேரணியில் இவர்கள் அனைவரும் இணையவுள்ளதாகக் கட்சித் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் எதிர்வரும் நாட்களில் சஜித் பிரேமதாஸவுடன் இணைவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷக்கு ஆதரவு வழங்கியுள்ள சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றும் நோக்கில் சந்திரிகா பல அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-2)

## ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்

# ஒன்பது குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் நிதியுதவி

(கொழும்பு)

ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக நிதி அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.

ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளைகளை பெற்றுக்கொள்ளும் அதிர்ஷ்டத்தை பெற்றபோதிலும் அவர்களை வளர்த்தெடுப்பதில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் ஒன்பது குடும்பங்களுக்கு தலா 20 இலட்ச ரூபா வீதம் நிதி அன்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் கொஸ்வத்த, தலா ஹேன பிரதேசத்தில் வசிக்கும் மெனீஷா டென்வர் தம்பதிகளுக்கு 2012 ஆம் ஆண்டில் ஒரே பிரசவத்தில் பிறந்த ஐந்து பிள்ளைகளின் எதிர்கால நலனிற்காக 25 இலட்சம் ரூபாய் நிதி அன்பளிப்பினையும் ஜனாதிபதி அவர்கள் வழங்கினார். (இ-2)

# காலாவதியான பொருட்கள் வைத்திருந்தவர்களுக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் காலாவதியான பொருட்கள் வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து காலாவதியான முகப்பூச்சு பவுடர் வைத்திருந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபாவும் எயார் பிறஸ் வைத்திருந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபாவும் டெற்றோல் வைத்திருந்த நபருக்கு 6 ஆயிரம் ரூபாவும் காலாவதியான விம் பவுடர் வைத்திருந்த நபருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-114)

# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்த ஆட்டோ

## மூன்று பேர் காயம்



(ஹற்றன்)

நுவரெலியா பிரதான வீதியில் ஹற்றன் குடா ஓயா பகுதியில் ஆட்டோ ஒன்று நேற்று முன்தினம் மதியம் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் மூவர் காயங்களுக்குள்ளான நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடா ஓயா பகுதியிலிருந்து ஹற்றன் நகரப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே குறித்த விபத்து இடம்பெற்றது.

ஆட்டோவில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே குறித்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்தனர். குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-2)

# புலிகளை முழுமையாக அழிப்பதற்காகவே யுத்தம்

## கோத்தா அறியாமல் பேசுகிறார் - பொன்சேகா

(கொழும்பு)

**நிலத்தை மீட்கும் நோக்கில் தான் யுத்தம் செய்யவில்லை என்றும் விடுதலைப்புலிகளை முழுமையாக அழிக்கும் நோக்கிலேயே தான் தனிப்பட்ட திட்டங்களை வகுத்து யுத்தத்தை வழிநடத்தியதாக முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் உரையாற்றுகையில்,

"முன்னதாக நிலத்தை மீட்கும் நோக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எமது இராணுவத்தினர் யுத்தம் செய்து நிலத்தைக் கைப்பற்றினர். எனினும், பின்னர் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி இராணுவத்தினரிடமிருந்து மீண்டும் நிலப்பகுதிகளைக் கைப்பற்றினர். இவ்வாறான நிலையில், நிலத்தை மீட்கும் நோக்கில் யுத்தம் செய்து அதனை மீண்டும் இழப்பதை விட, விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தால் மாத்திரமே மீட்கப்படும் நிலத்தைப் பாதுகாக்க முடியும் என்று நினைத்தேன்"

"தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை அவதானித்து அவர்களை எதிர்கொள்ளும் வகையில் இராணுவத்தை வலுப்படுத்த முடிந்தமையாலேயே யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்தது. 35 ஆயிரம் விடுதலைப் புலிகளில் யுத்தத்தின்போது 23 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 12 ஆயிரம் பேர் சரணடைந்தனர்."

"இராணுவத்தில் இணைந்து 35 வருடங்கள் கடமையாற்றியதால் பாதுகாப்புத் தொடர்பான தெளிவான விளக்கம் எனக்கு உண்டு. ஆனால் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவ்வாறு இல்லை. 20 வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றிய நிலையில், தனிப்பட்ட காரணம் எனக் கூறி இராணுவத்திலிருந்து விலகி அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டார்.

"யுத்தம் தீவிரமடைந்த 15 வருடங்கள் அவர் விடுமுறைக்குக் கூட நாட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. நாடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் கூட வெளியிடவில்லை. தனது சகோதரர் ஜனாதிபதியான பின்னர் நாடு திரும்பி பாதுகாப்புச் செயலாளராகிவிட்டார்.

"யுத்தத்தை பாதுகாப்புச் செயலாளரான தானே வழிநடத்தியதாக கோத்தபாய கூறுவது தவறான விடயம். யுத்தத்தை நானே வழிநடத்தினேன். மாற்றுத் திட்டங்களை வகுத்து யுத்தத்தை வெற்றிகொள்ளப் போராடினேன்"

"யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ஒரு முறை மாத்திரமே ஆலோசனையொன்றைக் கூறினார். எனினும், அவர் கூறிய விடயத்துக்கு தேவையேற்படாத நிலையில் அதனைச் செயற்படுத்த அவசியம் ஏற்படவில்லை.

"யுத்தத் திட்டங்களை நான் தனிப்பட்ட முறையில் வைத்திருந்தேன். பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் கூட முழுமையான விடயங்களை கூறவில்லை. அவ்வாறு கூறினால் ஊடகங்களில் வெளிவந்து திட்டம் சீர்குலைந்துவிடும். ஒரு வாரத்துக்குரிய விடயங்களை மாத்திரம் நான் தெளிவுபடுத்தினேன்"

"இராணுவத்தினருக்கு கூட எனது நோக்கம் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை தெரியாது. நாங்கள் வழங்கிய உத்தரவுகள் ஆவணப்படுத்தப்படவில்லை. தனிப்பட்ட முறையில் திட்டங்களை வைத்திருந்து செயற்படுத்தியமையாலேயே யுத்தத்தை வெற்றிகொள்ள எம்மால் முடிந்தது.

"5 இலட்சம் படைவீரர்களைக் கொண்டு யுத்தத்தை நடத்தியதாலேயே வெற்றிபெற்றதாக கோத்தபாய இன்னும் நம்பிக்கை கொண்டுள்ளார். உண்மையில் அவ்வளவு வீரர்கள் எம்மிடம் இருக்கவில்லை. நான் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற போது, ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இராணுவத்தினர் இருந்தனர். அதனை நான் இரண்டு இலட்சமாக அதிகரித்தேன். கடற்படை, விமானப்படை, பொலிஸார் உள்ளிட்ட சுமார் 3 இலட்சம் வீரர்களே போரில் ஈடுபட்டிருந்தனர். எனினும், 5 இலட்சம் பேர் என்றே கோத்தபாய இன்றும் நம்பிக்கொண்டிருக்கின்றார்".

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தன் மீது நம்பிக்கை வைத்து பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சராக தன்னை நியமிப்பதாக பொதுமக்களுக்கு வாக்குறுதியளித்ததாகவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

"அவ்வாறு பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படும் பட்சத்தில், நாட்டு மக்கள் அனைவரும் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் நிலையை நிச்சயமாக நான் உருவாக்குவேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)


# பல்வேறு குற்றச் செயல்களுக்கு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம்

(கொடிகாமம்)

மோட்டார் சைக்கிளில் மேலதிக நபர்களை ஏற்றிச் சென்ற நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் வருமான வரிப்பத்திரம் இல்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் பிறேக் லைற் இல்லாமல் ஆட்டோ ஓட்டிய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் வெள்ளைக் கோட்டைத் தாண்டி கார் ஓட்டிய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. (இ-5-10-114)

# ஆயிரம் ரூபா சம்பளம் ஒரு அரசியல் நாடகமே

## கோத்தா–இ.தொ.கா.உடன்படிக்கைக்கு இராதாகிருஷ்ணன் எதிர்ப்பு



(ஹற்றன்)

ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்"க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 100 ரூபாய் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது முழுக்க முழுக்க ஒரு அரசியல்நாடகமே. இதனைக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் 22 கம்பனிகளும் அறிவிக்குமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

இது தேர்தல் வாக்குறுதி மாத்திரமே என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றாக செல்வோம்" எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதி செய்யும் முகமாக மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணி இணைந்து ஏற்பாடு செய்த தேர்தல் பிரசாரக் கூட்டம் நுவரெலியா வாசிகசாலை மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அமைச்சர் இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஆர்.ராஜாராம், நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் க.சிவஞானம், வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் ஜனார்த்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில், 39 வருடங்களின் பின்பு யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது. இதன் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முதலிடம் கொடுத்துள்ளமை தொடர்பில் இனவாதக் கருத்துக்கள் வெளியிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழும் அரசகரும மொழி என்பதை இனவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு இனவாதம் பேசி தமிழர்களின் வாக்குகளும் முஸ்லிம்களின் வாக்குகளும் தங்களுக்கு தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

இனவாதத்தைத் தூண்டி அதில் குளிர்காய்வதற்கு ஒரு கூட்டம் தயாராகி வருகிறது என்பது தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது. வடக்கில் இருக்கின்ற ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து 13 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளன. இது தொடர்பாக அவர்கள் எதிர்காலத்தில் பிரதான வேட்பாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆனால் ஒரு சிலர் 13 அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக் கொண்டதாகவும் இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் பொய்யான தகவல்களை ஊடாகத்திலே வெளியிடுகின்றனர்.

இதனை முழுமையான ஒரு இனவாதச் செயற்பாடாகவே பார்க்க வேண்டும். இதனை தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்பள்ளி கல்வி தொடர்பான தேசிய கொள்கை விரைவில்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தேசியக் கல்வி ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட முன்பள்ளி கல்வி தொடர்பான தேசியக் கொள்கையை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முன்பள்ளி தொடர்பான தேசியக் கொள்கை ஒன்று இதுவரையில் நாட்டில் தயாரிக்கப்படவில்லை என்பதுடன், முன்பள்ளி கல்வியை முறைமைப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் வழிகாட்டலில் முதன்முறையாக இந்த தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஆளுநர்கள், மாகாண தலைமைச் செயலாளர்களுக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ)

# புத்தகக் கண்காட்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் "வாசிக்கும் சமூகத்தை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" புத்தகக் கண்காட்சி நாளை 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வேலணை பொது நூலகத்தில் நடைபெறும்.

வேலணை பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகர குருமூர்த்தி தலைமையில் நடைபெறும் இக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக த.கலைவேந்தன் (பிரித்தானிய ஒன்றிய வேலணை கிளை) கலந்து கொள்வார். (இ-5)

## சஹ்ரானுடன் சந்திப்பு

# ஹக்கீமை உடனடியாக கைது செய்யவேண்டும்

## பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு



(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமை உடனடியாக கைதுசெய்ய வேண்டும் எனக்கோரி சிலர் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுக் காலைமுறைப்பாடுபதிவுசெய்தனர்.

சமூக வலைதளங்களில் பகிரப்படும்; அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமுக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பு தொடர்பான தகவல்களை முன்வைத்து இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்ததன் பின்னர், ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த மிஃப்லால் மௌலவி, முக்கியமானவர்கள் வெளியே உள்ள நிலையில், ஏனையவர்கள் உள்ளே இருக்கின்றனர்.

இந்த நிலையில், ரவூப் ஹக்கீமை கைதுசெய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தினக் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் தெரிவுக்குழுவிலிருந்து ரவூப் ஹக்கீமை நீக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த முறைப்பாட்டை பதிவுசெய்து வீடு திரும்பிய சந்தர்ப்பத்தில், மாளிகாவத்தையிலுள்ள தனது வீட்டில் பொலிஸார் சோதனை மேற்கொண்டதாக மிஃப்லால் மௌலவி தெரிவித்தார்.

வீட்டில் சில கையேடுகள் இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் என்னினும், பொலிஸார் இது குறித்து எவ்வித நீதிமன்ற அனுமதியும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-2)

# அன்னத்திற்கு வாக்களிப்பதே சு.க. அழிவதைத் தடுப்பதற்கான ஒரேவழி

## அப்புஹாமி அறிவுரை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேசசபை, நகரசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமெனில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெற வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வர வேண்டும்.

மிகச்சிறந்த கொள்கையுடைய பாரம்பரிய கட்சியாக விளங்கிய சுதந்திரக் கட்சி தற்போது அழிவடைந்த நிலையிலேயேயுள்ளது. அது முற்றுமுழுதாக அழிந்து இல்லாமல் போவதைத் தடுப்பதற்கு அன்னம் சின்னத்திற்கே வாக்களிக்க வேண்டும்.

அதற்கான சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கும் தரப்பினர் எதிர்காலத்தில் பாரிய மாற்றமொன்றை உருவாக்குவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் பல்வேறு பொய்யான தகவல்கள் பரப்பப்படும். அதேவேளை நாட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவதற்கு ஒருதரப்பினர் முயற்சிப்பார்கள்.

அண்மையில் பலாலியில் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பெயர்ப்பலகையில் விமான நிலையத்தின் பெயர் முதலாவதாக தமிழ்மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றுகூறி விமல் வீரவன்ச சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றார்.

ஆனால் யாழில் அமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தின் பெயர்ப் பலகையிலும் முதலில் தமிழ் மொழியிலேயே பெயரிடப்பட்டிருக்கிறது.

எனவே இவர்கள் வடக்கில் ஒரு கதையையும், தெற்கில் வேறொரு கதையையும் கூறி நாட்டுமக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டி பிரிவினையை ஏற்படுத்துவதற்கே முயற்சிக்கின்றார்கள்.

எனவே இவ்வாறு செயற்படுபவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவுக்கு கெமுனு ஆதரவு



(மிஹியான)

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததாக இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

மிஹியான பகுதியில் அமைந்துள்ள இல்லத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து தமது சங்கத்தின் ஆதரவு குறித்து அவர் அறிவித்தார்.

தனியார் துறையாகிய தாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்க உறுதியளித்ததாக கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அவர் இவ்வாறு ஆதரவு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-2)

# ஊழல், மோசடியை ஒழிக்க சர்வகட்சி சபை

## ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து செயற்படும் - சஜித்

(கொழும்பு)

**ஊழல், மோசடி மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றை ஒழிப்பதற்காக சர்வகட்சி சபையொன்றை அமைத்து அதனை ஜனாதிபதி செயலணியுடன் இணைத்து இயங்க வைக்கத் திட்டமிட்டுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வர்த்தக சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது வர்த்தக சமூகத்தவர்களுக்கும் சஜித் பிரேமதாஸவுக்குமிடையிலான ஒரு நேரடிச் சந்திப்பாகவும் கேள்வி பதில் கலந்துரையாடலாகவும் அமைந்தது.

நாட்டில் ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும். குற்றச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அண்மைக் காலங்களில் ஊழல், மோசடிகளில் ஓரளவு குறைவு காணப்பட்டாலும் அதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் இன்னமும் இயங்கிக்கொண்டே யிருக்கின்ற னர். அவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்து வதில் நான் பதவிக்கு வந்ததும் உரிய நடவடிக்கை எடுப்பேன் எனவும் சஜித் தெரிவித்தார்.

சட்டங்களை மீறிச் செயற்படுவோர் மீது எந்தவித தயவு தாட்சண்யமும் காட்டமுடியாது. நாட்டை சுபீட்சமுள்ளதாக புதிய இலங்கையாக உருவாக்கும் எனது திட்டத்துக்கு தடைகல்லாகவிருக்கும் எந்தவித செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப்போவதில்லையென வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)



**செம்மணி இந்துமயானத்தில் இளைப்பாறு மண்டபம் திறக்கப்பட்டது. அமரர் இராசையா இராசரட்ணத்தின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த இளைப்பாறுமண்டபம் கடந்த 13 ஆம் திகதி திறக்கப்பட்டது. செம்மணி இந்துமயான சபையின் தலைவர் லயன்.சி.லட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாயன்மார்கட்டு குளத்தடிபிள்ளையார் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.மஹாலிங்கசிவக் குருக்கள், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி.சி.பத்மராஜா, வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

# வெள்ளக் காடானது சந்தைக்கட்டடத் தொகுதி

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்றுப் பெய்த மழையால் வெள்ளக் காடாக காட்சியளித்தது.

கடைத் தொகுதி மேற் பகுதியிலிருந்து மழைநீர் வழிந்து கடைக்குள் புகுந்ததால் வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் பலமுறை



செயலாளருக்குத் தெரியப்படுத்தியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இதனால் பெரும் நட்டம் ஏற்பட்டதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டனர். தற்பொழுது பெய்து வரும் மழை தீபாவளி வரை தொடர்ந்தால் தாம் கடையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இது தொடர்பில் உடனடியாக பிரதேச சபைத் தவிசாளரும் செயலாளரும் கவனம் செலுத்த வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர். (இ-5-60)

# இலங்கை மீனவர்கள் 18 பேருக்கும் நவம்பர் முதலாம் திகதிவரை மறியல்

(சென்னை)

ஆறு பைபர் படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது கடல் சீற்றம் மற்றும் மழை காரணமாக இந்திய எல்லைப் பகுதியான வேதாரண்யம் அருகே சென்றதால் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 18 பேரும் சென்னை புழல் சிறையில் நேற்று முன்தினம் வரை அடைக்கப்பட்டனர். இந்நிலையில் சென்னை எக்மோர் குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணை வீடியோ கான்பிரஸில் இடம்பெற்று எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலை நீடித்து நீதிபதி உத்தரவிட்டார். இலங்கை மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் பாம்பன் பகுதி மீனவர்கள் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-5-100)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 240 | 250 |
| தக்காளி | 160 | 150 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 120 | 80 |
| கோவா | 140 | 140 | 120 | 140 |
| கரட் | 120 | 160 | 120 | 200 |
| பூசணி | 100 | 70 | 100 | 120 |
| புடோல் | 140 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 240 | 220 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 240 | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 350 | 280 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 240 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 160 | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 80 | 90 | 120 |
| கறிமிளகாய் | 250 | 240 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | — | 80 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 | 280 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 28-40 | 30-50 |
| இராசவள்ளி | — | 600 | 400 | — |
| வெங்காயப்பூ | 350 | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | -20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 100 |

# தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர்

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு



(குருமன்காடு)

தமிழ்- முஸ்லிம் வாக்குளை சிதறடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளார்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்திருக்கின்றது. ஒரு பகுதி சிங்கள மக்கள் இனவாத ரீதியாக ஒரே கொள்கையில் இருப்பதாக தெரிகிறது. சிங்கள வாக்குகளைப் பொறுத்தவரையில் சமமாகவோ அல்லது அதிகமாகவோ கோத்தபாயவுக்கு வ்ரக் கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதாகவே கூறுகிறார்கள். எனவே தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் தான் வெற்றியை தீர்மானிக்கப் போகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குளை சிதறடிக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். இந்த சிதறடிப்புக்கள் தமிழ் மக்களை மீண்டும் ஒரு அடிமை சாசனத்தின் கீழ் கொண்டு போய் விடப்போகிறது. எனவே தமிழ் மக்கள் மிகவும் வலுவாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எவர் வென்றாலும் தமிழ் மக்களுக்கு கொள்கை ரீதியான தீர்வு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. இருந்தாலும் தற்போது இருக்கின்ற சுதந்திரமான, ஜனநாயகமான வாழ்வுரிமையையும் இழந்து விட்டு நடு றோட்டில் நிற்க முடியாது. இதனால் காத்திரமான முடிவுகள் எடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்கள் கூட கடந்த ஆட்சியில் அடக்கப்பட்டார்கள். தண்ணீர் கேட்டு போராடியவர்களைக்கூட தாக்கியிருந்தார்கள். இவற்றையெல்லாம் சிங்கள மக்கள் மறந்து போனால் அவர்களும் அடக்குமுறைக்குள் தான் தள்ளப்படுவார்கள் என மேலும் தெரிவித்தார். (9-250)

# முன்னாள் போராளிகளை சந்தித்த நாமல்





(நெளுக்குளம்)

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வடகிழக்கு பகுதியில் தேர்தல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வகையில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கும் முன்னாள் போராளிகள் மற்றும் பிரதேச மக்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று வவுனியா நெடுங்கேணி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, முன்னாள் சிங்கள பிரதேச சபை உபதவிசாளர் வசந்த ராஜகருணா, பொதுஜன பெரமுன, பொதுஜன பெரமுனவின் தமிழ் மக்கள் இணைப்பாளர் பிரேம், கட்சியின் செயற்பாட்டாளர் ஜனக நந்தகுமார மற்றும் போராளிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)




## முல்லை.தென்னிந்தியன் குளம் கிராமத்தில்

# போக்குவரத்து வசதி இன்மையால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு தென்னியன் குளத்திலிருந்து மல்லாவி மத்திய கல்லூரி, கோட்டை கட்டிய குளம் ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் போக்குவரத்து வசதிகள் இன்றி அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தென்னியன்குளம் கிராமத்தில் தற்போது 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் மேற்படி கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமையாலும் பிரதான வீதி புரமைக்கப்பாடமையாலும் இங்கு வாழும் மக்கள் அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமத்திலுள்ள தென்னியன்குளம் தமிழ் வித்தியாலயம் தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இயங்கி வருவதனால் தரம் ஒன்பதிற்கு மேற்பட்ட வகுப்புக்களில் கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் சுமார் 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள மல்லாவி மத்திய கல்லூரி மற்றும் கோட்டை கட்டியகுளம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையிலும் இந்தக் கிராமத்திற்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமை, அதே போல் அக்கராயன் துணுக்காய் வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் தினமும் மாணவர்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அம்பலப் பெருமாள் சந்தியில் இருந்து துணுக்காய் வரைக்குமான 23 கிலோமீற்றர் தூரம் எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலையில் 5 வரையான கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதுடன், இந்தப்பகுதிகளில் இருந்து அன்றாடம் பாடசாலைகளுக்குச் செல்லும் எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கஷ்டங்கைள எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-315)





கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் சிறுவர் மாதிரிச் சந்தை நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. மாணவர்கள், பெற்றோர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது. மாதிரிச் சந்தை நிகழ்வில் மாணவ வியாபாரிகள் 1ம், 2ம், 3ம் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- அக்கராயன் செய்தியாளர்)

## கிளிநொச்சி பொன்னகர் பகுதியில்

# தொழில்வாய்ப்பின்றி அல்லலுறும் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் அதிகளகான குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வாழ்வாதாரமின்றியும் பெரும் கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர்பிரிவின்கீழ் உள்ள பொன்னகர் பகுதியில் சுமார் 621 குடும்பங்களைச்சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரதேசத்தை அண்மித்து இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் பழச்சாறு உற்பத்தி நிலையம் என்பன காணப்படுகின்ற போதும், மேற்படி மக்கள் தொகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதனால் கூடுதலான குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் நுண்நிதிக்கடன் நிறுவனாங்களிடமிருந்து கடன்களை அதிகூடிய வட்டிக்குப் பெற்று அதனை மீளச் செலுத்த முடியாமல் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் இதனால் பலர் தற்கொலை முயற்சிகளில் கூட ஈடுபட்டுள்ளனர் என்றும் பிரதேச பெண்கள் அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இவ்வாறு குறித்த பிரதேசத்தின் குறைந்தளவு நிலப்பரப்புக்களைக் கொண்ட காணிகளிலேயே இந்த மக்கள் குடியிருந்து வருகின்றனர். இதனால் சுய தொழில் நடவடிக்கை எதனையும் செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது என்றும் இவ்வாறான குடும்பங்கள் வருமானமற்ற குடும்பங்களாக காணப்படுவதுடன், அதிக தேவைகளை கொண்டவர்களாக காணப்படுவதனால் இவ்வாறு கடன்களைப் பெற்று பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (9-315)

தேவையில்லாதவற்றை விலைக்கு வாங்கினால்
தேவையுள்ளவற்றை விரைவில் விற்க நேரிடும்.
- பெஞ்சமின் ஃபிராங்கிளின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வளவெல்லாம் வடலி என்றால் தீயினால் ஊர் எரியுமே

பனை எங்கள் வடபுலத்தின் வளம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பனை மரத்தை கற்பகதரு என்று நம் முன்னோர்கள் போற்றினர்.

அதற்குக் காரணமும் உண்டு. நம் மூதாதையர்கள் பனை மரத்தால் சீவியம் நடத்தியவர்கள். பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், புளுக் கொடியல் என்பன அன்றாட உணவாயிற்று.

காலையில் ஒடியல் பிட்டு, மதியம் ஒடியல் கூழ் என்றவாறு எங்கள் சீவியத்தோடு கலந்த பனையின் இதர பாகங்கள் அனைத்தும் எங்கள் வாழ்வியலுக்காயிற்று.

பனையோலைப் பாயும் குருத்தோலைப் பாயும் எங்கள் அலங்காரப் பஞ்சணைகள். குருத்தோலைக்குச் சாயம் காய்ச்சி அலங்காரமாய் இழைக்கின்ற குருத்தோலைப் பாயின் அழகுக்கு நிகர் ஏதுமில்லை.

தவிர, பனை ஓலையால் வேய்ந்த வீடு இயற்கையால் குளிரூட்டப்பட்ட வாசஸ்தலம். இது மனிதர்களுக்கு மட்டுமல்ல. பாலைப் பொழிந்து தரும் பசுக்கள் கட்டப்படும் மால்களும் பனை ஓலையால் வேயப்பட்டு வெப்பம் தணிக்கக் கையாண்ட நுட்பத்தின் பெருமை சொல்லி மாளா.

வைரப்பனை பார்த்து பாய்ச்சு மரம் வெட்டி நாத்தியில் சிற்ப வேலை செய்து நாற்சார வீடு கட்டி வாழ்ந்த காலம் போயிற்று.

இப்போது ஆலயங்களில் இருக்கின்ற பனை மரத்துக் கூரைகளைக் கழற்றி எடுத்து முழுமையும் சீமெந்து கொங்கிறீற் போடுகின்ற காலமாயிற்று.

பனையோலைப் பாயும் நெல் வயலில் விரிந்து கிடக்கும் களப்பாயும் அருங்காட்சியகங்களிலும் காணமுடியாப் பொருட்களாயிற்று.

இப்போ பனம் பழங்கள் மாடுகளுக்கும் தேவையற்ற பண்டமாயிற்று. இந்நிலையில் பனை வளம் காக்க பிறர் வளவெல்லாம் வடலி வளர்க்கும் பண்பாடு அரங்கேறி இருக்குது.

அவனவன் தன் சொந்த வளவில் நிற்கும் வடலிகளை அகற்றி நிலத்தைச் சுத்தப்படுத்தலாமென்றால் வடலி அழிக்கத் தடையாம்.

யதார்த்தம் புரியாதவர்கள், வளவெல்லாம் வடலி வளர்க்கச் சட்டம் போடுகிறார்கள். பனை வளத்தைப் பாதுகாப்பதாயின் பொது நிலத்தில் அரச காணிகளில் பனை விதை போட்டு வடலி வளர்த்து பனையாக்குக. இடமுள்ள வீதியின் இரு மருங்கிலும் வடலி செய்க.

இதைவிடுத்து அவனவன் காணியில் இருக்கின்ற வடலியெல்லாம் வளம் என்றால் வடலி தான் வளருமா? பனைதான் உருவாகுமா? காணிக்குள் நுழையத்தான் முடியுமா? வேலி போடலாமா? எல்லை கட்டலாமா? எதைத்தான் செய்ய முடியும்.

நிலம் பல உள்ளவன் இதனையே சாட்டாக்கி காணியைத் துப்புரவாக்காமல் வடலி வளர்க்க, அயல் வீட்டு ஏழை என்ன செய்வது.

வடலி எதுவும் செய்யாது. ஆனால் பாம்புகள் குடியிருக்கவும் நுளம்புகள் பெருகவும் அதுவே நிலையமாகலாமல்லவா?

என் வீட்டில் உள்ள பனை ஒன்று தறிக்க 200 ரூபாய் கட்டணம். ஏன்? எதற்கு? என்றால் பனை விதை நாட்டவாம். அப்படியானால் எங்கெல்லாம் பனை விதை நாட்டினீர்கள். ஒரு கணக்குக் காட்டலாமே.

மற்றவன் வளவு முழுவதும் வடலி வளர்த்தால் காற்றினில் அள்ளுண்டு வரும் ஒரு தீப்பொறியும் அந்த ஊரையே எரித்து நீறாக்குமல்லவா.

ஆகையால் அவரவர் காணியை துப்புரவு செய்யத் தூண்டுங்கள். அதுவே சுகம் தரும். பொறுப்புடைய நீவிர் ஒழுங்காய், வண்ணமாய், வடிவாய், பனை விதை நட்டு வடலி வளர்த்து பனை வளம் பெருக்குக.

அதுவே நிலைத்த பனை அபிவிருத்தியாம்.

# ஜனாதிபதியாவதற்காகப் போட்டியிடவில்லை

## ஜனாதிபதி வேட்பாளர் ஹிஸ்புல்லா விளக்கம்

(அக்கரைப்பற்று)

மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் உயிருடன் இருந்திருந்தால் அவரும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருப்பாரென ஜனாதிபதி வேட்பாளர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதற்காக இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. மாறாக ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காகவே போட்டியிடுகின்றேன்.

குறிப்பாக பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும் என்றும் கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களின் முடிவுகளின் பிரகாரம் வெற்றிபெற்ற வாக்குகளின் வித்தியாசம் 2 தொடக்கம் 2.5 இலட்சங்களாகத் தான் உள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எனும் இருபெரும் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க முடிவு செய்துள்ளன.

இது வடக்கு, கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இல்லை.

இதனாலேயே இந்தத் தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-2)

## கோத்தாவுக்கு ஆதரவு தெரிவித்து

# வவுனியாவில் ஈ.பி.டி.பி யின் பிரசாரக் கூட்டம் தேர்தல் திணைக்களத்தால் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா தாலிக்குளம் பகுதியில் இடம்பெறவிருந்த ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாயவுக்கு ஆதரவாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் தேர்தல் திணைக்களத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தாலிக்குளத்தில் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நேற்று அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் பிரசாரக் கூட்டம் இடம்பெற்றது.

இந்நிலையில், குறித்த கூட்டத்திற்கு வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் இருந்து சென்ற உத்தியோகத்தர்கள் பிரசாரக் கூட்டத்தினை இடைநிறுத்துமாறு தெரிவித்தனர்.

குறித்த பிரசாரக் கூட்டத்திற்கு தேர்தல் திணைக்களத்திடமிருந்து உரிய முறையில் அனுமதி பெறப்படவில்லை என தெரிவித்தே கூட்டம் இடைநிறுத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மீண்டும் திரும்பிச்சென்றிருந்தனர். இதனால் அங்கு சற்று நேரம் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. (ம-3,250,299)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

இல்லை என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்றும் ஒருநாளும் சொல்லாதீர்கள். ஏனெனில் நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். உங்களுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும்கூட உங்களுக்கு ஒரு பொருட்டல்ல. நீங்கள் எதையும் எல்லாவற்றையும் சாதிக்க முடியும். சர்வ வல்லமை படைத்தவர்கள் நீங்கள். -சுவாமி விவேகானந்தர்

# சங்கத்தானைப் பகுதியில் மோ.சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -சங்கத்தானைப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் பல்சர் ரக மோட்டார்சைக்கிளில் பயணித்த மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 18வயதான வீரபத்திரசர்மா திருபரன் என்ற இளைஞனே கால், கை மற்றும் கழுத்து பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்-சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3.30)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உணவும் மருந்தும்



"நீ ஜீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்".

எனவே, சுத்தமானதும், எளிமையானதும், சத்து நிறைந்ததுமான உணவு வகை அன்றாடம் நமது உடலுக்குத் தேவை. காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றையும் மிதமாகக் கொள்ளவேண்டும்.

உணவில் அளவும் தரமும், முறையும் தவறினால், நோய்கள் உண்டாகும். அவ்வப்போது தக்கபடி மருந்து எடுத்துக் கொண்டால் சரியாகி விடும் என்று இலேசாக நினைப்பதும் சரியன்று.

மருந்து என்றால் என்ன? மனிதன் ஆற்றும் தவறான செயல்களால் நோய் உண்டாகிறது. அந்நோய்களைச் சமன் செய்ய, ஏற்ற ஆற்றல் உடலிலேயே இயற்கை அமைத்திருக்கிறது. ஒரு சமயம் உடலில் நோய் தீர்க்கும் ஆற்றல் வலுவற்றதாக இருந்தால், அந்த ஆற்றலை ஊக்கி விட ஏற்ற பொருட்களே மருந்து ஆகும். உயிர் ஆற்றலுக்கு உந்து சக்தி என்பது வழக்கு.

அவ்வாறான உந்து ஆற்றலுக்குத் துணையாய் உந்தும் ஆற்றலைத் தான் மருந்து என்று கூறுகிறோம். மருவி வந்த மகளை மருமகள் என்பது போல, மருவி வந்த மகனை மருமகன் என்பது போல, மருவி உந்து ஆற்றலை மருந்து என்று வழங்குகிறோம். மருந்தின் உபயோகம் வேறு வழியின்றி ஒரு குறுகிய காலத்தில் சிறு அளவில் மட்டும் தான் பொருத்தமானது. ஏனெனில் சில மருந்து வகை, ஒரு நோயைக் குணப்படுத்தி வேறொரு நோயை உண்டுபண்ணக் கூடியதே. இதைத் தவிர்க்க இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் செரிமானமான பின்னரே அடுத்த உணவு கொள்ளலாகும்.



மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் தேசிய ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்த மாணவியைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது. மீசாலை மேற்கு கரும்பி மாவடி முருகன் ஆலய முன்றலிலிருந்து விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு மேலைத்தேய வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.ராஜசீலன் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி. கி.பிரதீபா, தென்மராட்சி ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தா, பழைய மாணவர் சங்க செயலாளர் க.ரஜனிகாந்தன், பளுதூக்கும் பயிற்றுவிப்பாளர் ஆர்.விஜயபாஸ்கர், விளையாட்டு உத்தியோகத்தர்களான சி.சதுர்சன், கே.கஜேந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க)

# வனஜனின் ஹற்றிக்கோல் கைகொடுக்க வெற்றியைப் பதிவு செய்தது கொலின்ஸ் அணி




பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்று போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து சக்திவேல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:00 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணி வெற்றி பெற்றது.

கொலின்ஸ் அணி சார்பாக வனஜன் மூன்று கோல்களை பெற்று கொடுத்தார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வனஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது வேரவில் கலைமகள் அணி



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் செம்பியன்பற்று பிலிப்நேரீஸ் அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் கலைமகள் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

கலைமகள் அணி சார்பாக றஜீவ், தமிழ் மாறன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தமிழ் மாறன் தெரிவு செய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# திருநகர் அணியை வெற்றி கொண்டு அரையிறுதிக்கு முன்னேறியது செந்தமிழ்



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து திருநகர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

செந்தமிழ் அணி சார்பாக யூட் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார். (க)

# சுழிபுரம் விக்டோறியன்ஸ் அணி வெற்றி



சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சினேகிதபூர்வ போட்டியொன்றில் நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்துடன் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் அண்மையில் விளையாடியது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அவ் அணி ஐந்து விக்கெட்டுகளை இழந்து 270 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக கஜேந்திரன் 73 ஓட்டங்களையும் பிரஷாந் 70 ஓட்டங்களையும் குவிக்க பிரதீஷ் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் கிரிஷாந் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

271 என்ற ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களை மட்டுமே பெற்று 161 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

விக்ரோறியன்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் லதீஸ், செந்தூரன், கிரிஷாந், வியஜகுமார் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைபற்றினார்கள். (க)

## சுதந்திரக் கட்சி...

பாய ராஜபக்ஷ இருவரும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஏற்கெனவே புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டிருந்தது.

இந்த நிலையில், கோத்தபாய ராஜபக்ஷவுடன் நேற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ தனியாக அரசியல் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடுவது இதுவே முதல்முறையாகும். (ம-3)

## யாரும் என்னிடம்...

எடுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

தேர்தல் பிரசாரத்திற்கு யுத்த வெற்றியைப் பரப்புரை செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அவ்வாறு எந்தச் சட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதை விளக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கேள்வி எழுப்பியிருந்தார். இதுபற்றிக் குறிப்பிட்ட ஆணைக்குழுவின் தலைவர்,

தேர்தல் சட்ட விதிகள் பற்றித் தம்மிடம் எவரும் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லையென்றும், அவற்றுக்குப் பதில் அளிப்பதைவிடுத்து, விதிகளை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

வேட்பாளர்கள் வேண்டுமானால், எனது அறிவுறுத்தலுக்கு எதிராக நீதிமன்றத்தை நாட முடியும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ம-3)

## மழை பொழிய...

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் அளவில் மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## கறுப்புப் பட்டியலி...

தீர்மானித் துள்ளது.

இலங்கை அரசாங்கம் இதுவரையிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய நீதிமன்றத்தில் எவ்வித குற்றச்சாட்டும் முன்வைக்காத நிலையில் குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மேலும், கறுப்புப் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை நீக்கினாலும் கூட இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஹமாஸ் அமைப்பு குறித்த பட்டியலில் இருந்து நீக்கப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## அரச ஊடகங்கள்...

ஆகியவற்றின் ஊடக பிரிவு பிரதிநிதிகள் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு அரச ஊடகங்கள் அதிக ஆதரவை வழங்குவதாக தெரிவித்தே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை பாராளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப்பெரும, சுசில் பிரேமஜயந்த மற்றும் வீரகுமார திசாநாயக்க ஆகியோர் பதிவு செய்துள்ளனர். (ம-3)

## பருத்தித்துறை...

னர்.

அத்துடன், இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னாரில் 180 கிலோ கேரள கஞ்சாவை சொகுசு ஜீப் ரக வாகனத்தில் கொண்டுசென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இழுப்பைக்கடவாய் பகுதியில் உள்ள வீதித் தடையில் வைத்து குறித்த வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தியபோது, இந்தக் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேநபர்களுள் ஒருவரான பொலிஸ் அதிகாரி, மொனறாகலை - மெதகம பொலிஸ் அலுவலகத்தில் பணியாற்றுபவர் என்றும் கடற்படை பேச்சாளர் கூறியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டபோது, குறித்த பொலிஸ் அதிகாரி, பொலிஸ் சீருடையில் இருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3,10,60)

## இரகசிய முகா...

பெற்ற சித்திரவதைகள் குறித்த விசாரணைகளுக்கு இலங்கை கடற்படையினர் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற சர்வதேச அமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

கடற்படையினரின் புலனாய்வு பிரிவினர் இவ்வாறான சித்திரவதைகளில் ஈடுபட்ட வேளை கடற்படையின் புலனாய்வு பிரிவின் இயக்குநராக பணியாற்றிய இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டெனவின் அமர்வை சர்வதேச பிரதிநிதிகள் புறக்கணிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

2008- 2009 இல் 11 பேர் இலங்கை கடற்படையின் விசேட புலனாய்வு பிரிவினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட் டமை குறித்து இலங்கையின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா, கடற்படையினர் மேற் கொண்ட குற்றங்களில் இது ஒரு சிறிய பகுதியே எனவும் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரின் பல முகாம்களில் இடம்பெற்ற சட்ட விரோதமாக தடுத்து வைத்தல், சித்திரவதைகள், காணாமற் போகச் செய்யப்படுதல் ஆகியவற்றுடன் கடற்படையின் பல தளபதிகளுக்கு தொடர்புள்ளது. அல்லது அவர்கள் அதனை அறிந்திருந்தனர் என தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா இவர்கள் குறிப்பிட்ட முகாம்களின் தலைமை அதிகாரிகளாக விளங்கியதுடன் இந்த குற்றங்களில் ஈடுபடுமாறு உத்தரவையும் வழங்கியிருந்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மாநாட்டை நடத்துபவர்களில் ஒருவரான இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டென 2011 முதல் 2013 வரை கடற்படையின் புலனாய்வு பிரிவின் இயக்குநராக இருந்தார். 2012 நடுப்பகுதி வரை குறிப்பிட்ட முகாமை கடற்படையின் புலனாய்வு பிரிவினர் இயக்கி வந்தனர்.

புலனாய்வு பிரிவின் இயக்குநர் என்ற அடிப்படையில் இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டென இது குறித்து தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினருடன் கடல்சார் பாதுகாப்பு குறித்த பேச்சு வார்த்தைகளுக்காக கொழும்பு செல்லும் உலக நாடுகளின் கடற்படை அதிகாரிகள் சர்வதேச நியாயாதிக்கத்தை கொண்ட சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்தில் தங்கள் நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதை மறந்துவிடக்கூடாது எனவும் ஜஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## சந்தி...

எனினும் அந்த அழைப்புக்குப் பதிலளித்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்திப்பதாயின் ஐந்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றாக சந்திப்பது என உடன்பட்டுள்ளேன்.

எனவே ஐந்து தமிழ் கட்சிகளையும் ஒன்றாக அழைக்கும் பட்சத்தில் தானும் அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள முடியும். மாறாக தங்களை எனது கட்சி தனியாகச் சந்திப்பது நாம் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறுவதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகள் சிலவற்றைத் தனித்தனியாகச் சந்தித்திருந்ததுடன் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாத நிலையில் நேற்றும் சந்திப்புக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஐந்து கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சந்திப்பது என்ற உடன்படிக்கையை சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததையடுத்து விரைவில் அத்தகைய சந்திப்பை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## துப்பாக்கிச் சூடு

மாக வழங்குவதாகவும் வரிகளை குறைப்பதாகவும் கூறுகிறார்கள். எனக்கு ஒன்றே ஒன்றுதான் கேட்க வேண்டியிருக்கின்றது. உங்களின் ஆட்சிக் காலத்தில் ஏன் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாமல் போனது?

நாட்டின் வாக்காளர்கள் ஒரேயொரு தீர்மானத்தைதான் மேற்கொள்ள வேண்டும். சோற்றை சாப்பிட வேண்டுமா? அல்லது துப்பாக்கிச் சூடுகளை எதிர்கொள்ள வேண்டுமா? என்று நவம்பர் 16ஆம் திகதி நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்" என மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## தமிழ்க் கட்சி...

மாட்டேன். அதில் எந்தப் பயனும் இல்லை. இது தான் இந்த நாட்டின் பிரச்சினை. இப்படித்தான் மக்களை ஏமாற்றுகின்றனர்.

இந்த 13 விடயங்கள் குறித்து பேசிப் பயனுள்ளதா? வடக்கு கிழக்கை இணைக்க கோருகின்றனர். ஒற்றையாட்சியை நீக்குமாறு கோருகின்றனர். இவற்றை செய்ய முடியுமா? யாராலும் செய்ய முடியாது.

கடந்த 72 வருடங்களாக இதனையே செய்து வருகின்றனர். தற்போதும் இதனையே செய்ய முயற்சிக்கின்றனர். இது வொரு பொய் முயற்சி. நான் யதார்த்தத்தையே பேசுவேன். இந்த 13 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களை சந்திப்பதற்கு கூடத் தயார் இல்லை.

பிரச்சினைகளுக்கு தீர்வு என்னவென்று கேட்டால் அதற்கு பதிலளிக்க தயார். அப்படியாயின் தமிழ்க் கட்சிகளை சந்தித்து பேசலாம். ஆனால் 13 விடயங்கள் தொடர்பாக பேச மாட்டேன். இந்த ஆவணத்தில் உள்ள விடயங்களை பேசுவதற்குத் தயார் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன? என்னால் என்ன செய்ய முடியும் என்று கேட்டால் அதற்கு நான் பதிலளிக்க தயாராக இருக்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மக்களின் வாழ்க்...

ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாத்தளை லக்கல புதிய நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

## யாழ்., சென்னை...

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் எச்எம்சி.நிமலசிறி தெரிவித்துள்ளார்.

"யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், நவம்பர் முதலாம் திகதி, தொடக்கம் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில், விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு செல்ல 50 நிமிடம் தொடக்கம் ஒரு மணித்தியாலமே தேவைப்படும் என அவர் கூறினார். (ம-3)


செவன
திகதி 19/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 228
B 23 28 35 47

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 19-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2275
Y 27 48 64 71

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19.10.2019
சீட்டிழுப்பு இலக்கம் 984
X 9 9 5 2 9 8

சுபிரி வாசனா
திகதி 19/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1470
18 5 10 38 65 28 68

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1060
சீட்டிழுப்பு திகதி 19.10.2019 சனிக்கிழமை
B 17 53 60 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,618,444/=

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 766
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,004,995/-
12 14 32 58 W
9629

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3250 திகதி: 2019.10.19 சனிக்கிழமை
பச்சை
28 30 68 73 H 33
65,681,720/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19/10/2019 வெற்றி வாரம் 2652 வர்ணம் இளம் நீலம்
மகரம் 03 05 15 41
ரூ. 2,453,274
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# அமைதியான ஜனநாயக தேர்தல் இலங்கைக்கு உலக நாடுகள் பாராட்டு

(கொழும்பு)

ஜனநாயகம் மிக்க தேர்தல் முறைமையை பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை தொடர்ச்சியாக பேணி வருவது தொடர்பாக ஜனநாயக நாடுகள் இலங்கையை பாராட்டியுள்ளன.

இலங்கை வந்துள்ள நெதர்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஸ்டெப் புளக் நேற்று சனிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு மற்றும் பிராந்திய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சி சார்பின்றி தான் செயற்படப்போவதாக தெரிவித்த ஜனாதிபதி, இந்த தேர்தல் அமைதியான, ஜனநாயகம் மிக்க, ஊழல் மோசடியற்ற தேர்தலாக அமைவதற்கு தன்னால் உத்தரவாதமளிக்க முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பக்கச்சார்பற்ற சுயாதீன மானதேர்தல்ஒன்றை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும்ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, ஏப்ரல்-21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்த நெதர்லாந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளின் போது சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் தேவை குறித்தும் கலந்துரையாடினார். (ம-3)


**CUSTOMER SERVICE EXECUTIVE VACANCY**

- GOOD COMMUNICATION SKILLS IN ENGLISH IS MUST
- PROVEN CUSTOMER SUPPORT EXPERIENCE
- STRONG PHONE CONTACT HANDLING SKILLS AND ACTIVE LISTENING
- CUSTOMER ORIENTATION AND ABILITY TO RESPOND DIFFERENT TYPES OF CHARACTERS
- EXCELLENT COMMUNICATION SKILLS
- ABILITY TO WORK DAY AND NIGHT SHIFT

(717)

**077 678 8819 / 021 222 7077**
**careers.penguin@gmail.com**

## வேலையாட்கள் தேவை

யாழ் மாவட்டத்தில் உள்ள அழகு கலை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

அழகு கலையில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பயிற்சி பெற விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும். **076 071 9075, 077 899 1833**

(C-7970)

## வேலைவாய்ப்பு

- லொத்தர்ரிக்கட் விற்பனையாளர் தேவை ஆண்கள்
- அலுவலக பணியாளர் தேவை பெண்கள் (18 - 35 வயது வரை)

தேசிய லொத்தர் விநியோக முகவர்
யாழ் நகர் மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(718)

தொடர்புகளுக்கு : 077 122 8841 / 021 221 5777

## அமெரிக்க அதிஸ்ட விசா- இன்னும் 13 நாட்களே உள்ளது



2021ல் நீங்களும் அமெரிக்காவில்...

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச் செல்லலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பகுதிநேரம்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் 55000

0768226241 இலவச விசாக்கள்

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் நிரந்தர அதிஷ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்திற்கு எனது நன்றிகள்.

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

உடனே விரையுங்கள்



பானுதரன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

(C-7947)

02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை

**V2 Travels**

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. உணவு பரிமாறுபவர்கள்
2. இடியப்பம் தயாரிப்பவர்கள்
3. மரக்கறி வெட்டுபவர்கள்
4. பில் கிளாக்
5. மேற்பார்வையாளர்
6. சுத்திகரிப்பாளர்
7. அலுவலக உதவியாளர்(பெண்கள்)
8. சுகாதார தொழிலாளர்
9. களஞ்சியக் காப்பாளர்
10. ஏனைய சமையல் பகுதிக்கும்

யாழ் மாநகர சபையில் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு சுத்திகரிப்பாளர், மேற்பார்வையாளர் அனுபவப்படி அந்த தொழில் வாய்ப்புக்களுக்கு அமைய வேலை வழங்கப்படும்.

**7/4, யாழ் வீதி, யாழ்ப்பாணம்**

(714)

**077 791 7753 / 021 222 2373**

## வாடகைக்கு



சகல கட்டிட வேலைகளுக்கான பொருட்கள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| Jack | Pipes | Breaker |
| Grinder | Concvete Mixev | Rammer |
| Scoffolding | Hoist | Dviller |

(707)

தொடர்புகளுக்கு : Vasantham Constraction
0771144102 / 0766214219

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-7910)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## வீடு வாடகைக்கு

யாழ்.வேம்படி வீதியில் ஒரு அறை, வரவேற்பறை, குளியலறை, சமையலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(633)

தொடர்பு:-
**077 127 9784**

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி* - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

(C-7539)

0768226240

V2 TRAVELS

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னப்பு தவராசா
(மெக்கானிக் தவம்)

மண் மகிழ 10.10.1944
கண் நெகிழ 31.10.2018
திதி 20.10.2019

அவர்களின் ஆண்டு திவச நிகழ்வு இன்று 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தயவு செய்து பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தரவும்.

7/3 கற்குளலேன், யாழ்ப்பாணம்.

இங்ஙனம் : குடும்பத்தினர்
மகன் : த.கருணாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கணித பாட ஆசிரியர் - தனியார் கல்வி நிறுவனம்)
த.தயாபரன் (ஆசிரிய ஆலோசகர் - தீவக கல்வி வலயம்)
077 711 7426

(713)


## காணி விற்பனைக்கு

தாவடி பிள்ளையார் கோவிலில் இருந்து 200m தூரத்தில் 12 நிலப்பரப்புக் காணி முழுவதுமாகவும் பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு.

(649)

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
**077 775 6448**

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 766 0396

(705)

## பணியாளர்கள் உடன் தேவை

கிளிநொச்சி, பரந்தனில் உள்ள Hotel திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

01. பிரதான கணக்காளர் – கிளிநொச்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. சமையலாளர் – (Chef) இந்தியன் உணவு வகைகளில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்.
03. Waiter (வெயிற்றர்)

(706)

தொடர்புகளுக்கு :
076 696 2713 / 077 766 0396


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி


சங்குநாதம்

Viber 076 636 3378

நாதம் 239

வள்ளுவர் ஆண்டு 2050 | 20.10.2019 | தொலைபேசி : 021 222 3378










## யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ..

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. கங்காணி கார்த்திகேயனைத் தவிர ஏனைய மாநாட்டு உறுப்பினர்கள் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆன்மீகப் பணியாற்றிய சிவத்திரு காசிநாதர் சிவபாலன் அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். துறவறத்தில் நின்று தவவாழ்வு வாழ்ந்த அவரின் மறைவுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் கடந்த 17 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2019 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தைத் தரமுயர்த்தி அதனை யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்ற பெயருடன் ஆரம்பித்து வைத்துள்ளமை, எங்களுக்குப் பெருமை தருகின்ற விடயம்.

குறிப்பாக இந்தியாவுக்கு ஆன்மீகப் பயணம் செய்யும் நம்மவர்களுக்கு யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஒரு பெரும் வரப்பிரசாதம் என்றுதான் கூற வேணும்.

**மூப்பர்:** எண்டாலும் சென்னைக்கான விமான சேவை வாரத்தில மூன்று நாட்கள் மட்டும் எண்டு சொல்லுகினம்.

**சாத்திரியார்:** இந்தியத் தூதுவராலயம் யாழ்ப்பாணத்தில இருக்கிற காரணத்தால எப்படியும் சென்னைக்கான விமான சேவையை தினசரி நடக்கிற துக்கான ஏற்பாடுகளைச் செய்வினம் எண்டு நம்புகிறன்.

**சிறாப்பர்:** அதுதானே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சந்து இலங்கை-இந்திய உறவு வானத்தைத் தொட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்.

**விதானையார்:** அவர் சொன்னதை நான் ஒருக்காலும் ஏற்க மாட்டன்.

**சிறாப்பர்:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்?

**விதானையார்:** இந்தியாவில நம்பிக்கை கொண்ட மக்கள் ஈழத் தமிழர்கள் தான். ஆனால் ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியா தான்



## பிரதமர் மோடியைச் சந்திக்க இந்தியா போகாத கூட்டமைப்பு

செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. எண்டைக்கு ஈழத் தமிழர்கள் உரிமையோடும் சுதந்திரத்தோடும் இலங்கையில் வாழக்கூடிய சூழ்நிலைகளை இந்தியா ஏற்படுத்திக் கொடுக்கிறதோ அண்டைக்குத் தான் இலங்கை-இந்திய உறவு வானத்தைத் தொடும். தமிழ் மக்களின் இதயத்தைத் தொடும்.

(விதானையார் ஆக்ரோசமாகக் கூறியதும் ஆலடி மாநாட்டில் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்).

**வாத்தியார்:** இலங்கைக்கு விஜயம் செய்த பிரதமர் மோடி இந்தியாவுக்கு வாருங்கள் பேசுவம் எண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிட்ட கூறினவரல்லோ. ஏன் இன்னும் கூட்டமைப்பினர் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திக்கவில்லை.

**சாத்திரியார்:** அதெங்க நடக்கிற காரியம். எதையும் காலம் கடத்திக் காலம் கடத்தி தமிழினத்தின்ர தலையில மண்ணைக் கொட்டிப் போட்டினம்.

**பண்டிதர்:** சாத்திரியார் சொல்லுறது உண்மை தான். தமிழினத்தின்ர பிரச்சினை தங்கட பிரச்சினை எண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்திருந்தால் அவர்களுக்குக் கிடைத்த எத்தனையோ சந்தர்ப்பங்களை அவர்கள் தமிழ் மக்களுக்காகப் பயன்படுத்தியிருப்பினம். ஆனால், தமிழ்த் தலைவர்கள் நினைக்கினம் தமிழ் மக்கள் வேற, தாங்கள் வேற எண்டு.

அதால சிங்களத் தலைவர்களுடன் சரி, இந்திய அரசுடன் சரி யாரோடு கதைப்பதாக இருந்தாலும் தமிழ் மக்களுக்காகத் தாங்கள் கதைப்பது போலவும் அவர்களுக்காகக் கதைத்து எங்களுக்கு என்ன பயன் என்பது போலவும் தமிழ் அரசியல் தலைவர்கள் நடந்து கொள்கினம்.

**மூப்பர்:** அதுமட்டுமோ எங்கட தமிழ் அரசியல்வாதிகளுக்கு நேரமே இல்லைப்பாருங்கோ.

நேரமில்லாதவர்களால என்னெண்டு தமிழ் மக்களின்ர பிரச்சினையைச் செம்மையாகக் கையாள முடியும்.

**வாத்தியார்:** சரி…சரி… உந்த நாசமறுத்த அரசியலை விட்டிட்டு வேறு ஏதாவது இருந்தால் கதையுங்க.

(வாத்தியார் வைத்திலிங்கம் அரசியல் பேச்சுக்கு ஆப்பு வைத்தார்).

**பண்டிதர்:** சிதம்பரத்திலுள்ள புண்ணிய நாச்சியார் மடம் தொடர்பில ஆலடி மாநாட்டில எழுதினதற்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின்ர செயலாளர் வன்னியசிங்கம் அவர்கள் ஒரு பதில் கடிதம் எழுதியிருக்கிறார்.

**சாத்திரியார்:** என்ன எழுதியிருக்கிறார்.

**பண்டிதர்:** ஆலடியில கூறின மாதிரி அங்க எந்த எழுத்துப் பொறித்த கல்லும் மாற்றப்படவில்லையாம். இது வெறும் கதை எண்டு எழுதியிருக்கிறார்.

**வாத்தியார்:** நாங்கள் ஆதாரத்தோட தான் கூறினனாங்கள். நாங்கள் சொல்வது பொய் எண்டால் சிதம்பரத்தில புண்ணி நாச்சியார் மடத்தில கல்லு இருக்குதோ, கண்ணாடி இருக்குதோ என்பதை சைவ பரிபாலன சபை அறிய வேணும்.

இப்ப தானே நவீன தொடர்பாடல் வசதிகள் இருக்குது. கையடக்க தொலைபேசியில வீடியோ எடுத்துப் போட்டு அதை இங்க அனுப்பலாம். அப்ப தெரியும் கல்லு இருக்குதோ இல்லையோ எண்டு.

**பண்டிதர்:** நாங்கள் சொல்ல வேண்டிய கடமைக்குச் சொல்லுவம். ஆனால் என்னைப் பொறுத்த வரை சிதம்பரத்துப் புண்ணிய நாச்சியார் மடம் இனி கணேசரோட தான்.

**சாத்திரியார்:** எங்க வீட்டுச் சொத்தெண்டாலல்லோ அதைப் பாதுகாக்க வேணும் எண்டு நினைக்கிறதுக்கு.

தர்ம சாசனம் தானே சிதம்பரத்தில இருந்து வரவும் செலவும் சமன் எண்டு கணக்கறிக்கை வந்தால் புண்ணிய நாச்சியார் மடம் யாழ்ப்பாணத்து சைவ பரிபாலன சபையின்ர கட்டுப்பாட்டில இருக்குது எண்டு நினைக்கிற அளவில நிலைமை வந்திட்டுது.

இனி நாங்கள் என்ன செய்ய முடியும்.

**சிறாப்பர்:** விபத்தில காயமடைந்த கங்காணி கார்த்திகேயனின் நிலைமை எப்பிடி இருக்குது?

**மூப்பர்:** கால் முறிந்து போட்டுதாம். மண்மூடை கட்டியிருக்கினம். வயது போன காலத்தில நடக்க முடியாமல் வந்தால் எல்லாம் அம்போதான். இவ்வாறு மூப்பர் கூற அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஒற்றுமைப்பட்டதால் பயன் ஏதும் உண்டோ!



காலத்திற்குக் காலம் ஏதோ வொரு விடயம் பேசுபடுபொரு ளாகுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

அந்த வகையில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி முழுவதும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியதே பேசுபடு பொரு ளாயிற்று.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்ற கேள்வி குசலம் விசாரிப்பது போல வந்துள்ள நிலையில் சஜித் பிரேமதாஸ, கோத்தபாய ராஜபக்ஷ, அநுரகுமார திஸா நாயக்க ஆகியோர் களத்தில் இறங்கி வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

முன் எப்போதும் இல்லாத அளவில் ஜனாதிபதித் தேர்த லில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

எனினும் மேற்குறிப்பிட்ட மூவர் தொடர்பிலுமே வெற்றி, தோல்வி பற்றிக் கருத்துரைக் கப்படுகிறது.

அதிலும் குறிப்பிட்டுக் கூறு வதாயின் கோத்தபாய ராஜ பக்ஷ, சஜித் பிரேமதாஸ ஆகி யோரில் யார் வெற்றி பெறுவர் என்ற விடயம் முதன்மை பெற்றுள்ளதைக் காணலாம்.

இங்கு ஜனாதிபதித் தேர்தல் என்ற அடிப்படையில் மட்டும் வெற்றி, தோல்வி பற்றிய கருத்துக்கள் எழுகை பெற வில்லை.

மாறாக அரசியல் இருப்பு என்ற வகையிலும் முன்னெப் போதும் இல்லாத முக்கியத்து வத்தை ஜனாதிபதித் தேர்தல் பெற்றுள்ளது.

அதாவது நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் வனவாச மாகவே இருக்கும்.

அதாவது கோத்தபாய ராஜ பக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், உடனடியா கவே பொதுத் தேர்தல் நடை பெறும்.

அதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்க்கட்சி என்ற ஆசனத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. சரி எதிர்க்கட்சி ஆசனத்திலாவது இருந்து விட்டுப் போகலாமென்றால் இல்லவே இல்லை. மத்திய வங்கியின் பிணைமுறி விவகா ரம் ஐக்கிய தேசியக் கட்சியை சிப்பிலி ஆட்டும்.

இது ஒரு பக்கம். மாறாக, கோத்தபாய ராஜபக்ஷ தோற்று சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால் மகிந்த தரப்பின் அரசியல் சூனியமாகிவிடும். சிலவேளை சகோதரர்களுக்கி டையில் முரண்பாடுகள் ஏற் பட்டு ஒன்றுக்குள் ஒன்று முட்டி மோதிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்போது கூட கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசா ரங்களில் உரையாற்றும் மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ; தனது தந்தை பற்றியே புகழுரை செய்கிறார் என்ற மனக் கசப்பு கோத்தபா தரப்பிடம் இருப்பதாக அரசி யல் வட்டாரங்களில் பேசப்ப டுகிறது.

நிலைமை இதுவாக இருக் கையில், மகிந்த தரப்பை ஒற் றுமைப்படுத்தி அவர்களை நிமிரச் செய்வதாக இருந்தால் எதிர்வரும் தேர்தலில் கோத்த பாய ராஜபக்ஷ எப்பாடுபட்டும் வென்றே ஆக வேண்டும்.

தவிர, தோல்வியைச் சந்தித் தால் தாமரை மொட்டு விரிவ தற்கு இன்னொரு கதிரவன் உதிக்க வேண்டி இருக்கும்.

இஃது தேர்தல் முடிவுகள் பற்றிய கருத்திடு.

இவை ஒருபுறமிருக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் தமிழ் மக்களின் வாக்கு கள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் மிகுந்த அக் கறையும் கரிசனையும் கொண்டி ருப்பர் என தமிழ் அரசியல் வாதிகளும் அரசியல் ஆர்வலர்க ளும் கருதியிருந்தனர்.

ஆனால் தமிழ் மக்களின் வாக்குகள் மீது அதிக கரிசனை செலுத்தாமல், சிங்கள மக்க ளின் வாக்குகளைப் பெறுவதி லேயே ஜனாதிபதி வேட்பா ளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதற்கு இரண்டு கருத்து நிலைகள் இருக்கலாம். அதாவது எவ்வளவு தான் தேர்தல் பிரசாரங்களை செய்தா லும் தமிழ் மக்கள் எனக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்ற நினைப்பு அல்லது பிரசாரம் செய்தால் என்ன? செய்யாமல் விட்டால் என்ன எனக்கே தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்ற அனுமானம். இந்த இரண்டு நிலைகள் காரணமாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான வியூகங்கள் எதனையும் ஜனாதிபதி வேட் பாளர்கள் அமைக்கவில்லை எனலாம்.

எனினும் இறுதி நேரத்தில் ஒருசில வாக்குறுதிகளுடன் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களை நோக்கி வரவும் கூடும்.

எது எவ்வாறாயினும் ஜனாதி பதித் தேர்தலில் தமிழ் அரசி யல் கட்சிகள் ஒன்றுபடுவதன் மூலமாக பலமான கோரிக்கை களை முன்வைத்து அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கின்ற தரப்பை தமிழ் மக்கள் ஆதரிக்கலாம் என்ற எதிர்பார்புகள் பெரிதான வெற்றியை நோக்கிக் பய ணிக்க வில்லை என்பதையும் இங்கு கூறித்தான் ஆக வேண் டும்.

தவிர யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மாணவர் ஒன்றியத் தின் முயற்சியால் ஐந்து தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு பொதுவான கோரிக்கைகளை முன்வைப்பதாக உடன்பட்டன.

அந்த உடன்பாட்டில் ஜனா திபதி வேட்பாளர்களையும் அவர்கள் தரப்பையும் சந்திப்ப தாக இருந்தால், ஐந்து கட்சிக ளின் தலைவர்களும் ஒன்றாகச் சந்திப்பதென்றும் தீர்மானிக் கப்பட்டது.

எனினும் அந்தத் தீர்மான த்தை தமிழ் அரசியல் கட்சிகள் பின்பற்றுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து தமிழ் அரசியல் கட்சிகள் சிலவற்றைத் தனித் தனியாகச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதித் தேர்தல் தொடர் பாகவே இருந்தது. அப்படி யானால் கூட்டாகச் சந்திப்பது என்ற தீர்மானம் கைவிடப் பட்டு விட்டது என்றே பொருள் பட வேண்டும்.

இங்குதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒரு தவறை இழைக் கிறது.

அதாவது ஜனாதிபதித் தேர் தல் முடியும் வரை ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டை ஒருங்கிணைப்புச் செய்கின்ற பொறுப்பை யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தனது கையில் எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யாமல் ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளையும் சேர்த்து வைத்ததோடு தங்கள் பணி முடிந்ததாக கருதிக் கொண் டனர்.

இந்தத் தவறு உடன் பாட்டில் கைச்சாத்திட்ட பின் பாகவும் தமிழ் அரசியல் கட்சி கள் தனித்தனியாக சந்திப்பதை கட்டுப்படுத்தாமல் விட்டு விடுகிறது.

இதன் காரணமாக வெள் ளைத் தாளில் ஒப்பமிட்டதில் மட்டுமே ஒற்றுமைப்பட்டது என்பதாக நிலைமை உள்ளது.

திருநீலகண்டன்





# இராவணன் பெற்ற சாபம்

இறைவன் நமக்கு அறிவையும் ஆற்றலையும் தந்துள்ளார். அவற்றை இறைவனை வழிப்படுவதற்கும் உலகில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் நாம் பயன்படுத்த வேண்டும். பிறர் மனம் புண்படும்படி பேசுவதோ செயல் புரிவதோ இறைவனுக்கு ஒவ்வாதது மட்டுமல்லாமல் அவ்விதம் செய்பவனையே அது அடியோடு அழித்துவிடும். அழிவிலிருந்து தன்னை காத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் தன்னை உணர்ந்து நொந்து தன் உடலையும் உணர்வையும் வருத்தி விரதமிருந்துதான் பயன் பெற முடியும்.

விச்ரவஸ் என்ற முனிவர் சிறந்த சிவபக்தராகத் திகழ்ந்தார். அவருக்கு இராவணன், கும்பகர்ணன், விபீஷனன் என்ற மூன்று ஆண்களும் சூர்ப்பனகை என்ற மகளும் இருந்தார்கள்.

இராவணன் கடும் தவமிருந்து வரங்களைப் பெற்று இலங்கையை தவ வலிமையினாலும் வீரபராக்கிரமங்களாலும் மூவுலகத்தையும் வென்று ஆட்சி செய்தான்.

ஒரு நாள் இராவணன் தன் புஷ்பக விமானத்தில் வட திசை நோக்கி பறந்து கொண்டிருந்தபோது ஓரிடத்தில் திடீரென விமானம் பறக்க முடியாமல் நின்றது. காரணத்தை அறிய விமானத்தில் இருந்து இறங்கியபோது நந்திகேஸ்வரர் தோன்றி இராவணா! பரமன் வாழ்கின்ற இந்த கயி லங்கிரியை பறந்து கடந்து செல்வதற்கு மமதை கொண்ட உன்னால் இயலாது. ஆதலால் நீ திரும்பிச் சென்று விடு! எனக் கூறினார்.



அதைக்கேட்ட ராவணன் கோபத்துடன் "குரங்கு போன்ற முகமுள்ள நீயா என்னை திரும்பிப் போக சொல்வது. என் பராக்கிரமத்தை நினைத்து பார்க்காமல் என்னை இழித்துப் பேசிய நீ யார்? எனக் கேட்டான்.

ராவணா என்னை குரங்கு என்று நீ இகழ்ந்து பேசிய தால் நீயும் என் இலங்கையும் அழிந்து போவதற்கு ஒரு குரங்கே காரணமாகட்டும் என சபித்தார்.

ராவணன் கோபம் மேலும் அதிகரிக்க ஆத்திரத்தில் அறிவிழந்து இந்த கைலாயமலையையே கிள்ளி எறிந்து விடுகிறேன் பார்! என்று கூறி மலையை பெயர்க்க முற்பட்டான். இமயம் பூகம்பத்தினால் ஆட்பட்டது போல ஆடிய ஆட்டத்தில் உமையவளே நடுநடுங்கிப் போய் விட்டார். இமயத்தில் வாழ்ந்த விலங்குகள், தவ முனிவர்கள் அத் தனை பேரும் ஓலமிட்டனர். ஞான திருஷ்டியால் இவை யாவையும் உணர்ந்த சிவன் தனது பெருவிரலால் சற்று மலையை ஊன்றி அழுத்தினார். மலை சாதாரண நிலை அடைந்தது. ராவணன் மலையின் கீழ் அகப்பட்டு நசுங்கி தன் ஆற்றலை முற்றிலும் இழந்தான்.

நீண்டகாலமாக அதே நிலையில் ராவணன் சிக்குண்டு கதறினார். பின் தவமுனிவருடைய அறிவுறுத்தல் படி தனது ஒரு தலையை கிள்ளி குடமாக்கி ஒருகையை தண்டாக்கி அதன் நரம்பை வீணைத் தந்தியாகக் கொண்டு இனிய சாம கானம் பாடினார். இசைப்பிரியரான சிவன் மன்னித்து அருளினார்.

மனித நிலையைத் தாண்டிய இறைவனை எவ்வாறு நினைப்பது? கடவுளுக்கு பிரியமானது எது? அவர் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார். கடவுள் நம்மை ஏற்க வேண்டுமானால் நமது நடத்தை எவ்வாறு அமைய வேண்டும்? நம்மை விட மேல் நிலையில் இருக்கும் இறைவனிடம் சரண் புகுந்தால் நம் நிலையை விட மேலான சக்தியும் பலனும் நடக்குக் கிடைக்கும். பலம் மற்றும் பதவி இருந் தாலும் மாயை அதைக்காட்டிலும் சக்தி வாய்ந்தது. எனவே மாயையை வெல்ல வேண்டும். அதை விட வலிமை கொண்ட கடவுளிடம் பூரண சரணாகதியடைய வேண்டும்.

-சிவனடியான்-




யோ.தமிழ், தரம் 7,
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை, SOS சிறுவர் கிராமம்

## மணல் விழ மணி தெரியும்

கூம்பு வடிவில் (Cone Shape) காகிதத்தைச் சுரு ட்டி ஒரு புனலை உருவாக்கி, அதன் முனையைக் கூம்பின் பக்கவாட்டோடு ஒட்டிவிடு, அது பிரியாதிருக்க. உன் பென்சிலின் கூர்முனையினால் கூம்பின் அடிப்பாகத்தில் குத்தி சிறிய துவாரம் செய்துகொள்.

இந்தக் கூம்பை ஒரு கண்ணாடி ஜாடியின் வாயில் வைத்து நிற்கவை, புனல் போலுள்ள காகிதக் கூம்பி னுள் நைசான மணலை நிரப்பு.


கூம்பிலுள்ள மணல் மெதுமெதுவாகவே கண்ணாடி ஜாடியினுள் நீர்த்தாரைபோல விழுவதைக் காண்பாய். கூம்பிலுள்ள மணல் முழுவதும் ஜாடியில் விழ எவ்வளவு நேர மாகிறதென்று உன்னைக் கடிகாரத்தைக் கொண்டு கணக்கிட்டுக் குறித்துக்கொள்.

கண்ணாடி ஜாடியில் விழு ந்துள்ள மறுபடி மணலை கூம்புக் காகித வடிவுக்கு மாற்றி, அதை முன்போலவே ஜாடியின் வாய் மீது உட்காரவை. மீண்டும் கணக்கிடு. என்ன? முழு மணலும் கண்ணாடி ஜாடிக்குள் விழ அதே நேரம் தான் ஆகி இருக்கும்.

**இது என்னது?**

இதுதான் பண்டைக் காலத்தில் நம் மூதாதையர் காலத்தை அளக்கப் பயன்படுத்திய மணல் கடிகாரம். முற்காலத்தில் இன்றைய கடிகாரம் கண்டு பிடிப்பதற்கு முன் காலத்தைக் கணக்கிடப் பல் வேறு முறைகளைக் கையாண்டார்கள். அவற்றில் ஒன்றுமணல்கடிகாரமான இது.








போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்?

ஒருவர் மறப்போம் மன்னிப்போம் என்கிறாரே?

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தமிழர்களுக்கு நன்மை பயக்குமா?

**தமிழ்** — யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தமிழர்களுக்கு நன்மை பயக்குமா?**

எமது இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

அத்துடன் விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கடைகள், சொப்பிங்மால் போன்ற வற்றை எம்மவர்களே நடத்த முன்வர வேண்டும்.

திருக்கோணஸ்வரம் சென்றால் எமது நிலம் எமது கடவுளை வணங்க மலை ஏறுகிறோம். ஆனால் இருமருங்கும் இருக்கும் கடைகளில் இது என்ன விலை என்று கேட்க முடியாது. ''கீயத'' என்று கேட்க வேண்டிய நிலை. அதுபோல் இங்கு இல்லாவிட்டால் சரி.

**சயன்** — யாழ்ப்பாணம்

**ஆட்சியாளர்களும் ஆட்சியைக் கைப்பற்றத் துடிப்பவர்களும் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்கிறார்களே?**

பாலசிங்கமும் கந்தையாவும் உயிர் சிநேகிதர்கள். ஒருநாள் இரவு கள்ளுக்கடைக்கு இருவரும் போகிறார்கள்.

கள்ளுக்கடை மூடி இருந்தது. போதைக்காக இருவரும் கள்ளுக்கடையை உடைத்து தேவையான கள்ளை குடித்து விட்டார்கள்.
திடீரென கள்ளுக்கடை முதலாளி உள்ளே வர பாலசிங்கம் ஓடிவிட்டார். கந்தையா வசமாக மாட்டிவிட்டார்.

ஓடியது யார் என கள்ளுக்கடை முதலாளி கந்தையாவிடம் கேட்கிறார்.

அதற்கு கந்தையா சொன்ன பதில், ''யாரைக் காட்டிக் கொடுத்தாலும் என் உயிர் நண்பன் பாலசிங்கத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்'' என.

**பானுப்பிரியா** — தொண்டைமானாறு

**கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு வியாசரே?**

எத்தனையோ முடிவுகளை சேர்ந்து எடுங்கள் சேர்ந்து எடுங்கள் என்று எவ்வளவு பேர் கத்தினார்கள். ஆனால் அந்தக் கூட்டமைப்பு கேட்கவில்லையே. ஒரு சிலரின் அதிகாரத்தால் தன்னிச்சையாகச் செயற்பட்டது.

ஆனால் இப்போது மட்டும் ஏன் கூட்டுச் சேர்ந்து முடிவெடுக்க முன்வந்தார்கள் என்பது தான் இன்னும் புரியாத புதிராக....

ஓ... இராஜதந்திரமோ...

**தர்ணிகா** — கௌந்தில்

**போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்?**

என்னது போர்க்குற்றமா? அப்படியென்றால் என்ன? என்று கேட்கும் அளவில் இருக்கிறார்கள் எமது ஆட்சியாளர்கள்.

ஒரு நாட்டில் இரு இனம். பயங்கரவாதம் என்ற போர்வையில் எமது இனத்தைக் கருவறுத்து விட்டு படையினரை நாம் பாதுகாப்போம். காட்டிக் கொடுக்கோம். போர்க்குற்றவாளிகளை மின்சாரக்கதிரையில் இருந்து பாதுகாத்தோம் என்று பேசுகிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் இனத்திற்கு நீதி தர மறுக்கிறார்கள். இதுதான் நிலை.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தேகன்** — வடமராட்சி

**வடிவேலுவின் அத்தனை நகைச்சுவையும் இப்போதைய அரசியலுக்குப் பொருந்துகிறதே?**

அதுவும் தேர்தல் காலம் அல்லவா. வடிவேலுவைப் பார்த்தால் எம்மவர்கள் தான் நினைவுக்கு வருகிறார்கள். அதே எம்மவர்கள் பேசுவதைக் கேட்க வடிவேலுதான் நினைவுக்கு வருகிறார். எல்லாம் தேர்தல் காலம் மட்டும் தான். பின்பு ரகுவரன் கணக்கில் வில்லத்தனம் செய்வார்கள்.

**றூபன்** — நவாலி

**ஆசிரியர் தினம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

இந்தத் தினங்கள் இருக்கிறதே அது தேவை தானா என்று தோணுகிறது.

கை கழுவுவதற்கு ஒரு தினம் என்றால் கை கழுவும் தினத்தில் மாத்திரம் கைகழுவினால் போதும் என்று தானே பிள்ளைகள் சிந்திப்பர். வாசிப்பு மாதம் என்றால் அந்த மாதத்தில் மட்டும் வாசித்தால் போதுமா?

இதுபோல் தான் ஆசிரியர் தினம், அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம் இப்படி எல்லா தினங்களும் வரும்.

**ஜுபா** — கரவெட்டி

**அபிவிருத்தி எனும் எலும்புத்துண்டை காட்டி எமது உரிமைகள் பறிக்கப்படுகின்றனவா?**

அபிவிருத்தி என்பது ஒரு இனத்தை விருத்தி செய்யவல்லது. அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி அந்த இனத்தின் எதிர்காலத்தைச் சிதைக்க நினைத்தால் அதைப்போலக் கொடுமை வேறு ஏதுவுமாக இருக்க முடியாது.

என்ன செய்ய உரிமை மறுக்கப்பட்டு,அபிவிருத்தி முடக்கப்பட்டு நிலைகுலைந்து கிடக்கும் தமிழினத்தின் உரிமைகள் நியாயமாகக் கிடைக்கவேண்டும். இல்லையேல் இது இன முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டே தான் இருக்கும்.

**சுதன்** — குப்பிளான்

**ஒருவர் மறப்போம் மன்னிப்போம் என்கிறாரே?**

நான், அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, இரண்டு தம்பிகள், ஒரு தங்கை என எனது மொத்தக் குடும்பமும் குண்டுவீச்சுக்குப் பயந்து பதுங்கு குழியில் இருந்தோம்.

வந்த எறிகணை ஒன்று நாம் இருந்த பதுங்கு குழிக்குள் வீழ்ந்து வெடிக்க எனது கண் முன்னே என் மொத்தக் குடும்பமும் உடல் சிதறிப் பலியாக, ஒரு கால், ஒரு கை, ஒரு கண் இல்லாது இன்றுவரை நான் முடமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

என்னால் எதனை மறக்க முடியும். யாரை மன்னிக்க முடியும் சொல்லுங்கள்.

**கலை** — மிருசுவில்

**எதற்கு எடுத்தாலும் குதர்க்கம் பேசி தாங்களும் குழம்பி சூழ இருப்பவர்களையும் குழப்பும் ஜென்மங்களை என்னவென்பது?**

சமரசத்தில் இரண்டு விதம் இருக்கிறது. ஒன்று பேசி சமரசம் ஆவது, அல்லது செய்வது. மற்றையது சமரசமே ஆகக்கூடாது. ஆனால் சமரசம் பேசச் செல்வது.

இதில் இரண்டாவது ரகத்தில் இருப்பவர்களை திருத்தவே முடியாது.

ஏதோ தாங்கள் சொல்வதும் செய்வதும் தான் சரி என்றும் மற்றவர்களின் பேச்சைக் கேட்கக்கூடாது என்கின்ற மனநிலையில் இருப்பார்கள். இவர்களுடன் பேசிப் பயன் வரப் போவதும் இல்லை. இவர்களால் யாருக்கும் பயன் இருக்கப் போவதும் இல்லை.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## மௌனவலி

மொட்டாய் மலர்ந்து
சிட்டாய் திரிந்து
அந்த பட்டாம்பூச்சியாய்
திரிந்த அவளுக்கு
காதைப் பிளக்கும்
கெட்டிமேளச் சத்தம்
காதில் வட்டமடிக்க
கனவுகள் சிக்கிக் கொண்டன
மூன்று முடிச்சுக்குள்....!
நாள் குறித்து மாட்டிய விலங்கு
நாள்தோறும் கட்டிப்போடுகிறது
நான்கு சுவருக்குள் அவளை...
பெருவிரல் தொட்டு வைத்த திலகம்
தீச்சிகையாய் எரிகிறது
விளக்கணையும் இரவுகளில்...!
தாளில் இட்ட கையெழுத்தில்
மாற்றமடையும் முதலெழுத்து...
கறுப்பு மை காய்வதற்குள்
மாறிப்போகும் தலையெழுத்தில்
தலையணையை நனைக்கிறது
அக்கினியில் அஸ்தமனமான
சூரியனின் அடுப்படித் தரிசனத்தில்...!
கைக்குட்டைக்குள் மறைந்த
கைதட்டல் காலங்கள்
விறகோடு எரியும்
பூட்டி வைத்த இலட்சியங்களின்
திறவுகோலோடு இணைந்தே
சாம்பலாகின்றது....!

ஆணியோடு கதை பேசும்
நூலறுந்த பட்டங்கள்
நொறுங்கிய கண்ணாடியோடு
ஒட்டிக் கொண்ட வெற்றிச்சின்னங்கள்
வரலாறாகாமல் காவற்கடமைபுரிகின்றன
அறையின் மூலைக்குள்...!
புரியாத புதிர்கள் பல மொழியறிந்தும்
எழுத்துப்பிழைகளால்
முந்தானையால் மூடிக்கொள்கின்றனர்
சரித்திரம் காணவேண்டிய
பல பல பக்கங்களை.....

*பிரியா காசிநாதன்*

## ஒற்றுமையாக ஓரணியில். . .

அஞ்சிடாமல் கொலை களவு பொய்
பஞ்ச பாவங்களும் பண்ணிவிட்டு
பன்சல சென்று பகவானின்
பாதங்களைப் பணிகின்றார்கள்
ஈழம் சுருங்கிவிட்டதென
ஏளனம் வேறு செய்கிறார்கள்
ஒரே தேசம் ஒரே நாடு கூறுபவர்கள்
ஒரே மதம் என்றும் கூவுவார்கள்
சிதறிக் கிடக்கின்ற சிறு சிறு கட்சிகள்
வீணான வீராப்பு, வீம்பான தனிப்போக்கு
உதவாத "ஈகோ" யாவையும் உதறி ஒரே
தோப்பாக திரளுவதே தலையாய தேவையின்று
சேரனும் சோழனும் பழம் பெரும்
பாண்டியனும் வரலாற்றில்
வீரமுடன்தான் விளங்கினார்கள்
ஆனாலும் அவர்கள் கூட
ஓரணியில் திரண்டிருந்தால் தம்
பகை மறந்து பழகியிருந்தால்
தமிழர் இனம் பின்பு தாழ்ந்திருக்காது
மந்த மதியினால் மமதை கொண்டால்
சோரம் போவோம் சொற்ப நாளில்,
ஏற்கனவே,
ஓரங்கட்டப்பட்ட நிலை இனியும்
பழைய பாதையிலேயே வண்டியின்
பயணம் தொடருமாயின்
எட்டப் போவது எமக்கு வழமையான
ஒட்டுண்ணி வாழ்க்கைதான்
அப்போது,
இலட்சங்களாக இறைபடும்
இலட்சியங்கள் யாவும் மிதிபடும்
வடக்கு கிழக்கு நிரந்தரமாய் பிரிபடும்
வடக்கும் மென்மேலும் சிதைபடும்

*வாணியழகன்*
*கிளிநொச்சி.*

## திரண்டால் அடம்பனல்ல தமிழனும் வலிமையே

ஒன்றினை தமிழா ஒன்று சேர்
நன்று நீ இன்றயினும் ஒன்றினை
சென்றுபோன காலமெலாம் நாம்
துண்டுபட்டு நின்றது போதுமினி
ஒன்றிணைந்து ஏமாற்றுக் காரர்பின்
கன்றுபோல் திரிந்தும் கண்டவை
ஒன்றுமில்லை ஆதலால் நீ ஒன்றுபட்டுச்
சென்றுவா உலகைவெல்வோம் வா
எழுபத்திரண்டு ஆண்டுகள் நீ
இழுபட்டுத் திரிந்தாய் என்ன கண்டாய்
விழுபட்டு மிதிபட்டு ஏமாற்றப்பட்டாய்
தொழுது நின்றவர், தோளில் சுமந்தவர்
பழுது பண்ணி பகடையாய் நினைந்து
அழுது கொண்டு அவர் பின் நீயின்னும்
விழுதாய் நிற்பாயா? வீறு கொண்டெழு
திரண்டால் அடம்பனல்ல தமிழனும் வலிமையே.

பத்துக் கதை பேசி அன்பொழுக
சித்துக்கள் இங்கு செய்ய வருவர்
பித்துக் குணம் கொண்டவர் பிரிந்து நின்று
கத்திப் பேசுவர் ரோட்டும் எயர்போட்டும்
தித்திப் பாய்த்தான் இருக்கு முன்னர் இருந்தவை
சுத்திச் சுக்குநூறாக்கியவர் செப்பனிடுவர்
புத்தியிலெடு இவை உனக்கல்ல குடியேற
சக்தி மிக்கவன் நீ சரித்திரம் படை ஒன்றினை

**மயூரதன், யாழ்ப்பாணம்.**

## ஏக்கம்

யுத்தத்தால்
இரத்தம் சிந்தி
உயிரிழந்த
உறவினர்களை
தொலைத்து
தனிமையில் வாடும்
சிறுவனா நீ!

கையிலிருக்கும்
உணவுப் பண்டத்தை
வாயிலிட்டு
மற்றவர் முகத்தை
ஏக்கத்துடன்'
பார்ப்பது ஏனோ!

இ.தனுப்பிரியன்
தொம்புரம் கிழக்கு.

## தனி மரம்

என் பெற்றோர்கள்
யுத்தத்தில் பலி
அதனை நினைக்கும்
போதெல்லாம்
ஏற்படுகிறது வலி.

கையிலே கிடைக்கும்
உணவுப் பொருளினை
வாயிலே மென்று
என் பசியைத் தீர்த்து
யாருமற்ற அநாதையாய்
தனிமரம் போல
வாடுகின்றேன்.

இ.தனுசா
தொம்புரம் கிழக்கு.

## அரசியல் பிழைத்தோர்க்கு.... 02

சீற்றிற்காக தேசியம் பேசி
தோற்றாலும் தோற்காததாய்
தோற்றம் கொடுத்தது ஒன்று

வீர வசனத்தை தெறிக்கவிட்டு
நெற்றிக்கு சிகப்புத் துண்டுகட்டி
வெற்றித் திலகம் இட்டு
வீராப்பாய் போஸ் கொடுத்தது

வினவிப் பார்த்த போதுதான்
விளங்கியது
அது ஸ்ரூடியோவில்
போஸ் கொடுத்தது என்று

எங்கும் எதிர்க்கும்
முந்திரியாய் முந்துவார்
பேச வெளிக்கிட்டால்தான்
தெரியும் அவர் வண்டவாளம்

போர் வெடிக்கும்
பொங்கி எழுவோம் என
பெரிந்து தள்ளுவார்
பின்புதான் தெரியும்- அது
வெறும் வெங்காய வெடியென


பிஞ்சுகள் இருந்தாலும்
பெரியவர் இருந்தாலும்
மைக்கைக் கண்டுவிட்டால்
மனுசன் மணிக்கணக்காய் பொரியும்
அப்பளங்கள் தான் அவை
ஆறிவிட்டால் நமுந்துவிடும்.

கஞ்சிக்கு வழியின்றி
மக்கள் பஞ்சப்பட
ஏசிக் காரில்
ஊரைச் சுற்றி ஊழையிடுவார்
ஆரும் காணப் போனால்
அடுக்குவார் அடுக்குவார்
அவர் செய்த வேலைகளை

ஊர்க்காசில்
கொய்யகம் விட்ட கதை
இவருக்குத்தான்
நல்லாப் பொருந்தும் போல...
(அடுத்த வாரம் வாறன்)

**மாவை. நா. கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல் - 469



## காலம் கனியுமுமக்கு

போரின் வடுக்களில்
பின் விளைவால்
பட்டுழலப்படும்
பெருங் கொடுமை
உணவு உடை
உறையுள் எலாம்
கானல் நீராய்
கண்ணீரில்
கரைந்தாலும்
கலங்காதே எதிரே
காலம் கனியுமுமக்கு

**கந்தபாலன், நல்லூர்.**

## வதைத்திடும் வறுமை

அகதிகள் தினமதுவுமோ
ஆண்டு தோறும் வருகுதுபோகுது
அநாதைகள் அவலங்களுமோ
அகன்ற பாடில்லையே
பசியால் வாடிடும் இப்பாலகன் போன்ற
பரிதாபத்திற்கு மானிடமே இரக்கமில்லையா

**தங்கத் தமிழன்**
**காரைநகர்.**

## பசியில்லாப் பங்கீடும்

போரில்லாப் புதுப் பூமி
பொருளாதாரச் சமநிலையும்
பாருலகிற்கும்
பசி இல்லாப் பங்கீடும்
ஆசி பெறின்
ஆரும் இவ்வுலகில்
ஏழை எனக்கான
இரார் இது உண்மை

**தணிகைவாசன், தாவடி.**

## ஓர் அரசு தேவை

உண்ண உணவில்லை
உறங்க இடமில்லை
உடுக்கவும் உடையில்லை
உயிரினங்களாய்
உலகில் மலிந்தனவோ
உலக சமாதானம்
ஓங்குதற்கு ஓர்
அரசும் போர் பகை
அச்சமற்ற வாழ்வே
அவை நாட வளம் தரும் நாடு

**சிவனடியான், சரவணை.**

## பசிக்கொடுமை

பாதுகாப்புக்கு யாருமற்ற
அநாதைச் சிறுவனை
பசிவாட்டி வதைக்கிறது
தாங்க முடியாப் பசியால்
கையில் கிடைத்த உணவை
கடித்து உண்ணுகிறான்
ருசிக்காக அன்றி
வயிற்றுப் பசிக்காக
இனிவேண்டாம் இக்கொடுமை
உழைத்து வாழ வேண்டும்
துணிந்து வேலை ஒன்றுதேடு
உன் எதிர்காலம் மலரும்


**துரை**
**தென் மட்டுவில்.**

## இல்லாதவர்களுக்கு கொடுக்கும்!

எதிர்காலச் சந்ததிகளின்
வாழ்வையும் வளத்தையும்
கருத்தில் கொண்டே உலகில்
நாகரிகங்களும் பண்பாடுகளும்
உருவான போதும்
எதிர்மறையான
போக்கும் சுயநலன்களும்
சமநிலையைக் குழப்பி
உலகில் யுத்தங்களை
உருவாக்கி
வறுமைகளை ஏற்படுத்தி
பல்வகைப் பண்பாடுகளையும்
நாகரிகங்களையும் உலகில்
உருவாக்கியிருந்தாலும்
இல்லாதவர்களுக்கு
கொடுக்கும்
பண்பாட்டை ஊக்கப்படுத்தி
சமநிலையைக் காப்போம்.

**இ.ஜெ.பாலன்.**

## மௌனத்தின் தேடல் - 470



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஞானம்

இன்று போல் பசிக்கு
உண்பதற்கு உணவு
என்றும் கிடைப்பதில்லை
என்பது உண்மையாயின்
தடைகளைத் தகர்க்க
கை கொடுத்து உதவுங்கள்
எல்லோருக்கும் கிடைக்கும்
எல்லாமென்று கூறும்
தேர்தல் வாக்குறுதிகள்
தேய்ந்து போகாதிருக்க
வாக்குச் சீட்டுக்களை
துருப்புச் சீட்டாக்க
எப்போது வரும்
எங்களுக்கு ஞானம்

**க.நாகராசா**
**நுணாவில்.**

## ஒளி வீசுமா உன் வாழ்வில்

பாலகனின் இந்நேரப்
பசி மட்டும் தீரும்
வாழ்நாள் கேள்விக்குறி
இதற்கு தீர்வு உண்டா?
நாளைய உலகின் நாயகர்
நீங்கள்! தம்பி
சேதப்படுத்தப்பட்ட
உன் குடும்பத்தின்
ஆத்ம சாந்திக்காக நீ
உணர்வு கொண்டு
எழுந்து நில்...
பார்க்கலாம் ஒளி வீசுமா
உன் வாழ்வில்...

**அபிகுலமாலிகா**
**சங்கானை.**

# ஆச்சியின் குழந்தை...

**டிங்! டாங்...! டிங்!! டாங்...!!**

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் காலைநேரப் பூஜைக்கான ஆயத்தமணியின் ஓசை அந்த அமைதியான அதிகாலைப் பொழுதைக் கிழித்து அயலவர் அனைவரையும் துயிலெழுப்புகிறது. சுகன்யா மட்டும் அதற்கு விதிவிலக்கா... என்ன.. இத்தனை நாட்களும் பரீட்சைக்காக எழுந்து படித்து வந்தவள், இன்றும் வழமையான அந்த நேரத்தில் விழிப்புப் பெற்றவளாய் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அவள், நேற்றுத் தான் தனது கடைசிப் பாடத்தை எழுதி முடித்தாள். படிக்கும் சமயங்களில் பாழாய்ப்போன நித்திரை வந்து கண்களைச் சொருகும். ஆனால் இப்போது, அது கிட்ட வராமல் பூச்சாண்டி காட்டுகிறது. மனத்தைக் கட்டுப்படுத்தியவாறு அம்மா எழும்பும் வரை படுக்கையில் விழித்துக் காத்திருந்தாள். அம்ம எழுந்ததும் தானும் எழுந்து போய் காலைக் கடன்களை முடித்து விட்டு வந்து சமையறையில் அவளுக்கு ஒத்தாசை செய்ய முனைந்தாள்.

பிள்ளை! ஏன் இப்ப எழும்பின நீ...எப்பன் விடியு மட்டுக்கும் படுத்து ரெஸ்ட் எடுத்திருக்கலாம் தானே!

ஆதங்கத்துடன் சொன்னாள் அம்மா.

அம்மா! வெள்ளன எழும்பிப் பழகினது. எனக்கு நித்திரை வர மாட்டன் எண்டிட்டுது!

அதுசரி எங்கட ராசா மாமாவின்ரை மகள் சாந்தினிக்கு வாற வியாழக்கிழமை கலியாணமாம். என்னை வேளைக்கே வந்து நிண்டு உதவி செய்ய வேணுமெண்டு அண்ணாவும் அண்ணியும் நேற்று வந்து சொல்லிப் போட்டுப் போகினம். அதுதான்... என்று இழுத்தாள் அம்மா.

மாமா வீட்டுக் கலியாணம் எண்டால் நாங்கள் போய் நிண்டு செய்யத்தானே வேணும். நீங்கள் போயிட்டு வாங்கோ. நான் இப்ப சும்மாதானே நிக்கிறன். நான் வீட்டைப் பார்த்துக் கொள்ளுறன்.

ஒப்புக்காக சுகன்யா சொல்லி விட்டாளே தவிர அவளால் தனித்து சமையலைச் செய்யும் சாமர்த்தியம் கிடையாது. ஏதோ அம்மாவுக்கு ஒத்தாசை செய்வாளே அன்றி சமையல் அனுபவம் அறவே இல்லை.

சுகன்யா! உன்னால கொப்பரையும் தம்பியையும் சமாளிக்க முடியாது. நீ நாலைஞ்சு நாளைக்கு மாம வீட்டில போய் நிண்டு அங்கினை ஏதும் வேலையளைச் செய்து குடு. கலியாண வீட்டுக்கு நாங்கள் வந்திட்டு திரும்பி வரேக்க உன்னையும் கூட்டிக்கொண்டு வந்திடுறம்.

சுகன்யாவுக்கு வீட்டில் பொழுது போவது கஷ்டமாயிருந்தது. எனவே மறுபேச்சின்றி அம்மாவின் ஆணையை ஏற்றுக் கொண்டாள். மறுநாளே அம்மா சுகன்யாவை மாமா வீட்டிற்கு அழைத்து வந்தாள்.


அண்ணி! எனக்கு பதிலாய் சுகன்யா இஞ்சை நிண்டு எல்லா வேலையும் செய்து தருவாள்.

மாமாவின் பெண்களான சாந்தினி, சொரூபினி, பாமினி மூவருக்கும் சுகன்யா வந்து நிற்பதில் பெரு மகிழ்ச்சி. அவர்கள் பாடு ஒரே கொண்டாட்டம் தான். வீட்டைச் சுத்தமாக்கி அலங்கரிப்பதில் அந்த நால்வரும் மும்முரமாக ஈடுபட்டனர். சுகன்யா அவர்களுக்கு வழிகாட்ட சொரூபினியும் பாமினியும் புதிதாகத் தைத்து வந்த திரைச்சீலைகளை கதவுகளுக்கும் யன்னல்களுக்குமென மாட்டிக் கொண்டிருந்தார்கள். சாந்தினிக்கு முகத்தில் கல்யாணக்களை வந்துவிட்டது. இங்கு மற்றவர்களுடன் அவள் இணைந்திருந்த போதும் கற்பனையில் அவள் எங்கோ பறந்து கொண்டிருந்தாள்.

மொத்தத்தில் அந்த வீட்டில் கலகலப்பும் கும்மாளமும் குடிகொண்டு விட்டது. தாலிக்குப் பொன் உருக்கி சம்பிரதாயமாகப் பந்தல்களும் நடப்பட்டு விட்டன. பெண்கள் தங்கள் பங்குக்கு பலகாரங்கள் தயாரிக்கத் தொடங்கி விட்டார்கள். அன்று லட்டு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. சாந்தினியும் பாமினியும் கூறைச்சட்டைக்கு அளவு கொடுக்கப் போய் விட்டார்கள். சொரூபினி வேறு தனது நண்பிகளுக்கு திருமண அழைப்பிதழ் கொடுத்து விட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போனாள். சுகன்யா தனித்து விடப்பட்டாள். வேறு வழியின்றி லட்டுப் பிடித்துக் கொண்டிருந்த பெண்களுடன் போய் இணைந்து கொண்டாள்.

எல்லோரும் மளமளவென்று லட்டைப் பிடித்து பாத்திரங்களை நிரப்பிக்கொண்டிருந்தனர். அவளுக்கு அது அவ்வளவு பரீட்சயமானதொன்றல்ல. மெதுவாகப் பிடித்தாள். அப்பொழுது அவள் தனக்கு முன்னாள் இருக்கும் ஆச்சியைக் கவனித்தாள். முதிர்ச்சியிலும் களை குன்றாத முகம். அதற்கு மெருகூட்டுமாப் போல் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு மூக்கின் இரு பக்கத்திலும் அழகாக மூக்குத்திகள் மின்னின. சாட்சாத் அந்த அம்மனே முன்னால் இருப்பது போன்ற உணர்வில் திளைத்தவள், அவளது கைகளைப் பார்த்தாள் என்ன ஆச்சரியம். இரண்டு கைகளிலும் ரவாக்கலவையை அள்ளி ஒரே சமயத்தில் இரண்டு உருண்டைகளை வெகுலாவகமாக உருட்டிக் கொண்டிருந்தாள். சுகன்யாவுக்கு தன்னையறியாமலே அந்த ஆச்சியின் மீது ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது.

ஆச்சி மளமளவென்று உருண்டைகளால் தனது பாத்திரத்தை நிரப்பிக்கொண்டிருந்தாள். சுகன்யாவுக்கு வேலை ஓடவில்லை. மெதுவாக எழுந்து போனவள் நிறைத்திருக்கும் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போய் அறையில் இருந்த பெரிய கொள்கலன்களுக்கு மாற்றி விட்டு வந்தாள்.




வேலையில் மூழ்கியிருந்த பெண்கள் வாய் ஓயாமல் கதை பேசி ஊரைச் சுற்றி வலம் வந்தார்கள். ஆச்சி மட்டும் வாயைத் திறக்காமல் தனது பணியில் மூழ்கியிருந்தாள். நேரம் போய்க்கொண்டிருந்தது. ஆச்சி திடீரெனக் கேட்டாள்...

"பிள்ளை! எத்தினை மணி எண்டொருக்கா பாத்து சொல்லேனே" சுகன்யா மணிக்கூட்டைப் பார்த்துச் சொன்னாள் பன்னிரண்டு பத்து ஆச்சி" நேரத்தை காதில் கேட்டது தான் தாமதம் மளமளவென்று கைகளை உதறிக்கொண்டு எழுந்து விட்டாள் ஆச்சி.

பன்னிரெண்டு மணி ஆகிச்சுதெண்டால் என்ரை குழந்தை பசி தாங்காது. நான் போட்டு பேந்து வாறனடி பிள்ளை" மாமியும் அவளை வழியனுப்பி வைத்தாள். "ஆச்சி! நீங்கள் ஆறுதலாய் வாங்கோ. நாங்கள் பாத்துக் கொள்ளுறம்"

"நல்லாய்ச் சொன்னாய் சரசு. மனுசி இல்லாட்டி நாங்கள் எங்கை பிடிச்சு முடிக்கிறது. இரண்டு கையாலையும் பிடிச்சு மனுசி எல்லோ அரைவாசி பாத்திரத்தையும் காலி செய்தது.

ஒரு பெண் சொல்ல மற்றொருத்தி சொன்னாள்.

மனுசிக்கு வேலையெண்டால் வேலை தான். அதிலையே கவனமாய் இருக்கும். பாத்தியே ஒரு கதை பேச்சு கிடையாது. தானும் தன்ரை வேலையுமாய் இருக்கு மனுசி. சுகன்யா அவர்களது பேச்சை அவதானித்துக் கொண்டாள். அத்துடன் அவளது மனதில் ஒரு சந்தேகமும் கிளம்பியது.

ஆச்சிக்கு இந்த வயதில் குழந்தை ஏது? ஒருவேளை பேரக்குழந்தையாய் இருக்கலாம் என நினைத்துக் கொண்டாள். சில சமயம் தாய் குழந்தையை பேத்திக்காரியோட விட்டிட்டு வேலைக்குப் போயிட்டாவோ. அப்பிடியும் இருக்கலாம். எல்லாம் சுகன்யாவின் கணிப்புத்தான்.

வெளியில் போயிருந்த சொரூபினி வந்துவிட சுகன்யா அவளுடன் போய்ச் சேர்த்து வேறு வேலைகளில் ஈடுபடத் தொடங்கினாள்.

மறுநாள் காலை. வீட்டில் காலை உணவிற்காகப் பாண் வாங்கி விட்டு மதியச் சமையலை நேரத்துக்கே முடித்து விட வேண்டும் என்று மாமி சொல்லியிருந்தாள். பலகாரத்துக்கு உதவி செய்ய வரும் அயலவப் பெண்களுக்கு வீட்டில் தான் மதிய உணவு கொடுப்பது வழக்கம். அன்றைய தினம் பயித்தம் உருண்டைகள் பிடித்து மாலையில் மா தோய்த்து எண்ணெய்யில் போட்டு எடுக்க வேண்டும் என ஏற்பாடு. காலையிலேயே தேங்காய்களை உடைத்துத் துருவத் தொடங்கி விட்டார்கள்.

ஆச்சி மூடிய பாத்திரமொன்றைக் கொண்டு வந்து மாமியிடம் கொடுத்தாள். "நான் என்ரை குழந்தைக்குக் களி கிண்டினநான். இஞ்சையும் பிள்ளையள் சாப்பிடட்டும் எண்டு கொஞ்சத்தைக் கொண்டு வந்தன். "ஆச்சி உங்களுக்கேன் உந்த வேலை. பிள்ளையள் பாணைச் சாப்பிடுவினம் தானே!" மாமி ஆதங்கத்துடன் சொன்னாள்.

"நான் சமையலை முடிச்சுக்கொண்டு வாறன் பிள்ளை" சொல்லிக் கொண்டே பின் வளவினூடாகப் போய் விட்டாள். ஆச்சி மட்டும் மதிய போசனத்துக்காக வீட்டில் நிற்பதில்லை. அவளுடைய குழந்தைக்கு ஏற்றவாறு சமைத்து வைத்து விட்டுத்தான் உதவிக்கு வருவாள். சுகன்யாவுக்கு ஆச்சியின் போக்கு விசித்திரமாய் இருந்தது.

நாட்கள் கடுகதி வேகத்தில் நகர்ந்து போயின. சுகன்யாவுக்கு மச்சாள்மாருடன் சுவாரஸ்யமாகக் கழித்ததில் பொழுது போனதே தெரியவில்லை. மறுநாள் பொழுது விடிந்தால் திருமணம். அம்மா முதல் நாளே வந்து விட்டாள். அப்பாவும் கூட வந்து நின்றுவிட்டு பொழுது கருக வீட்டிற்குப் போய்விட்டார். மறுநாள் தம்பியாரையும் அழைத்துக் கொண்டு விடியற்காலையிலேயே வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போனார். மொத்தத்தில் வீடே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. அன்று இரவு சுகன்யாவும் சொரூபினியும் பாமினியும் அவர்களது நண்பிகளுமாக அனைவரும் பலகாரங்களைப் பொதி செய்து அடுக்கி வைத்தார்கள். நேரம் போனதே தெரியவில்லை. விடியும் சமயத்தில் தான் கண்ணயர்ந்தார்கள்.

மாமி அவர்களை உலுப்பி எழுப்பினாள்.

பொம்பிளைக்குத் தோயவாக்க மாப்பிள்ளை வீட்டார் வரப்போகினம். எழும்புங்கோ பிள்ளையள்.

எல்லோரும் எழும்பி குளித்து புறப்பட ஆயத்தமானார்கள். நல்லவேளை காலை உணவு ஓடருக்கு எடுத்ததால் அதைப் பரிமாறும் வேலை மட்டும் தான் அவர்களுக்கு.

மாமி பாமினியை அழைத்தவாறு ஓடி வந்தாள்.

பாமினி! மண்டபத்துக்கு கொண்டு போக தட்டங்கள் குறையுது. நீ போய் ஆச்சி வீட்டில நாலு தட்டங்கள் வாங்கிக் கொண்டு வா" ஆச்சியின் குழந்தையைப் பார்த்துவிட வேண்டும் என ஆவலுடன் இருந்த சுகன்யாவுக்கு அது சந்தர்ப்பமாக அமைந்து விட்டது.

"பாமினி! நானும் வாறன்." இருவருமாக பின் வளவின் கண்டாயத்துக்கூடாக ஆச்சியின் வீட்டிற்குப் போனார்கள். போகும் போதே சாம்பிராணிப் புகையின் சுகந்தம் அவர்களது மூக்கைக் துளைத்தது. வீட்டின் விறாந்தைப் படிகளில் ஏறினார்கள். உள்ளிருந்து ஆச்சி முச்சக்கர கதிரையில் வைத்து ஒரு நலிந்த உருவத்தை உருட்டிக் கொண்டு வந்தாள். சுகன்யா உற்றுப்பார்த்தாள்.

நலிந்த அந்த உருவத்துக்கு தலைமயிர் ஒட்டவெட்டப் பட்டிருந்து. அகன்ற செவிகளுடன் குறுகுறுவென்று பார்த்துக்கொண்டிருந்த அந்த முகத்துக்கு நிறையப் பவுடர் பூசப்பட்டு ஒரு பொம்மை போல் காட்சியளித்தது. சுகன்யா அதிசயத்துடன் அவரை வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன பாக்கிறீர் பிள்ளை. இவர் தான் என்னுடைய குழந்தை. மனிசருக்கு வயது போயிட்டால் குழந்தையாகி விடுவினம் என்று சொல்லுறவை. இவரும் அப்பிடித்தான். இப்பதான் முழுக வாத்துக் கொண்டு வந்தனான்.

கையில் ஒரு சுப்பைக் கொடுத்து பக்குவமாய் ஊத்தாமல் குடியுங்கோ என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள். அவரும் ஒரு குழந்தையைப் போலவே இரு கைகளாலும் பொத்திப் பிடித்துக் கொண்டு சிறிது சிறிதாக குடித்தார். முழுகினது வயித்துக்கை வாய்வு விழுந்திடும். அதுதான் சூப் குடுத்தனான்.

பாமினி வந்த விடயத்தை ஆச்சியிடம் சொல்ல அவள் தட்டங்களை எடுத்து வர உள்ளே போனாள்.

சுகன்யா, ஆச்சியின் குழந்தையை மனத்திரையில் படம் பிடித்துக் கொண்டாள்.

**மலரன்னை**

# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்

# தமிழ் நாட்டிற்கும் எமக்குமான உறவைப் பலப்படுத்த பழைய நினைவுகளுடன் வானில் பறப்போம்



இலங்கையில் 41 வருடங்களுக்கு பின் மீண்டும் தொடங்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், இன்றையச் சூழலில் தமிழக மக்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் இடையில் உள்ள உறவினை மேலும் பலப்படுத்துமா?

1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானிய படைகளால் முதல் முறையாக யாழ்ப்பாணம் பலாலி பிரதேசத்தில் விமான நிலையம் அமைக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பலாலி விமான நிலையம் இலங்கை படையினரிடம் கையளிக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு முதல் முறையாக பலாலியில் இருந்து இந்தியாவிற்கு விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தம்



காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவிற்கான விமான பயணம் தடைப்பட்டது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குகொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவிற்கான விமானசேவையினை ஆரம்பிக்குமாறு இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களிடம் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய 2016ஆம் ஆண்டு சென்னை விமான நிலைய பணிப்பாளர் தீபக்சாஸ்திரி தலைமையில் ஒரு குழு யாழ்ப்பாணம் பலாலிக்கு பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்ததுடன், தற்பொழுது பலாலி விமான நிலையம் அமைந்துள்ள நிலப்பரப்பை கொண்டே இந்தியாவிற்கான விமான சேவையை ஆரம்பிக்க முடியும் என தெரிவித்திருந்தனர்.

அதன் பின்னர் படிப்படியாக பேசி இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் யாழ்ப்பாணம் - இந்தியா விமான சேவைக்கான விமான நிலைய நிர்மான பணிகளை ஆரம்பித்தனர்.

விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் 1950 மில்லியன் ரூபாய் நிதியும் இந்திய அரசாங்கத்தின் 300 மில்லியன் ரூபாய் நிதியும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று கட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படும் இத்திட்டத்தின் முதலாவது கட்டம் நிறைவடைந்து பிரதான ஓடு பாதை 950 மீற்றர் அளவில் புதிதாக அமைக்கப்பட்டு விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தின் ஊடாக கடந்த காலத்தில் தமிழ் நாட்டுக்கு பயணம் செய்த மக்கள் தமது அனுபவத்தையும் தற்போதைய மன நிலையையும் பகிர்ந்து கொண்டனர்.

"யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என பெயர் மாற்றம் பெற்றுள்ள இந்த பலாலி விமான நிலையம் எனது தந்தையார் காலத்தில் இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டனை சேர்ந்தவர்களால் அமைக்கப்பட்டது.

எனது தந்தையார் விமான நிலைய ஓடுபாதை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டார்." என கூறும் வலி. வடக்கு மீள் குடியேற்ற குழுவின் தலைவர் அ. குணபாலசிங்கம் பிரிட்டனை சேர்ந்தவர்கள் யுத்தத்திற்காக விமானங்களை பயன்படுத்தியதை தான் அறிந்திருந்ததாகவும் கூறுகிறார்.

"1957 அல்லது 1958 இல் நானும் எனது தந்தையாரும் எயார் சிலோன் டாகோட்டா விமானத்தில் இந்த விமான நிலையம் ஊடாக திருச்சிக்கு சென்றோம், அப்போது பயணச்சீட்டு 40 ரூபாய் ஆகவும் கொழும்புக்கான பயணச்சீட்டு 45 ரூபாயாகவும் இருந்தது." என்கிறார் குணபாலசிங்கம்.

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையில் தான் சைக்கிள் ஓட்டிப்பழகிய அந்த பசுமை நினைவுகளையும் அவர் நம்முடன் பகிர்ந்து கொண்டார். அந்த காலத்தில் விமான நிலையம் என்ற கெடுபிடிகள் இன்றி அச்சமின்றி இயங்கியதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

காலப்போக்கில் அவ்றோ விமானம் இங்கு வந்தது. அது கொழும்புக்கு 40 நிமிடத்தில் சென்றுவிடும். இப்போது உள்ள கட்டுநாயக்கா விமான நிலையம் அப்போது இல்லை இரத்மலானை விமான நிலையம்தான் இருந்தது என்கிறார் குணபாலசிங்கம்.

**பயணம் இலகுவாகும்**

"தற்போது சராசரியாக 180இலிருந்து 220 பேருக்கு இந்திய துணைத்தூதரகம் விசா வழங்குகிறது. அத்தனை பேரும் கொழும்பு சென்று அங்கு தங்கி, இந்தியாவிற்கான பயணத்தை மேற்கொள்கிறார்கள். இது வீண் அலைச்சல் மற்றும் பல ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படுகிறது. இந்த யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டதன் மூலம் இது இலகுவாக்கபட்டுள்ளது." என்கிறார் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம்.

"1958ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலையில் யாழ்ப்பணத்திலிருந்து திருச்சி சென்று மலைக்கோட்டை பிள்ளையாரை வணங்கிவிட்டு மாலையில் யாழ்ப்பாணம் திரும்பி வந்த ஞாபகம் உள்ளது." என்கிறார்.




**படிப்பிற்கான பயணம்**

"அந்தக்காலத்தில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழங்களில் 20 முதல் 30 பேரைத்தான் கல்வி கற்க எடுத்து கொள்வார்கள். ஆகையால் நிறையப்பேர் இந்தியா சென்று படிப்பை தொடர்வதுண்டு. அப்போது இந்த விமான நிலையம் ஊடாகதான் விமானப்பயணத்தினை மேற்கொண்டனர்." என்று கூறுகிறார் ந.செல்லக்குட்டி.

"நானும் அவ்வாறு இந்தியா சென்று கல்வி கற்றேன். நான் படித்த கல்லூரிக்கு அருகில் தான் பலாலி விமான நிலையம் இருந்தது. ஆகையால் நான் பயணத்திற்கு சிரமப்படவில்லை" என தனது கடந்த கால விமான நிலைய அனுபவத்தை பகிர்கிறார் செல்லக்குட்டி.

நீண்ட காலமாக இந்த விமான நிலையம் மூடப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது இது மீளவும் திறக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நான் மீளவும் இந்தியாவிற்கு இந்த விமான நிலையத்தின் ஊடாக செல்லவேண்டும் என்ற ஆசை தோன்றியுள்ளதாக செல்லக்குட்டி கூறுகிறார்.

"1968இல் திருச்சிக்கு இந்த விமான நிலையம் வழியாக சென்ற நான் திரும்ப வரும்போது கப்பலில் வந்தேன். தற்போது மீண்டும் விமான நிலையம் திறக்கப்பட்டு பயணச்சேவை ஆரம்பிக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது என்கிறார் கு. திரேஸ்மலர். இந்த விமான நிலையத்தை ஆரம்பித்து தமிழ் நாட்டுக்கும் எமக்கும் இடையில் ஓர் உறவுப்பாலத்தை ஏற்படுத்திய இந்திய இலங்கை அரசுகளுக்கு நன்றிகள்" என்கிறார் திரேஸ்மலர்.

BBC


# எறும்பு தின்னியின் கதைமுடித்த கடத்தல்காரர்கள்

ஒரு தொன் செதில்கள் கிடைக்க வேண்டுமானால் 1900 எறும்புத்தின்னிகளைக் கொல்ல வேண்டும். கடைசி சில வருடங்களில் மட்டும் 48 தொன்எறும்புத்தின்னி செதில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன். கைப்பற்றப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்ட அளவுதான் 48 தொன்.

மனிதன் ஒரு மகத்தான சல்லிப்பயல்" என்கிற ஜி.நாகராஜனின் வரி ஒன்று உண்டு. ஏன், எதற்கு, என்கிற எந்தக் காரணமும் இல்லாமல் ஓர் உயிரினத்தைத் தொடர்ந்து மனிதன் துரத்திக்கொண்டே இருக்கிறான். அதன் இறைச்சி உடலுக்கு நல்லது. அதனுடைய செதில்களில் மருந்து இருக்கிறது என எங்கோ யாரோ ஒரு மனிதன் கிளப்பிவிட்ட வதந்தி இன்று ஓர் உயிரினத்தை ஓட ஓட துரத்திக்கொண்டிருக்கிறது. சர்வைவல் விடயத்தில் வாய் இல்லாத ஜீவன்களின் வரிசையில் இது வாழ்க்கையே இல்லாத ஜீவன் எறும்புத்தின்னி.

சாதுவான உயிரினம் எறும்புத்தின்னி. சாதாரணமாக நம்முடைய காடுகளில் திரிகிற உயிரினம். அதன் சர்வைவல் கதைகளில் எதிரியாக இருப்பது மனித இனம். மற்ற விலங்குகளிடமிருந்து தப்பிப்பிழைக்கிற எறும்புத்தின்னிகள் மனித இனத்திடம் சிக்கிக்கொள்வது தான்வேதனை. உலகில் மொத்தம் எட்டு வகையான எறும்புத் தின்னி வகைகள் உள்ளன. அதில் நான்கு வகையான எறும்புத்தின்னி கள் ஆப்பிரிக்காவிலும், நான்கு வகையான எறும்புத்தின்னிகள் ஆசியாவிலும் உள்ளன.

பூச்சிகளையும் எறும்புகளையும் தன் மோப்ப சக்தியின் மூலம் கண்டறியும் குணம் கொண்டவை இவை. நிலத்தடியில் 3 முதல் 5 மீற்றர் ஆழத்தில் வாழும் எறும்பினங்களை கண்டறிந்து, தோண்டி உட்கொள்ளும். எறும்புத் தின்னிகளுக்குப் பார்வைத்திறன் மிகக் குறைவு. எனினும் இவற்றின் மோப்ப சக்தியாலும், கேட்கும் திறனாலும் இவை தமது உணவைக் தேடிக் கண்டறியும் குணமுடையவை எறும்புத் தின்னிகள் நன்கு நீந்தும் ஆற்றல் கொண்டவை. எதிரிகளைக் கண்டு கொண்டால், உடலைப் பந்து போன்று சுருட்டி வைத்துக் கொண்டு தம்மைக் காத்



துக்கொள்ளும் குணமுடையவை. எறும்புத்தின்னியில் சில இனங்கள் மரமேறிகளாக உள்ளன. ஊனுண்ணி வகையைச் சார்ந்த எறும்புத் தின்னிகள் நீண்ட நாக்கு மூலம் எறும்புகளையும், பூச்சிகளையும் தூரத்தில் இருந்தவாறே பிடித்து உட்கொள்ளும். எறும்புத்தின்னியின் நாக்கின் நீளம் அதன் உடல் நீளத்தை விட அதிகமானது.

மனிதன், அவனுக்கு என்ன தேவையோ அதை எந்த ஈவு இரக்கம் பார்க்காமல் தன்னுடைய சக்தியைப் பயன்படுத்தி எடுத்துக் கொள்வான். காசு என்கிற விடயத்தில், தன்னைச் சார்ந்த இனத்திடமே அவன் கருணையெல்லாம் பார்க்க மாட்டான், விலங்குகளிடமா பார்க்கப் போகிறான்.

கடந்த பத்து வருடங்களில் அதிகமாகக் கொல்லப்பட்ட விலங்கு எறும்புத்தின்னி என்கிறது உலகளாவிய தரவுகள். அப்படி உலகம் முழுக்க வேட்டையாடப்பட்டுக் கொல்லப்படும் எறும்புத்தின்னிகளிடம் அப்படி என்ன சக்தி இருக்கிறது? எதற்காகப் பல கோடிகளில் அதன் செதில் விலை போகிறது என்கிற கேள்வி எழலாம். எறும்புத்தின்னியின் செதில்கள் கெரட்டின் என்கிற வேதிப் பொருளால் ஆனவை. மனித நகங்களில் இருக்கிற அதே வேதிப் பொருள்தான். செதில்களைச் சூப்பாக வைத்துக் குடித்தால் ஆண்மை பெருகுகிறது என்கிற மூட நம்பிக்கை காலம்தொட்டு நம்பப்படுவதால் குறிவைத்து அதை கடத்திக் கொண்டிருக்கிறார்கள். எறும்புத்தின்னியின் இறைச்சியை உணவாக உண்பதால் பல நோய்கள் குணமாகிறது என்று நம்பப்படுவதால் அதன் இறைச்சியை வாங்கி விற்கவும் தனியாக குழுக்கள் செயற்படுகின்றன. உண்மையில் எறும்புத் தின்னியின் செதில்களிலும் அதனுடைய இறைச்சியிலும் எந்தமருத்துவக்குணமும்இல்லை என அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், மனித இனம் அறிவியலை எல்லா விடயங்களுக்கும் நம்பிவிடுவதில்லை. கடத்தப்படுகிற 70 சதவிகித செதில்களும் அதனுடைய இறைச்சியும் சீனாவிற்கும் வியட்நாமிற்கும் கடத்தப்படுகின்றன. கடைசியாக இந்த மாதம் 14-ம் திகதி 4 தொன் எறும்புத்தின்னி செதில்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

ஒரு தொன் செதில்கள் கிடைக்க வேண்டுமானால் 1900 எறும்புத்தின்னிகளைக் கொல்ல வேண்டும். கடைசி சில வருடங்களில் மட்டும் 48 தொன் எறும்புத்தின்னி செதில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்ட அளவுதான் 48 தொன். கடத்தப்பட்ட செதில்கள் எடையை விட அவற்றின் இறைச்சி எங்கு கடத்தப்பட்டது, எவ்வளவு கடத்தப்பட்டது என்பதெல்லாம் ஆண்டவனுக்கே வெளிச்சம். கணக்கில் வராமல், சரியான கைகளுக்குச் சென்ற எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம்.

இன்றைய திகதியில் எறும்புத்தின்னி என்றால் பணம் என்கிற அளவிற்கு அதனுடைய விலையை கள்ளச்சந்தையில் உயர்த்தி வைத்திருக்கிறார்கள். உயிருடன் பிடிக்கப்படுகிற எறும்புத்தின்னிகளின் கண்களை முதலில் குருடாக்குகிறார்கள், அவற்றை உயிரோடு வேக வைத்து பிறகு அதன் செதில்களைப் பிரித்து எடுக்கிறார்கள். செதில்களுக்குத் தனி விலை, இறைச்சிக்குத் தனி விலை என நிர்ணயிக்கப்பட்டு கள்ளச் சந்தைக்கு வருகிற ஒரு கிலோ செதில்களின் விலை மட்டுமே பல ஆயிரம்டொலர்களைத்தொடுகிறது. சாலை, கடல், வான் என எல்லா வழிகளிலும் கடத்தல் நடக்கிறது. எல்லாவற்றிற்கும் எல்லா இடத்திலும் அதிகாரம் படைத்த ஒரு மனிதன் துணையாக இருந்து கொண்டிருக்கிறான். உலகில் நைஜீரியாவில் இருந்துதான் அதிகமாக எறும்புத்தின்னிகள் கொல்லப்பட்டு கடத்தப்படுகின்றன. பல நாடுகளின் துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் கைப்பற்றப்பட்ட செதில்கள் எல்லாமே நைஜீரியாவிலிருந்து கடத்தப்பட்டவை என்கின்றன செய்திகள். 2014 ஆம்ஆண்டு தரவுகளின் படி, அதற்கு முந்தைய 10 வருடங்களில் மட்டும் 1 மில்லியன் எறும்புத்தின்னிகள் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது . பாலூட்டிகளில் அதிகம் கடத்தப்படும் உயிரினம் எறும்புத்தின்னி தான்.

கள்ளச்சந்தை முன்பு யானைத் தந்தங்களை குறிவைத்து நடந்தது. பல்வேறு நாடுகளும் யானைத் தந்தம் கடத்துவதைத் தடுத்தன. பல நாடுகள் தீவிரமாக கண்காணித்து கடுமையான தண்டனைகள் வழங்கின. சீனா யானைத் தந்த கடத்தலைச் சட்டவிரோதம் என அறிவித்தது. விளைவு கள்ளச் சந்தை தள்ளாட ஆரம்பித்தது. விலங்குகள் கள்ளச்சந்தை எப்போதும் ஒன்றைக் குறிவைத்து நடந்துகொண்டே இருக்கும். கள்ளச்சந்தை தொடர்ந்து செயல்பட்டால்தான் அதைச் சார்ந்தவர்களின் பிழைப்பு நடக்கும். எளிதில் சிக்கக்கூடிய உயிரினங்களான சுலபமான வாய்ப்பாகப் பார்க்கப்பட்டன.

அதற்கேற்ப போலி மருத்துவ குணங்கள் தாண்டி உணவுக்காகவும் அவை வேட்டையாடப் பட்டன. எறும்புத்தின்னிகளுக்கென தனிச்சந்தை உருவானது, அதற்கென டிமாண்டை உருவாக்கினார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், எறும்புத்தின்னிகளை வணிகம் செய்ய உலகம் முழுக்கத் தடை செய்யப்பட்டது. ஒரு கட்டத்தில் யானைகளின் தந்தம் மறையத் தொடங்கியது போல், சில வகை எறும்புத் தின்னிகளில் செதில்கள் இல்லாமலும் பிறக்கும் காலம் வரும். அடுத்து இன்னோர் உயிரினம் பலி கொடுக்கப்படும்.

# குர்திஷ்கள் ஒன்றும் ஏஞ்சல்கள் கிடையாது சர்ச்சையில் சிக்கிய ரொனால்ட் ட்ரம்ப்



இரத்த பூமியான சிரியாவில் சிறிய அளவில் தொடங்கிய போராட்டம் பின் கலவரமாக மாறி, பெரும் உள்நாட்டுப் போராக வெடித்தது. அங்குள்ள கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே கடந்த 9 ஆண்டுகளாகப் போர் நடைபெற்று வருகிறது. சிரிய அரசுப் படைக்கு ரஷ்யாவும் கிளர்ச்சி படைக்கு அமெரிக்காவும் ஆதரவு அளித்து வருகின்றன.

சமீபத்தில், சிரியாவில் இருந்த தன் நாட்டு இராணுவப்படைகளைத் திரும்பப் பெற்றுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப். முடிவே இல்லாமல் பல வருடங்களாக நடக்கும் போருக்கு எங்கள் நாட்டுப் படைகளை அனுப்ப முடியாது' என அவர் விளக்கமளித்திருந்தார். இதை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட துருக்கி, கடந்த சில நாட்களாக சிரியா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

துருக்கிக்கு எதிராகப் போரிட சிரியா அரசுப் படையின் உதவியை நாடியுள்ளது குர்திஷ். சிரியா படைக்கு ரஷ்யாவின் ஆதரவு இருப்பதால் இரு படையைச் சேர்ந்த வீரர்களும் சிரியாவின் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் உள்நாட்டுப் போர், இரு நாடுகளுக்கும் இடையேயான போராக மாறும் அபாயம் நிலவுகிறது.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய துருக்கி அதிபர் தயீப் எர்டோகன், குர்திஷ் படைகள் தங்கள் சிறையில் உள்ள ஐ.எஸ் பயங்கரவாதிகளைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். சிறையில் இருக்கும் பயங்கரவாதிகளை அவர்களே விடுதலை செய்து வருகின்றனர். சிரியாவில் துருக்கியின் பாதுகாப்பு வளையத்தை அமைக்கும்வரை எந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை. அமெரிக்காவின் பொருளாதாரத் தடை பற்றி எந்தக் கவலையும் இல்லை" என்று பேசியுள்ளார்.

குர்திஷ் பற்றி செய்தியாளர்களிடம் பேசியுள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அமெரிக்க வெள்ளை மாளிகை ஒன்றும் காவலர் கிடையாது, சிரியாவில் உள்ள அமெரிக்க படைகள் தாயகம் திரும்பும் நேரம் இது. நம்முடன் சேர்ந்து போரிட்டபோது குர்திஷ்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். ஆனால், தற்போது தனியாகப் போரிடும்போது அவர்கள் சிறப்பாகச் செயற்படவில்லை. சிரியாவில் துருக்கி ஊடுருவியிருப்பது என் எல்லைக்கு உட்பட்ட தல்ல, அதேபோல் குர்திஷ்கள் ஒன்றும் ஏஞ்சல்கள் இல்லை. துருக்கியில் குர்திஷ் தன்னாட்சிக்காகப் போராடி வரும் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி, பயங்கரவாத ஐ.எஸ் அமைப்பைவிட மிகவும் மோசமானது" எனக் கூறியுள்ளார். ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கும் கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

# இந்தியா - சீனா தலைவர்கள் சந்திப்பு

# என்ன நடந்தது என்ன நடக்கப் போகிறது

வந்தார்கள், பேசினார்கள், சென்றுவிட்டார்கள். மற்றபடி, இன்னன்ன விடயங்கள் பேசினோம், இன்னன்ன திட்டங்கள் தீட்டியுள்ளோம், இத்தனை ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளோம் என்று நரேந்திரமோடியோ ஜின்பிங்கோ தனித்தனியாகவோ இணைந்தோ திட்டவட்டமாக எதையுமே அறிவிக்கவில்லை. 'நண்பர்கள் போல் மனம்விட்டுப் பேசினோம்', 'இரு நாடுகளின் உறவில் புதியசகாப்தம் தொடங்கியிருக்கிறது', 'வேறுபாடுகள் மறந்து ஒன்றாக நடைபோடுவோம்' என்று 'லாலாலா... லாலா லாலாலா' ரீதியிலான அறிக்கைகள் மட்டுமே இருதரப்பிலிருந்தும் வெளிவந்திருக்கின்றன.



### என்ன நடந்தது?

இதன் பொருள், இந்தச் சந்திப்பு பலனற்றது என் பதல்ல. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளைப் பலப்படுத்தும் முயற்சிகளை இரு நாடுகளும் இனி முனைப்புடன் மேற்கொள்ளும் என இந்தியா நம்புகிறது.

அதிகாரபூர்வமற்ற சந்திப்புகள், எந்த வாக்குறுதிகளையும் அளிப்பதில்லை. இது அனைவருக்கும் தெரிந்ததுதான். எனினும் உலகின் இரு பெரும் நாடு களின் பலமிக்க தலைவர்கள் சந்தித்துக் கொள்ளும் போது எதிர்பார்ப்புகள் இல்லாமலிருக்குமா? அவர்கள், நிச்சயம் இதையெல்லாம்தான் பேசப் போகிறார்கள் என்று மாமல்லபுரச் சந்திப்புக்கு முன்பும், அவர்கள் இதையெல்லாம்தான் பேசியிருக்கிறார்கள் என்று மாமல்லபுரச் சந்திப்புக்குப் பிறகும் விரிவான அனுமானங்களும் அலசல்களும் நான்கு பக்கங் களிலிருந்தும் பறந்துவந்தன.

அவற்றுள் எது சரி, எது தவறு என்பது சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டுமே தெரியும்.

### என்ன நடக்கவில்லை?

என்ன விவாதித்தார்கள் என்பதைவிட என்ன விவாதிக்கவில்லை என்பதை இரு தரப்பினரும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சீன அதிபர் இந்தியா வருவதற்கு இரு தினாங்களுக்கு முன்பு, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பெய்ஜிங் சென்றிருக்கிறார். 'காஷ்மீர் விவகாரத்தை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்துவருகிறோம். ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்களின் படியும் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான ஒப்பந்தங்களின்படியும் காஷ்மீர் சிக்கல் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும். சூழலைக் கடினமாக்கும் நடவடிக்கைகளை சீனா எதிர்க்கிறது' என்கிறது சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை.

எனில், ஜின்பிங் மோடியிடம் மேலதிகம் ஏதாவது பேசினாரா, காஷ்மீர் பற்றிய தன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினாரா, அதில் அவர் இந்தியாவின் பக்கமா அல்லது பாகிஸ்தானின் பக்கமா? தெரிய வில்லை. 'இம்ரான் கான் சீனா வந்ததை மட்டும் மோடியிடம் தெரியப்படுத்தினேன். மேற்கொண்டு எதுவும் பேசவில்லை' என்றார் ஜின்பிங். 'காஷ்மீர், எங்கள் உள்நாட்டு விவகாரம். அதில் சீனா உட்பட யாரும் தலையிடுவதை நாங்கள் விரும்ப மாட்டோம்' என்பதுதான் மோடியின் நிலைப்பாடு. இதை அவர் ஜின்பிங்கிடம் தெரிவித்தாரா? அவருடைய ஒப்புதலைப் பெற்றாரா? 'காஷ்மீர் என்னும் பெயரே எங்கள் விவாதத்தில் இடம்பெறவில்லை' என்கிறது இந்தியா.

இந்தியா, சீனா இரண்டும் உரிமைகோரும் சர்ச்சைக்குரிய எல்லைப் பிரதேசங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதா? அதுவும் தெரியவில்லை. இந்தியா, சீனா, பூட்டான் மூன்று நாடுகளும் சந்தித்துக்கொள்ளும் டோக்லாம் எல்லைப் பகுதியில் 2017 ஆம் ஆண்டில் சீனா தன்னிச்சையாக சாலை அமைக்கும் பணியில் இறங்கியது. அப்போது, இந்திய இராணுவம் பூட்டானுக்கு ஆதரவாகவும் சீனாவுக்கு எதிராகவும் நின்றது. பதற்றம் கலைந்து, நிலைமை இயல்பாவதற்கு 70 தினாங்கள் ஆகின. கடந்த ஆண்டு வுஹானில் மோடியும் ஜின்பிங்கும் அதிகாரபூர்வமற்ற முறையில் சந்தித்துக் கைகுலுக்கிக்கொண்டதன் தொடர்ச்சியாக இரு நாடுகளும் டோக்லாமைக் கடந்துசெல்ல முடிவெடுத்தன. அதன் தொடர்ச்சியாகவே இரண்டாவது சந்திப்பு மாமல்லபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

### இந்தியா-சீனா-அமெரிக்கா யாருக்கு இலாபம்?

அமெரிக்காவுக்கும் கிட்டத்தட்ட இதே அணுகுமுறைதான். சீனா என்றாலே காலில் வெந்நீர் கொட்டிக் கொண்டதைப்போல் துள்ளுபவர் அதிபர் டொனால்ட் ட்ரம்ப். திங்கட்கிழமை காலையில் தூங்கி எழுந்ததும் அவர் அளிக்கும் உறுதிமொழி அன்று மதியம் வரை நிலைத்திருந்தாலே பெரிய விடயம். இருந்தாலும் நம்பிக்கை இழக்காமல் அவரையும் மெல்ல மெல்ல அசைத்துக்கொண்டுதான் இருக்கிறது சீனா. வெறுப்பையும் கோபத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு, இந்த நிமிடம் வரை சீன அதிகாரிகள் வெள்ளை மாளிகையுடன் வர்த்தக உரையாடல்களை நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் விழுந்திருக்கும் இடைவெளியை நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியுமா எனப் பார்க்கிறார் மோடி. அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவைப் பலப்படுத்திக் கொண்டால் சீனாவுக்குச் செல்லவேண்டிய வாய்ப்புகள் நமக்குக் கிடைக்கும் அல்லவா? சில வாரங்களுக்கு முன்பு டெக்சாஸ் சென்றதும், 'அப் கீ பார் ட்ரம்ப் சர்க்கார்' என்று அவர் முழங்கியதும் இதை மனதில்வைத்துதான். தவிர, ஜின்பிங் வழியில் சீனா, அமெரிக்கா இருவருடனும் ஒரே சமயத்தில் நெருக்கமாக இருக்க முடியுமானால், இரு தரப்பினரிடமிருந்தும் பலன்களை ஈட்டிக்கொள்ள முடியுமல்லவா?

ஜின்பிங் சென்னையில் இருந்த அதேநேரம், அமெரிக்க செனெட்டர் ஒருவர் டில்லிக்கு வந்திருந்தார். ஜின்பிங் விமானம் ஏறிக் கிளம்புவதற்குள் அவர் இந்தியாவின் கையைப் பிடித்து முறுக்க ஆரம்பித்துவிட்டார். 'நீங்கள் என்ன பேசினீர்களோ, ஏது பேசினீர்களோ எங்களுக்குத் தெரியாது. ஹுவேயை இந்தியாவுக்குள் அனுமதித்தால், நம் உறவில் விரிசில் ஏற்பட்டுவிடும். எங்களிடமிருந்து எந்த உளவுத் தகவலும் உங்களுக்குக் கிடைக்காமல்போகும். ஜாக்கிரதை!' என்ற ரீதியில் அவர் எச்சரித்திருக்கிறார்.

சீனாவை இதேபோல் அமெரிக்காவோ இந்தியாவோ பாகிஸ்தானோ அல்லது வேறு எந்த நாடோ கையைப் பிடித்து முறுக்க முடியாது என்பதுதான் சீனாவின் மிகப்பெரிய பலம்.

### இந்திய - சீன வேற்றுமைகள் என்னென்ன?

ஜின்பிங், மோடி

ஒற்றுமைகளைவிடவும் அடிப்படை வேறுபாடுகள் கூர்மையானவை. பொருளாதார ரீதியில் சீனா பத்திரமாக இருக்கிறது. இந்தியாவோ வேலையில்லாத் திண்டாட்டம், உற்பத்திக் குலைவு, சரியும் தனிநபர் வருமானம் என, பொருளாதார நெருக்கடியில் தவிக்கிறது. பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி ஆகிய அதிரடிகள் நிலைமையைச் சிக்கலாக்கியுள்ளன. இந்திய ரூபாயின் மதிப்பு கவலையளிக்கிறது. சீனாவோ, டொலரின் இடத்தில் யுவானை நிறுத்தினால் எப்படியிருக்கும் என ஒய்யாரமாகக் கனவு காண்கிறது.

சீனாவும் அமெரிக்காவைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லைதான். அதேசமயம், ரஷ்யாவுடனான தனது நெருக்கத்தை ஒவ்வொரு நாளும் அதிகரிப்பதன்மூலம் அமெரிக்காவுக்கு கிலியை ஏற்படுத்தும் ஆற்றல் சீனாவுக்கு இருக்கிறது.

ஒரு சந்தையை இழந்தாலும் வேறோர் இடத்தில் சமன் செய்துகொள்ள சீனாவால் முடியும். இந்தியாவுக்கு இது சாத்திய மில்லை. எடுத்துக்காட்டுக்கு, உலகம் தழுவிய அளவில் சீனா முன்னெடுத்துவரும் மாபெரும் கட்டுமானப் பணித்திட்டத்தை (பெல்ட் அண்ட் ரோடு இனிஷியேட்டிவ்) இந்தியா எதிர்க்கிறது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரும் இந்தத் திட்டத்தின்கீழ் வருவது ஒரு காரணம். சீனாவின் இந்தத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்பது இந்தியா சொல்லும் இரண்டாவது காரணம். பெல்ட் அண்ட் ரோடுக்கு வெளியில் ஏதேனும் கட்டுமானப் பணி ஸ்ரீகளைத் தொடாங்கினால் மட்டுமே இணைந்து பணி யாற்றத் தயார் என்கிறது இந்தியா.

அறிவியல், தொழில்நுட்பம், வர்த்தகம், கட்டுமான வசதிகள், ஏழ்மை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு, கல்வி, வேலை வாய்ப்பு என எதில் ஒப்பிட்டாலும் ஜின்பிங்கின் சீனா, மோடியின் இந்தியாவைவிட பல மடங்கு சிறப்பானதாக, பல மடங்கு முன்னேறியதாக இருக்கிறது.

மாமல்லபுரத்திலிருந்து ஜின்பிங் நேராக நேபாளம் சென்றிருக்கிறார். 2015ஆம் ஆண்டு அதிகாரபூர்வமற்ற முறையில் நேபாளத்தின்மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது மோடியின் இந்தியா. அதன் பிறகு இந்தியாவிடமிருந்து விலகி நின்ற நேபாளம், இப்போது ஜின்பிங்கின் அர வணைப்புக்குள் தஞ்சம் புகுந்திருக்கிறது. 23 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக ஒரு சீன அதிபரை நேபாளம் வரவேற்கிறது.

பெரும்கட்டுமானப் பணிகளை நேபாளத்தில் தொடங்க விருக்கிறார் ஜின்பிங். மாமல்லபுரத்திலிருந்து மோடியின் கவனம் மகாராஷ்டிரத்துக்குத் திரும்பியிருக்கிறது. எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு மாபெரும் பேரணிகள் அவருக்காகத் திட்டமிடப்பட்டுள்ளன.

ஜின்பிங்கும் மோடியும் அடுத்து சீனாவில் மூன்றாவது முறையாக நட்புரீதியில் சந்தித்துக்கொள்ள இருக்கிறார்கள்.


இப்போதுபோல் அப்போதும் சந்திப் புக்கு முன்பும் பின்பும் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளும் அலசல்களும் உலகமெங்கும் நிகழும்.

ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். அடுத்த சந்திப்புக்குள் ஜின்பிங்கின் சீனா இன்னும் சில அடிகள் முன்னோக்கிப் பாய்ந்திருக்கும்.

ஜுனியர் விகடன்.

# ஆறாம் நிலம்

## -ஒரு நோக்கு-




IBC தமிழ் வழங்கும் ஆனந்த ரமணன் எழுத்துருவாக்கத்தில் உருவான ஆறாம் நிலம் கடந்த 14 ஆம் திகதி மாலை 5:00 க்கு "புதிய ராஜா" திரை அரங்கில் மண்டபம் நிறைந்த ரசிகர்களோடு திரையிடப்பட்டது.

எங்கள் மண்ணில் தென் இந்திய படங்களை எடுப்பவர் மத்தியில் இது எங்கள் மண்ணில் எடுக்கப்பட்ட 'எங்கள் சினிமா' என்ற ஒரே தகுதி போதும் இதன் வெற்றியை நிர்ணயிக்க.

எங்கள் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட கதை. மொழி நடையும் (Slang) படு சுத்தமாக எங்களுடையதே.

எந்த விதமான 'லாஜிக்கும்' இல்லாமால் வழக்கமாக தமிழ்ப் படங்களில் கதையிடையே வந்து போகும் பாடல் காட்சிகள் வேண்டுமேன்றே தவிர்க்கப்பட்டுள்ளன.

மூன்று மணித்தியாலங்கள் என்ற வழக்கமான சட்டகத்திற்கு இழுத்து நீட்டாமல் கதைக்குத் தேவையான நேரத்திற்குள் படத்தை நிறைவு செய்து தனித்துவம் பேணப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களும், மூன்று வருடங்கள் தாண்டி நீட்சியடையும் அவர்களுக்கான போராட்டமும்தான் இன்று எமக்கிடையே எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினை (Burning issue). இதையே கதையின் கருவாக கொண்டதன் மூலம் ஒரு நல்ல கலைஞன் தான் சார்ந்த சமூகத்தில் பிரக்ஞையோடு இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒரு மனைவி கணவனை இழப்பதைவிட ஒரு சிறுமி அப்பாவை இழப்பது கொடூரமானது என்பதை புரிந்துகொண்டு அந்த சிறுமியின் பாத்திரம் வார்க்கப்பட்டுள்ளது.

மகளையும் மாமியையும் காப்பாற்றுவதற்காக ஆபத்து நிறைந்த கண்ணி வெடி அகற்றும் தொழிலை மேற்கொள்ளும் மனைவி. அவளுக்கு மறுவாழ்வு கொடுக்க தயாராக உள்ள சகபாடியான சங்கர். கணவனாக மட்டுமல்லாது அப்பாவை இழந்து தவிக்கும் அந்த சிறுமிக்கு நல்ல அப்பாவாகவும் இருப்பேன் என்று இறுதிக்காட்சியில் பூடகமாக வெளிப்படுத்தியது அருமை.

அந்த இடத்தில் சினிமா என்பது ஒரு "காண்பிய ஊடகம்" (Visual media) என்பதை துல்லியமாகப் புரிந்துகொண்டு உரையாடல்களால் கதையை நகர்த்தாமல் காட்சிகளால் நகர்த்திச் சென்றது சிறப்பம்சமாகும்.

தேர்ந்த நடிகனாக சங்கரின் உடல் மொழிகள் இதை சாத்தியமாக்கியுள்ளது.

சிறுமி பிரதான வீதியைக் கடக்கும்போதெல்லாம் எதிரேயுள்ள விளம்பரப் பதாகையில் மகளை உந்துருளியில் ஏற்றிச் செல்லும் அப்பாவின் படத்தை ஏக்கத்துடன் பார்த்தபடி செல்வதும்.

அதுவே விபத்திற்கான காரணமாக அமைந்துவிடுவதும் கதையின் நகர்வை இயல்பாக்கியுள்ளது. இங்கே கதாசிரியரின் திறமை மிளிர்கிறது.

இறுதிக் காட்சியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த சிறுமி மயக்கம் தெளிந்து கண்களை அரை குறையாகத் திறந்த நிலையில் "அப்பா வருவாரா?" என்று அம்மாவிடம் கேட்கும்போது இதயம் சுக்கு நூறாக உடைந்து போகிறது.

காணாமல் ஆக்கப்பட்டு கணவனை இழந்த இளம் முன்னாள் போராளிக்கு நன்றிகெட்ட இந்த சமூகம் கொடுக்கும் பாலியல் தொந்தரவுகள் சித்தரிக்கப்பட்ட விதம் அருமை.

தொழில் நுட்ப விடயங்களில் தென்இந்திய சினிமாவிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இருந்தபோதும் படத்தின் சிறப்பை அது ஒன்றும் பெரிதாக பாதித்ததாக தெரியவில்லை.

இது முன்னோட்டமாக இலவசமாகவே திரையிடப்பட்டது. வர்த்தக ரீதியில் திரையிடப்படும்போது நாமெல்லோரும் குடும்பமாகச் சென்று ஆதரவை கொடுத்து வர்த்தக ரீதியில் வெற்றி பெறச்செய்ய வேண்டும்.

இது எங்களின் குழந்தை நாங்கள்தான் அரவணைத்து வளர்க்க வேண்டும். எங்களுக்கென்று தனித்துவமான தரமான சினிமா வேண்டும் என்று அவாவுறுபவர்களுக்கு இந்தப் படம் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். ஆனந்த ரமணனுக்கும் ஏனைய கலைஞர்களுக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

**வதிரி இரா ஸ்ரீகரன்**

# இனப்பிரச்சினை தீர்வில் இரு தரப்பும் ஜாக்கிரதை!



ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கும் இன்றைய நிலையில், பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய கட்சிகள், குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தீர்மானங்களை அறிவித்த வண்ணம் இருக்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, மலையக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் அவற்றின் தீர்மானத்தை ஏற்கனவே அறிவித்து விட்டன.

ஆனால், வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகள் குழுக்களைப் பொறுத்தவரை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிப்பதென்ற நிலைப்பாட்டை எடுத்தவர்கள் தவிர, மற்றைய கட்சிகள் இன்னமும் முடிவெடுக்கவில்லை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் ஒரு தீர்மானத்தை அறிவிக்கவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நிலைப்பாடொன்றை எடுப்பதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் சில தினங்களாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தன. சில இணக்கப்பாடுகள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இது இவ்வாறிருக்க, இத்தடவை ஜனாதிபதித் தேர்தல் பெரும்பான்மையினத்தவர்களான சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை கூடுதல் பட்சம் பெறுவதில் இரு பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலான போட்டியாகவே இருக்கப் போகிறது என்பதே அவதானிகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது. சிங்கள பௌத்தர்கள் மத்தியில் பேராதரவைக் கொண்டவராக கோத்தபாய நோக்கப்படுகின்ற அதேவேளை, சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை கவர்வதில் அவருடன் நெருக்கமாக போட்டிபோடக் கூடிய தகுதி கொண்டவராக சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியினரால் நம்பப்படுகிறார்.

தென்னிலங்கை அரசியலில் பெரும்பான்மை இனவாதம் கடுமையாக முனைப்படைந்ததன் விளைவான ஒரு தோற்றப்பாடே சிங்கள பௌத்தர்களின் வாக்குகளுக்கான இந்த பலப்பரீட்சை! இரு பிரதான வேட்பாளர்களும் சிறுபான்மையின மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான எந்தவொரு முயற்சி தொடர்பிலும் உன்னிப்பான கவனம் செலுத்துவது சாத்தியமில்லை. இத்தகைய பின்னணியிலேயே, தமிழ் அரசியல் கட்சிகள், குழுக்களின் மத்தியில் உள்ள பல பிரிவினரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை குறித்து முன்னெடுக்கின்ற அரசியல் விவாதத்தை நோக்க வேண்டியிருக்கிறது.

சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகளை இதுகாலவரையில் கையாண்ட முறை காரணமாக ராஜபக்ஷக்களும் அவர்களது புதிய அரசியல் கட்சியான பொதுஜன பெரமுனவும் தமிழ்,முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும்பாலும் ஆதரவு இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவைப் பொறுத்தவரையில், ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள பௌத்தர்கள் மத்தியில் இழந்து போன செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அரசியல் தலைவர் என்ற வகையில் அவரும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விவகாரங்களில் ஜாக்கிரதையுடனேயே செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அதிகாரப் பரவலாக்கல், தேர்தல் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இரு பிரதான வேட்பாளர்களுமே தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகள் குறித்து தெளிவான வாக்குறுதிகளை வழங்க முன்வரப் போவதில்லை. சகல வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திய பிறகே தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு அணுக வேண்டும் என்பது பற்றிய தங்கள் தீர்மானத்தை அறிவிக்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் கூறியிருந்தது.

தேர்தலை முற்றாக தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தும் ஒரு பிரிவினரால் முன்வைக்கப்படுகிறது. தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் ஒருமித்த முடிவுக்கு வருவது பெரும்பாலும் சாத்தியமில்லை என்ற போதிலும், முக்கியமான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தமிழ் மக்கள் சார்பில் முன்வைப்பதற்கான கோரிக்கைகள் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தமிழ்க் கட்சிகள் இணக்கப்பாட்டுக்கு வந்ததாகக் கூறப்பட்டது. பிரதான வேட்பாளர் எவருமே தமிழ் அரசியல் கட்சிகளினால் முன்வைக் கப்படக் கூடிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு தமிழர்களின் வாக்குகளைப் பெற முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடியதாக தென்னிலங்கையின் அரசியல் நிலவரம் இல்லை.

# ஈரப்பதம்



அன்பான சங்குநாத வாசகர்களுக்கு உங்கள் அருமையான ஜிம்மிக் குட்டியின் இனிய ஞாயிறு காலை வணக்கங்கள் உரித்தாகட்டும். ம்...ஐப்பசி மாதமும் தமிழுக்குப் பிறந்து விட்டது. இது மழையின் காலம். மாரி காலத்தில் முதியவர்கள், நாட்பட்ட நோயாளிகள் எல்லாரும் மரணமாகும் காலம். என்ன யோசிக்கிறியள். அவை எல்லாம் நோயால் சாகுறேல்லை. குளிரும் ஈரலிப்பான சூழலின் சுற்றாடலில் வாழ்வதும் ஒரு காரணமாம். எனக்கென்னப்பா தெரியும். ஏதோ பெரியவர் கதைச்சதைக் சொல்லுறன். அதைவிட உந்த விசயங்க எல்லாம் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அறிவியல் விசயம். ம்...எனக்கென்ன விளங்கப்போகுது. கொட்டில் வீடுகளிலையெல்லாம் வருத்தம் அடிக்கடி வாறதைப் பற்றி பாலாண்ணை, சின்னாம்பியண்ணை ஆக்கள் ஏதோ கதைக்க வாறம் எண்டு சொன்னவர்கள். பாத்தியளே நான் சொன்னன். அவையும் வருகினம். கங்கா டீச்சரும் நிற்கிறா தானே. பெரிய ஆய்வே நடக்கப் போகுது. ம்... ஆற அமர இருந்து கேப்பம். பெரியவர் அடிக்கடி சொல் லுறவர் “கற்றிலனாயினும் கேட்க” என்று உங்களுக்கு விளங்குதுதானே. இது பாமரனுக்குச் சொன்ன விசயம் தான். மனசாலை நடக்கிற மனிதனைவிட காலாலை நடக்கிற கால்நடைகளுக்கும் இது பொருந்தும். சரி...சரி எல்லாரும் கூடிட்டினம். ஆராய்ச்சி மாநாடு ஆரம்பமாகப் போகுது. போனுகளை ரிவியளை நிப்பாட்டிப் போட்டு கவனமாக் கேளுங்கோ. பாலாண்ணை தான் தொடங்கிறார்...

ஏன் சேர் இந்த முகாம்களிலை வீட்டுத் திட்டக் குடியேற்றங்களிலை எல்லாம் குழந்தை குஞ்சுகளுக்கு வயது போனவைக்கு எல்லாம் ஒரே சளியும் முட்டும் காய்ச்சலும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கு சேர். வீடும் காணாது, கழிப்பறைகளும் சரியில்லை, அரைவாசிப்பேரும் வெளியிடங்களுக்குப் போகினம். முன்பைவிட இப்ப வீட்டிலையே கழிப்பறைகள் கட்டினாலும் பழக்க தோசத்திலை பெரிசுகள் எல்லாம் வெட்டைக்குத்தான் சுருட்டோடை போகினம். எவ்வளவு சொன்னாலும் கேட்கினமில்லை சேர். ஒரே தலையிடியாக் கிடக்கு.

பெரியவர் தலையாட்டுறார் ம்...நாங்கள் தான் அப்பிடி எண்டால் இந்த மனிசரும் இப்பிடியே.ம்... அடிப்படையிலை மனிதரும் விலங்குதான். ம்... பெரியவர் தொடங்கி விட்டார். கேப்பம். ஓமோம் பாலா... நீ சொன்ன காரணங்களுக்கு அப்பால் ஒரு பெரிய காரணம் இருக்குது மகன். கொட்டில் வீடுகளிலை மட்டுமில்லை கல்வீடுகளில் கூட இது நடக்குது. அது என்ன தெரியுமோ ஈரலிப்பிலை உயிர் வாழுற, பெருகிக்கொண்டு போற நுண்ணங்கிகள் காற்றோட்டம் குறைவாகி இருக்கிற வீடுகளுக்குள்ளை வாழுறதுக்கு நாங்கள் தான் வெற்றிலை வைத்து அழைக்கிறம். வெயில் இல்லை. தொடர் மழை அப்படி இருக்கிற கால கட்டத்திலை ஈர உடைகளை வீட்டுக்குள்ளை காயப் போடுறம். ஸ்கிறீனில், ஜன்னலில், கதவில் எண்டு காயப்போடுறம். நாங்களும் அதுக்குள்ளை தான் தூங்கிறம்.

ஈரத்துணிகளிலை அந்த நுண்ணங்கிகள் ஓடி வந்து ஒட்டிக்கொள்ளும். துணிகளிலை கூட கெட்ட மணமும் வீசும். இது எல்லாத்தையும்விட இந்த பக்றீரியா பூஞ்சை எல்லாம் மனிதனின் நோய் எதிர்ப்பு மண்டலத்தையே சீர்குலைத்து பலவீனமான நிலையை ஏற்படுத்தும். சுவாசத்துடன் கூட அவை கலந்து உள்நுழைந்து சுவாச நோய்களை ஏற்படுத்தும். இந்த நுண்ணுயிர்களின் தாக்கத்தை எதிர்த்துப் போராட சாதாரணமானவர்களாலேயே முடியாது. அப்படி இருக்க ஆஸ்துமா நோயால பீடிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே எதிர்ப்புத் திறன் குறைந்த நிலையிலை இந்தப் போராட்டத்தை நடத்த முடியுமோ...ம்...நோயும் அதிகரிக்கும். பலவீனமான நிலையும் தொடரும்...” பெரியவர் மௌனமாகிறார். சின்னாம்பி அண்ணை தொடருறார்.

“அதுசரி அண்ணை எல்லா வீடுகளிலையும் இது நடந்து கொண்டு தானே இருக்கு. வெயில் எறிக்க வெளியிலை போடுறதும் மழை தூற உள்ளுக்குப் போடுறதும்...” சின்னாம்பி அண்ணை முடிக்காமல் இழுக்கிறார். பெரியவர் கையால தடுத்துப் போட்டு விளக்கம் கொடுக்கிறார்...

“விளங்குது சின்னாம்பி. வீட்டுத் தாவாரத்திலை கொடி கட்டிப் போடலாம். வீட்டுக்குள்ளையும் யாரும் படுத்துறங்காத அறையிலை போடலாம். ஆனால் காற்றோட்டம் நிறைய இருக்க வேணும். ஆனால் ஏழைகளுக்கு இது கஷ்டம். மாட்டுக்கே கொட்டில் போட முடியாததை துணி காய வைக்க விறாந்தை இருக்க முடியுமே...ம்...வெயில் படுற இடத்திலை உலர விட்டிட்டுத் தாவாரத்திலை போடுங்கோப்பா. நோய் எதிர்ப்புத்திறன் குறையாமல் பாத்துக் கொள்ளுங்கோ. மனசிலை ஈரம் இருக்க வேணும்.ஆனால் வாழுற வீட்டிலை ஈரலிப்பு இல்லாமல் நல்ல காற்றோட்டம் உலர்ந்த தரை இருக்கும்படியாப் பார்த்துக்கொள்ளுங்கோப்பா...” ம்...ஈர மண்ணில பயிர் விளையும். ஈர நெஞ்சில் அன்பு வாழும்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாதகாணிக்கை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்



ஆடிய ஆட்டம் என்ன பேசிய வார்த்தை என்ன?
தேடிய செல்வம் என்ன திரண்டதோர் சுற்றம் என்ன?
கூடு விட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன?

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?

ஆடும் வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம்
ஆடும் வரை ஆட்டம் ஆயிரத்தில் நாட்டம்
கூடி வரும் கூட்டம் கொள்ளி வரை வருமா?

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
கடைசி வரை யாரோ?

உ...உ ஆயி ஆரிரோ உ...உ ஆயி ஆரிரோ
ஆரிரோ ஆரிரோ ஆரிரோ ஆரிரோ
ஆரிரோ ஆரிரோ ஆரிரோ

தொட்டிலுக்கு அன்னை கட்டிலுக்குக் கன்னி
தொட்டிலுக்கு அன்னை கட்டிலுக்குக் கன்னி
பட்டினிக்குத் தீனி கெட்ட பின்பு ஞானி

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
கடைசி வரை யாரோ?

சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான்
வந்தவனைக் கேட்டால் சென்று விடு என்பான்
சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான்
வந்தவனைக் கேட்டால் சென்று விடு என்பான்
சென்று விடு என்பான்

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
கடைசி வரை யாரோ?

விட்டு விடும் ஆவி பட்டு விடும் மேனி
சுட்டு விடும் நெருப்பு சூனியத்தில் நிலைப்பு
சூனியத்தில் நிலைப்பு

வீடு வரை உறவு வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை கடைசி வரை யாரோ?
கடைசி வரை யாரோ?

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 203

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுகுறிஞ்சா பாவனையால் நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் அனுகூலங்கள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பரந்துபட்ட ஒரு மருத்துவ ஆய்வு

சிறுகுறிஞ்சா தாவரக் குடும்பம் *"Asclapiadaceae"* சேர்ந்த இந்தியா, இலங்கை, மலேசியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளின் உலர் வலயு காடுகளில் செழித்து வளரும் கொடிவகையை சேர்ந்த ஒரு தாவரமாகும்.

இது யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் நீரிழிவு நோயாளர்களால் மருத்துவ தேவைக்காக வளர்க்கப்பட்டு வருவதுடன் நீண்டகாலமாக இலங்கையில் தமிழ், சிங்கள சமூகத்தினால் இலைக்கறி வகையாக பயன்படுத்தப்படுகின்றது. பிரதானமாக நீரிழிவு நோயாளர்களினால் வறையாகவோ, சம்பலாகவோ அல்லது பச்சையாக மென்று விழுங்கவோ பயன்படுத்துகின்றனர்.

இம் மூலிகை தொடர்பாக பல்வேறு அபிப்பிராயங்கள் மக்கள் மத்தியில் இருந்தாலும் அதன் நன்மையான விளைவுகள் பற்றியோ பாதுகாப்புத்தன்மை பற்றியோ சரியானதும் போதுமானதுமான அறிவு எம்மத்தியில் இல்லை. சிறுகுறிஞ்சா இலை இலங்கையில் மிக நீண்டகாலமாக இலைக்கறி வகையாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஆதாரமாக 1846-1850 இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் காலனித்துவ ஆட்சியின் 5 ஆம் காலனித்துவ செயலராக இருந்த "Sir James Emerson Tennent" எழுதிய இலங்கை பற்றிய நூலில் சிறுகுறிஞ்சா இலையானது அவிக்கப்பட்டு மக்களினால் உணவாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறந்த மருத்துவ குணாதிசயங்களைக் கொண்ட சிறுகுறிஞ்சா ஆசியா பகுதியில் மிக நீண்டகாலமாக மருத்துவத் துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு மூலிகையாகும்.

2000 ஆண்டுகளுக்கு மேலாக சித்த வைத்தியர்கள் நீரிழிவு நோயாளர்களுக்கான மருந்து உற்பத்திக்கு சிறுகுறிஞ்சாவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போதும் இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்துள்ள அரச சித்த, ஆயுர்வேத வைத்திய நிலையங்களில் நீரிழிவு நோய்க்கான மருந்தாக சிறுகுறிஞ்சாவினை பிரதான ஆக்கப்பொருளாகக் கொண்ட மதுமேகசூரணமே பயன்படுத்தப்படுகின்றது. சித்தமருத்துவத் துறையால் மருந்தாக பல நூறு வருடங்களாக பயன்படுத்தப்படும் சிறுகுறிஞ்சா நீரிழிவு நோயாளிகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பான மருத்துவ ரீதியான ஆய்வுகள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1930 ஆம் ஆண்டளவில் விலங்குகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளில் சிறுகுறிஞ்சா குருதியில் குழுக்கோசின் அளவைக் குறைப்பதுடன் இருதயத்தையும் குருதிச்சுற்றோட்டத் தொகுதியையும் தூண்டி தொழிற்பட வைப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறுகுறிஞ்சா சம்பந்தமாக நடத்தப்பட்ட பல ஆய்வுகளில் இது குருதியில் குளுக்கோசின் அளவைக் குறைப்பதுடன் கொலஸ்ரோலின் அளவையும் உடல் நிறையையும் குறைப்பதாக காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுகுறிஞ்சாவும் நீரிழிவு நோயும் சம்பந்தப்பட்டதாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளில் நல்ல பல விளைவுகள் கிடைக்கப் பெற்றிருந்தாலும் இவ் ஆய்வுகள் அனைத்தும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்படவில்லை.



"Bio Tec International" நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் "ஜிம்டயபற்றிக் ரீ" சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் என்பன ஆயுர்வேத திணைக்களத்தினால் நீரிழிவு நோயாளர்களுக்கான ஒரு மூலிகைத்தேநீராக அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைவாக ஒரு மருத்துவ ஆய்வு யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு மையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வைத்தியதுறையை சார்ந்த அனுபவம் வாய்ந்த மூத்த நிபுணர்களின் குழாம் ஒன்றினால் ஆரம்பிக்கப்படவுள்ள இவ் ஆய்வில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் வைத்திய கலாநிதி.சி.சிவன்சுதன் (பொதுவைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), வைத்திய கலாநிதி திருமதி. வை.கேசவன் (இரசாயன நோயியல் நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை) மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த உயிர் இரசாயனவியல் துறையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் பீடாதிபதியுமாகிய கலாநிதி.ச.பாலகுமார், மருந்தியல் துறையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய வைத்திய கலாநிதி திருமதி. தி.சு.நவரட்ணராஜா, சமுதாய மருத்துவத்துறையின் மூத்த விரிவுரையாளர் வைத்திய கலாநிதி. இ.சுரேந்திரகுமாரன் மற்றும் புத்தூர் ஆரம்ப வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கார்த்திகேசு குலநாயகம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இவ் ஆய்விற்கான செலவினமாக பல மில்லியன் ரூபாவினை இலங்கையில் அனைத்துத் துறைகளிலும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை ஊக்குவித்துவரும் ஸ்தாபனங்களில் ஒன்றாகிய தேசிய ஆராய்ச்சி சபை (National Research Council-NRC) வழங்கவுள்ளது.

சிறுகுறிஞ்சா சித்த மருத்துவத் துறையால் மருந்தாக்கத்துக்கான ஒரு மூலிகையாக மிக நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்தபோதும் ஒரு உணவுப்பொருளாக ஒழுங்காக ஒவ்வொரு நாளும் பயன்படுத்தப்படுவதில் உள்ள நன்மையான மற்றும் தீமையான விளைவுகள் பற்றிய ஓர் ஆய்வாக இது அமையவுள்ளது. முடிவுகள் நன்மையானவையாக அமையுமாயின் நீரிழிவு நோயாளர்கள் அனைவரையும் சிறு குறிஞ்சாவைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்க இது உதவும். வீடுகளில் தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்துவதன் மூலம் நீரிழிவு நோய்க்கான மருந்துச் செலவினை பெருமளவில் குறைக்க உதவும். தீமையாக அமையுமாயின் உணவுப்பொருளாக இதனைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு மக்களுக்கு எடுத்துக் கூற உதவும்.

யாழ்ப்பாண ஆங்கில மருத்துவத்துறையின் வரலாற்றில் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகளில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைவாக அமைந்த முதலாவது பெரிய ஆய்வாக இது கொள்ளப்படலாம். எழுந்தமானமாக தெரிவு செய்யப்பட்ட, வாய்மூலம் நீரிழிவு நோய்க்கான மருந்துகளை எடுக்கும் வகை 2 இனைச் சேர்ந்த நீரிழிவு நோயாளர்கள், ஆய்வு சம்பந்தமான சகல விடயங்களும் விளங்கப்படுத்தப்பட்டு, ஆய்வின் நன்மை, தீமைகள் எடுத்துக் கூறப்பட்டு, அவர்களின் பூரண சம்மதத்துடன் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அவர்களுக்கு அவர்களின் வழமையான மருந்துகளுக்கு மேலதிகமாக சிறுகுறிஞ்சாவிலிருந்து தயாரிக்கப்பட்ட தேநீர் ஒரு நாளுக்கு ஒரு கோப்பை வீதம் 3 மாதங்களுக்கு வழங்கப்படுவதுடன் அவர்கள் மிகவும் கவனமாக 6 மாத காலத்துக்கு அவதானிக்கப்படுவார்கள். நாள்தோறும் அருந்தப்படும் இத் தேநீரானது சிறுகுறிஞ்சாவினை வறையாகவோ அல்லது சம்பலாகவோ உண்ணும் போது ஒருவர் உட்கொள்ளும் சிறுகுறிஞ்சாவின் அளவிலும் பார்க்க மிக மிகக் குறைந்த அளவானதும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரமும் புத்தகங்களில் இருந்து பெறப்பட்ட விபரங்கள் மூலமாகவும் தீர்மானிக்கப்பட்ட உலர் நிறையுடைய இலையில் இருந்து தயாரிக்கப்படும்.

நோயாளர்களின் குருதியில் குழுக்கோசின் அளவு, அவர்கள் வழமையாகப் பயன்படுத்தும் மருந்துகளில் ஏற்படும் அளவுமாற்றம், குருதியில் கொலஸ்ரோலின் அளவு, நோயாளர்களின் உடல் நிறை என்பவற்றுடன் குருதியமுக்கம் என்பன ஆராயப்படவுள்ளன. இவ் ஆய்வின் முடிவுகள் நன்மையானவையாக அமையுமாயின் அது எமது மக்களுக்கு ஒருவரப்பிரசாதமாக அமைவதுடன் இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்திலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் ஆய்வு சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து கீழ்காணும் இணையத் தள முகவரிகளில் பார்வையிடலாம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) இணையத்தளத்தில் - **http://apps.who.int/trialsearch/Trial2.aspx?TrialID=SLCTR/2016/007**

Srilanka Clinical Trial Registry இன் இணையத்தளத்தில் - **https://slctr.lk/trials/slctr-2016-007**

**ஆய்வுக்குழுவின் சார்பாக**
**வைத்தியர் கார்த்திகேசு குலநாயகம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

# பவுண்டரிகள் அடிப்பது மட்டும்தான் கிரிக்கெட்டா



நடந்து முடிந்த உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணி மகுடம் சூடியது. கிரிக்கெட்டை உலகுக்கு அறிமுகப்படுத்திய வர்களுக்கு உலகக்கோப்பை என்பது எட்டாக்கனியாகவே இருந்தது. இந்த உலகக்கோப்பை தொடரில் இங்கிலாந்து அணி அந்த ஏக்கத்தை தீர்த்துக்கொண்டது. நடுவரின் தவறான தீர்ப்பு, ஐ.சி.சியின் முரணான விதிமுறைகளால் இந்த வெற்றி இங்கிலாந்து வசம் சென்றது. இதில் இங்கிலாந்து அணியின் தவறு என்று எதுவும் இல்லை. இங்கிலாந்து இந்த வெற்றிக்குத் தகுதியான அணியாகத்தான் இருந்தது. இருப்பினும் எதிரில் களத்தில் இருந்த நியூசிலாந்தும் இங்கிலாந்துக்கு எந்த விதத்திலும் சளைத்ததாக இல்லை. பென் ஸ்டோக்ஸின் போராட்டமே இங்கிலாந்து கைகளுக்கு கோப்பை செல்வதற்கு காரணமாக இருந்தது என ரசிகர்கள் கொண்டாடினர். அதேவேளையில் இங்கிலாந்தின் வெற்றியைத் தடுப்பதற்கான வியூகத்தை வகுத்த கேன் வில்லியம்ஸனும் கொண்டாடப்பட்டார்.

இந்தப்போட்டியில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 242 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 242 ஓட்டங்களை எடுத்ததால் போட்டி சமனில் முடிந்தது. இதையடுத்து ஐ.சி.சியின் விதிமுறையின் படி சுப்பர் ஓவர் முறை கொண்டு வரப்பட்டது. இதிலும் இரண்டு அணிகளும் 15 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் பரபரப்பு அடைந்தது. சில உள்ளூர் தொடர்களிலே போட்டியின் முடிவை தெரிந்துகொள்ள இரண்டு சுப்பர் ஓவர் சென்றுள்ளது. இரண்டாவது சுப்பர் ஓவர் வைக்கப்படும் என ரசிகர்கள் காத்திருந்தனர். ஆனால், பவுண்டரிகள் அடிப்படையில் வெற்றியாளரை அறிவித்தது. உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி 22 பவுண்டரிகளும் நியூசிலாந்து 17 பவுண்டரிகளும் அடித்திருந்தன. இதன் அடிப்படையில் இங்கிலாந்து வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஐ.சி.சியின் இந்த விதிமுறை கடும் விமர்சனத்துக்குள்ளானது. முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், ரசிகர்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

டுபாயில் அண்மையில் நடந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இதையடுத்து ஐ.சி.சி. வெளியிட்ட அறிவிப்பில், "சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நடத்தும் போட்டிகளில் இனிமேல் ஆட்டம் சமனில் முடிந்தால் சுப்பர் ஓவர் முறையைக் கொண்டு மட்டுமே முடிவுகள் அறியப்படும். பவுண்டரிகள் அடிப்படையிலான விதிமுறைகள் நீக்கப்படுகின்றன. லீக் போட்டிகளில் சுப்பர் ஓவர்கள் சமனில் முடிந்தால் போட்டி சமனில் முடிந்ததாகவே எடுத்துக்கொள்ளப்படும். அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டியில் சுப்பர் ஓவரும் சமனில் முடிந்தால், முடிவு கிடைக்கும் வரை சுப்பர் ஓவர் பயன்படுத்தப்படும். அதாவது எந்த அணி அதிகமான ஓட்டங்களை எடுத்து வெற்றி பெறுகிறதோ அது வரை சுப்பர் ஓவர் முறைதான் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.சி.சியின் இந்த அறிவிப்பு "மிகவும் தாமதமான முடிவு" என முன்னாள் வீரர் கிரேக் மெக்மிலன் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மேலும், ஐ.சி.சியின் மற்ற விதிகளை எப்போது திருத்தப்போகிறீர்கள் எனக் கேட்டுள்ளார். நியூசிலாந்து வீரர் நீஷம் தனது டுவிட்டர் பதிவில், "உங்கள் அடுத்த திட்டம் என்ன? சிறந்த பைனாகுலர் வாங்கி டைட்டானிக் கப்பலில் ஐஸ் இருப்பதை கண்டுபிடிப்பது தானே" எனப் பதிவிட்டுள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட்டின் தலைமை நிர்வாகி டேவிட் ஒயிட் பேசுகையில், "எதிர்காலத்தில் உலகக்கோப்பை போட்டிகள் சமனில் முடியும் போது களத்தில் முடிவெடுக்கலாம். கடந்த காலத்தை நம்மால் மாற்ற முடியாது. நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். இந்த விவகாரத்தில் ஐ.சி.சி. ஒரு நல்ல தீர்வைக் கொண்டு வந்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# ராசியில்லாத ஆசியா



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தோல்வியைச் சந்தித்துத் தொடரை இழந்தது. இந்த நிலையில், இறுதி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் இந்திய அணியின் தலைவர் ஹோலியே டாஸை வென்றார். இரண்டு போட்டிகளிலும் முதலில் பட்டிங்கைத் தேர்வு செய்த இந்திய அணி முதல் இன்னிங்ஸிலேயே நல்ல ,ஸ்கோரை எட்டியது. ஆனால், அடுத்துக் களமிறங்கிய தென்னாபிரிக்காவை இந்திய அணி எளிதில் வீழ்த்தியது.

இதனால் இந்திய அணியின் வெற்றிக்கு டாஸ் ஒரு முக்கிய பங்காகக் கூறப்பட்டது. ஆனால், தென்னாபிரிக்க அணியின் தலைவர் டுப்ளெஸ்ஸிஸ் ஆசிய மண்ணில் தொடர்ச்சியாக டாஸ் அதிர்ஷ்டம் இல்லாமல் இருக்கிறார். அவர், ஆசிய மண்ணில் கடைசியாக விளையாடிய 9 போட்டிகளிலும் தொடர்ச்சியாக டாஸை இழந்துள்ளார்.

கடைசி ஆட்டத்துக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய டுப்ளெஸ்ஸிஸ், "முதலாவது இன்னிங்ஸில் நல்ல ஸ்கோரை எட்டுவது என்பது மிக முக்கியமான விடயம். அதை மட்டும் செய்துவிட்டால் போதும். மற்றதெல்லாம் தானாக நடக்கும்" என்றார்.

இந்த நிலையில், தனக்கு டாஸ் ராசி இல்லை என்பதால், இறுதிப் போட்டிக்கான டாஸை போட அணியில் இருக்கும் வேறு வீரரை அனுப்பும் யோசனையில் டுப்ளெஸ்ஸிஸ் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று பொசிட்டிவ் மன நிலையுடன் நாடு திரும்ப வேண்டும் என்ற முடிவில் இருக்கிறாராம் டுப்ளெஸ்ஸிஸ். இதனால்தான் டாஸுக்கு இந்த முடிவை அவர் எடுத்துள்ளாராம்.

மார்க்ராம் மற்றும் கேசவ் மகராஜ் ஆகிய வீரர்கள் காயம் காரணமாக கடைசிப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து விலகியுள்ளது அந்த அணிக்குப் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் தொடங்கிய ஆட்டத்தில் இந்திய அணியிலும் சில மாற்றங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தன்னம்பிக்கையின் உச்சம்...!!!

# "லிசி வெலாஸ்குவேஸ்"

அமெரிக்காவில் பிறந்தார். இப்போது 30 வயது. அவர் ஒரு அரிய மரபணு நோய்க்குறியுடன் பிறந்தார். உலகில் 3 பேருக்கு மட்டுமே இந்த நோய்க்குறி உள்ளது. லிசி அவர்களில் ஒருவர்.

இந்த நோய்க்குறி காரணமாக, லிசி எடை அதிகரிக்க முடியாது. அவளுடைய உடலில் கொழுப்பை சேமிக்க முடியாது. அவள் உடலில் 0% கொழுப்பு உள்ளது. இயல்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க அவள் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் சாப்பிட வேண்டும். அவரது எடை 29 கிலோ மேலும் வலது கண்ணில் பார்வைக் குறைபாடு உடையவள்.

அவரது குழந்தை பருவத்திலிருந்தே மக்கள் அவளை வித்தியாசமாகப் பார்த்தார்கள். அவளுடைய பள்ளியில், பல மாணவர்கள் அவளுடன் நட்பை விரும்பவில்லை. அவள் கவலைப்படவில்லை.

அவளுக்கு 20 வயதாக இருந்த போது, ஒரு நாள் அவள் யூப்டியூப்பைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு வீடியோவைப் பார்க்கும்போது இடது பக்கத்தில் தனது புகைப்படத்தை ஒரு வீடியோவில் சிறுபடமாக பார்த்தார். அது அவளுடைய வீடியோ. அவள் அந்த வீடியோவைத் திறந்தாள்.

அந்த வீடியோவின் தலைப்பு,

"உலகின் அசிங்கமான பெண்"

அந்த வீடியோவை ஏற்கனவே நான்கு மில்லியன் மக்கள் பார்த்து தங்களின் கருத்துகளைப் பதிவு செய்திருந்தனர்.

சில கருத்துக்கள்

"லிசி தயவுசெய்து, இந்த உலகத்திற்கு ஒரு உதவி செய்யுங்கள், உங்கள் தலையில் துப்பாக்கியை வைத்து உங்களை நீங்களே கொல்லுங்கள்."

"கடவுளே !!! என்ன ஒரு அசிங்கமான பேய் !!!"

"அவளுடைய பெற்றோர் அவளை ஏன் கொல்லவில்லை ?!"

"அவளது முகத்தை பார்க்கும் பொழுது வாந்தி வருகிறது"

"நான் அவளை தெருவில் பார்த்தால், பயத்தில் நான் இறந்துவிடுவேன்"

"அவள் ஒரு அருவருப்பு"

"அவள் பிசாசுகளுக்கு பிசாசு".

ஆயிரக்கணக்கான மிருகத்தனமான மற்றும் இரக்கமற்ற கருத்துக்களை பதிவு செய்து இருந்தனர். லிசி வெலாஸ்குவேஸ் அந்தக் கருத்துகள் அனைத்தையும் படித்து அழுதார். அவர் பல மருத்துவமனைகளுக்குச் சென்றார். அவர் நூற்றுக்கணக்கான மருத்துவர்களை சந்தித்தார். ஆனால் அவளுடைய நோய்க்கு மருந்து இல்லை. அவளால் தன் உடலை மாற்ற முடியவில்லை.

பின்னர் இந்த உலகிற்கு தான் யாரென்று நிரூபிக்க முடிவு செய்தாள். பல தன்னம்பிக்கை புத்தகங்களைப் படித்தார். அவள் படிப்படியாக மனம் மாறினாள். அவள் கவலைப்படுவதை நிறுத்தி மகிழ்ச்சியாக இருக்க ஆரம்பித்தாள். மிகுந்த நம்பிக்கையுடன்,

சொந்த யூப்டியூப் சேனலைத் தொடங்கினார். அவர் தனது தன்னம்பிக்கை வீடியோக்களை பதிவிடத் தொடங்கினார். அவரது யூப்டியூப் சேனலுக்கு 8,00,000 சந்தாதாரர்கள் கிடைத்தனர். அவர் உலகின் சிறந்த யூப்டியூப்களில் ஒருவரானார்.

மேலும் 4 புத்தகங்களை அவர் எழுதினார். அந்த புத்தகங்கள் அமெ



ரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தின. பல பல்கலைக்கழகங்களும் நிறுவனங்களும் அவரை சொற்பொழிவு ஆற்ற அழைத்தன.

இப்போது அவர் அமெரிக்காவில் பிரபலமானவர் மற்றும் மில்லியனர். தற்போது அவளிடம் எல்லாம் இருக்கிறது. அவளுக்கு பணம், புகழ், மகிழ்ச்சி மற்றும் அன்பான, அழகான காதலன் இருக்கிறான்.

அவர் தனது உரைகளை வழங்க பல நாடுகளுக்கு செல்கிறார். அவமானங்களை எவ்வாறு புறக்கணிப்பது ? எப்படி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் ? எப்படி வெற்றி பெறுவது ? போன்றவற்றைப் பற்றி அவர் உரைகளை வழங்குகிறார் !!!

ஸ்பெயினில் அவரது உரை.பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால்,

அனைவருக்கும் வணக்கம் ! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் !! நம் அனைவருக்கும் சொந்த பயணம் இருக்கிறது. எனது பயணம் பல ஆண்டுகளுக்கு முன்பு டெக்சாஸில் தொடங்கியது. நமது பயணம் நேர்மறையானதாக அல்லது எதிர்மறையானதாக இருக்கலாம். ஆனால், நாம் அனைவரும் ஒரு காரணத்திற்காக இந்த பூமியில் பிறந்து உள்ளோம். மக்கள் என்னை அசிங்கமான பெண் என்று அழைத்தனர். அவர்களை நான் பொருட்படுத்தவில்லை. ஏனென்றால், நான் எனது பயணத்தையும், நோக்கத்தையும் நம்புகிறேன்.

நீங்கள் இப்போதே முடிவு செய்யுங்கள். நான் தைரியமாக இருக்கிறேன். நான் எனது இலட்சியத்தை நோக்கி பயணிக்கின்றேன். நான் நிச்சயம் வெற்றி பெறுவேன். நீங்கள் செய்ய வேண்டியது,

முடியும் ! என்று முதலில் உங்களை நம்புங்கள்.

அவ்வளவுதாங்க !!

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1863

### துவாரகி

நீ நீயாக இல்லாதவரை
பல துன்பங்கள்
உன்னை
துரத்திக்கொண்டு தான்
இருக்கும்...

### மிதுலா




### சங்கவி





### கருணா

தோல்விகளால் அடிபட்டால்
உடனே எழுந்து விடு
இல்லையேல்
இந்த உலகம் உன்னை
புதைத்து விடும்...

### துரை

எதிர் காலத்தில் நிம்மதியாக
இருப்பேன் என்று நினைத்து
நிகழ்காலத்தை
தொலைத்துவிடாதீர்கள்...

### ரமேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


NEW
Velvet
சந்தனம் மற்றும் மஞ்சள்
பிரகாசமான மென்மைக்கு
NEW
Velvet
Radiant Softness
Sandalwood & Turmeric
HYDROSOFT TECHNOLOGY
100 g
உங்கள் சருமத்திற்கு பிரகாசமான மென்மையைத் தரும் வெல்வட் சந்தனம் மற்றும் மஞ்சள், விஷேடமாக ஹயிட்ரோசொ.ஃப்ட் டெக்னொலஜியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இது சருமத்தின் ஈரப்பதனை தக்கவைத்து மென்மையையும் பிரகாசத்தையும் தரும்.
சருமத்திற்கு
உகந்தது என
ரூ. 65/-
HEMAS